Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් ஜன. 26 - பெப். 01, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 647

## வழுக்கு மரம் ஏறுகிறார் எரிக் சொல்ஹெய்ம்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## முடங்கிப் போகும் கண்காணிப்புப் பணி!

-நேரடிப் பேட்டி

## வீட்டுக்குள் துஷ்பிரயோகம்- சீரழியும் சிறுமிகள்

விரிவான பார்வை




## ஆதி VS பரமசிவன்

இரசிகர்களின் கருத்துக்கள்

## 'தம்பி'யை நம்பியிருக்கும் மாதவன்

# ஆன்மீகம்



## நல்வாழ்வு வாழக் கற்போம்

*எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.*
*எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது.*
*எது நடக்க இருக்கின்றதோ அது நன்றாகவே நடக்கும்.*

பகவான் விஷ்ணுவின் வேத வாக்குகள் எமது உள்ளத்திற்கு நிம்மதியைக் கொடுத்தாலும் பூர்வ ஜென்ம புண்ணியங்கள் எம்மை வாழ வைக்கின்றன. ஒருவன் தனது வாழ்வில் செய்கின்ற தர்மமே அவனை வாழ வைக்கின்றது. ஆனால் மனிதன் மாயைகளினால் தன் னிலை மறந்து தீமைகள் செய்ய விழைகின்றான். நமக்கு மேலே ஒரு சக்தி உள்ளதென எண்ணும் பொழுது ஒழுக்கமும் அடக்கமும் கூடி மனிதன் நேர்மையாக வாழ முற்படுகின்றான். தன்னம் பிக்கை தான் வாழ்வின் இரகசியம். உன்னை நீ முழுமையாக நம்பு. ஆன்ம பலமே வாழ்வின் அடிப்படை. ஆன்மீகப் பலத்தால் மட் டுமே இறையன்பைப் பெறலாம். ஆகவே இறைவனிடம் நம்பிக்கை கொண்டு எமது வாழ்வினை புண்ணியம் நிறைந்ததாக, புனிதம் நிறைந் ததாக மாற்றி அமைத்து, நம்பிக்கை கொண்டு வாழ கற்றுக் கொள்வோமாக.

**-சரோஜினி, ராஜகிரிய.**

## கர்த்தர் வருகின்றார்

இதோ சீக்கிரமாக வருகின்றேன்; அவன வனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூடவே வருகின்றது.

(வெளி 22:12)

ஆம் சகோதரரே! நம்முடைய கர்த்தராகிய இயேசு மீண்டும் வரப் போகின்றார். அப்பொழுது உலகில் நியாயம் தீர்க்கும் நியாயாதிபதியாக இராஜாதி இராஜாவாகத்தான் வருவார். அதற்கு முன்னால் ஒரு சில அடையாளங்களை கர்த்தராகிய இயேசு கூறியுள்ளார். யுத்தங்கள், கலகங்கள் ஜனத்திற்கு விரோதமாக ஜனம், பூமி அதிர்ச்சி, பஞ்சங்கள், கொள்ளை நோய் என்பன ஏற்படும் என லூக்கா 21ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நாமும் துன்புறுத்தப்படுவோம் எனவும் கூறியுள்ளார். எனவே இயேசு இராஜாவின் வருகையை எதிர்பார்த்து ஜெபத்தில் விழித்திருப்போமாக.

'ஆண்டவராகிய இயேசுவே வாருங்கள்.'

ஆமென்.

**-சாம் கௌதமி, யாழ்ப்பாணம்.**

## இஸ்லாம் காட்டும் இனிய நெறி

இன்று ஒவ்வொரு தனி மனிதனும், குடும்பமும், ஊரும், சமூகமும், நாடும் பிரச்சினைகளால் சூழப்பட்டு அவதிப்படுவதை நாளும் நாம் அவதானிக்கின்றோம்.

இவ்வாறான எந்தவொரு மாற்றத்திற்கும் ஈடு கொடுத்து மனிதனை சமநிலையில் வைத்திருக்கும் சக்தி இஸ்லாம் மதத்திற்கு மட்டுமே உண்டு.


இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அனைத்து மக்களும் ஒரே சமுதாயமாகக் கருதப்படுகின்றனர். அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகின்றான் :-

மனிதர்களே! நிச்சயமாக உங்களை ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். நீங்கள் ஒருவர் மற்றொருவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களை குடும்பங்களாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் என்று.

ஆம் அல்குர்ஆனில் அவ்வாறு அல்லாஹ் கூறுகின்ற போதனைக்கு நாம் செவிசாய்ப்போமானால் அது சந்தோஷமான சமூக வாழ்விற்கு மட்டுமல்லாது நிம்மதியான ஆத்மீக ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கும். இதுவே இஸ்லாம் காட்டும் இனிய நெறி.

**-எம்.சீ.கலீல், கல்முனை - 05.**

## கவிதைப் போட்டி இல.644



பரிசுக்குரிய கவிதை

### தா(சே)யும்

மங்கிப்போவது
சமாதானம்!
தொங்கி நிற்பது
ஜனநாயகம்!
தவித்து நிற்பது
தாயும் சேயும்!

*ஏ.ஆர். பயாஸ், சிறாஜ் நகர்.*

## கவிதைப் போட்டி இல.647



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 01.02.2006.

கவிதைப் போட்டி இல.647
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அழகு

ஆற்றருவி சலசலக்க
அழகு மூங்கில்
பளபளக்க
ஒற்றைக்கம்பு
ஊஞ்சலிலே
தாயும் சேயும்
ஒய்யாரமாய் ஆடும் அழகு

*பௌசுனா ஏ.ஜலீல், மூதூர் - 7.*

### அச்சம்

புரிந்துணர்வுக்
கயிற்றில்
தொங்கிக் கொண்டிருக்கும்
சமாதானம்
அந்தோ
அறுந்து விழுமோ
யுத்த களத்தில்.....

*க. அல் ஆஸாத், ஏறாவூர் 06.*

### நம்பிக்கை

அமைதியற்ற சூழலால்
அந்தரத்தில் வாழ்க்கை
அதுவும் அறுந்திடுமோ
என்ற வேட்கை
அதனுடனும் அவன்
கையில்
ஓர் நம்பிக்கை

*காத்தநகர் ஹலீம்.*

### யாருக்கு நிவாரணம்

தந்தையும்
மகனும்
தண்ணீரில் சென்றனர்!
தாயும்
பிள்ளையும்
தவித்து நின்றனர்!
ஒன்றுமே
இழக்காத காரோ?
அனர்த்த
நிவாரணம் தின்றனர்?

*ஏ.எம். ரதுமான், சிறாஜ் நகர்.*

### பாசம்

பாசத்தின் தியாகமிது
பாலகனைக் கரைசேர்க்க
பாராறியா வீரமிது
தன் மகனைக் காப்பதற்குத்
தாயவளின் தாரதம்யம்

*சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### வாழ்க்கை

"பூமியாக
பாரம் சுமக்கும்
தாய்
சாமியாக
மடியில் கிடக்கும்
சேய்,
பூமிக்கும் சாமிக்கும்
இடையே மனிதன் ஆடும்
ஊஞ்சல் ஆட்டம் தான்
வாழ்க்கை"

*நா. ஜெயபாலன், பிபிலை.*

### அம்மா

10 மாதம் சுமந்தாய் என்னை
பாரினில் ஒரு தெய்வமாய்
ஆற்றில் நடுவில் சுமக்கிறாய்
அன்பின் அடையாளமாய்
அம்மா!

*மொஹமட் சிப்னாஸ், கல்பிட்டிய.*

### விடியல்

தூக்கனாம் குருவிக்கூடாய்
தொங்கிடும் இந்த ஊஞ்சல்போல்
எங்கள் வாழ்க்கையும் அந்தரத்தில்தானா......!?

*எஸ். சியாத், அட்டாளைச்சேனை - 08.*

### வேண்டாம் யுத்தம்

வறுமையாலும்
சுனாமியாலும்
யுத்தத்தாலும்
மக்களின் வாழ்க்கை
அந்தரத்திலே
இந்நிலையிலே
மீண்டுமோர் யுத்தம்
வேண்டாம்.

*அ.கா.மு.ரிஸ்வின், மூதூர் 01.*

### சனி நீங்க

ஆற்றை விரைவிற் கடந்தால்
குழந்தையின் பிணி நீங்கும்
இனவாதச் சேற்றை
விரைவிற் கடந்தால்
நம் நாட்டின் சனி நீங்கும்

*அ. சந்தியகோ. கண்டி.*

# உங்கள் பக்கம்

## மனிதாபிமானத்தைத் தின்ற தனியார் பேருந்து சேவை!

புத்தளத்திலிருந்து கற்பிட்டிக்குச் சென்ற தனியார் பேருந்து சேவையாளர்கள், பஸ் பிரயாணிகளிடம் மிகவும் கெடுபிடியானதொரு நிலையில் நடந்து கொள்கின்றனர்.

தேவைக்கும் அதிகமாய் கட்டணங்களை அறவிடுவது, பிரயாணிகளை தூஷண வார்த்தைகளினால் ஏசுவது, பெண்ணென்று கூட பாராமல் மரியாதையின்றி தரக்குறைவாய் நடத்துவது, பிரயாணிகளிடம் சில்லறையில்லாவிடின் ஏதோ வேறொரு ஜந்தைப் பார்ப்பதுபோல் பார்ப்பது போன்ற மிகவும் பிரயாணிகளின் மனம் நோகும்படி நடந்து கொள்கின்றனர். இவ்விடயத்தில் இதில் பயணம் செய்யும் பலர் இங்கிதம் கருதி மௌனம் காப்பர்.

அண்மையில் நடந்த சம்பவமிது. பஸ்ஸினில் பிரயாணம் செய்த ஆசிரியை ஒருவர் தவறுதலாய் சில்லறை எடுத்துவர மறந்துவிட்டார். அதனால் தாள்காசை டிக்கட்டரின் கையில் கொடுத்ததுதான் தாமதம், சில்லறை இல்லையென ஏசியவாறே ஆசிரியையின் முகத்திலேயே திரும்ப வீசிவிட்டார் என்றால் பாருங்களேன் இவர்களின் நடத்தையை! இது ஒரு பதம்தான்; இதைப்போல் இன்னும் பலப் பல நாள்தோறும் நடந்தேறுகின்றன.

இவ்வீனத்தனமான செயலினைக் கண்டித்துக் கட்டுப்படுத்த உரியவர்கள் உடனடியாய் நடவடிக்கை எடுப்பார்களா?

**-எஸ்.தாஜ், கரம்பை.**



# வாசகர் சாலை

பல வண்ண கலரில்
வாரம் ஒரு முறை
வசந்தமாக வந்து
உண்மையை உலகறிய செய்ய
ஓசை எழுப்பிடும் இனிய தோழனே!
விதண்டா வாதம் புரியும் பலருக்கு
வியப்பை தந்து கற்றவர்களுக்கு
அறிவு தந்து சிறுவர்களுக்கு
களிப்பு தந்து பெண்களுக்கு
பிடித்த ஆலோசனை தந்து
உள்ளமெல்லாம் கொள்ளையிடும்
பல்வகை சுவை தந்து உன்னை
கரம் பற்ற பல ஆயிரம் வாசகர்களுக்கு
நம்பிக்கை தந்து இனிக்கின்றாய்
இன்னும் வானுயர உன் சேவை
பரவி எல்லையில்லா வாசகர் வட்டம்
தோன்ற வேண்டும். இரண்டு வாரம்
ஓசை எழுப்பாமல் போனவுடன் உள்ளம்
பதறிப்போனது தொய்வின்றி தொடர வேண்டும்.

*-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்தையூர்.*

*அன்பின் தினமுரசு!*

நான் முதல் முறையாக தொடர்பு கொள்கிறேன். எனக்கு கவிதை என்றால் உயிர் மாதிரி. நான் அடிக்கடி தினமுரசு பார்ப்பேன். நானும் கவிதை எழுதி அனுப்புகின்றேன். தரம் கண்டு பிரசுரித்து வாசகியாகிய என்னை அறிமுக கவிஞர் ஆக்க வேண்டுகின்றேன்.

*பழனி சரஸ்வதி, லெபனான்.*

### தினமுரசு அற்புதப் படைப்பு

சிந்திக்க வைக்கும் ஆன்மீகம் தித்திப்பு
கவிதைப் போட்டியில் களமாடும்
கவிதைத் துளிகள் விறுவிறுப்பு
அரசியல் கட்டுரைகள் அனைத்தும்
முத்தாய்ப்பு
ஆசிரியர் எழுதும் முரசம்
ஆச்சரியம் தரும் தகவல் பெட்டி
அதிரடி ஐயாத்துரை தரும்
அசத்தும் நறுக்கு
எல்லாமே அற்புதப் படைப்பு
தித்திக்கும் முரசே
நீ - எத்திக்கும் சென்று புகழ்
பரப்பு.

*-நிரஞ்சலா, கொழும்பு - 13.*

அன்பின் முரசுக்கு! உரிமை மடல்! எனது வகிப்பாக ஏக்கங்களை வாசகர்சாலையில் தவளவிடுகிறேன். தினமுரசு 2ஆம் பக்கத்திற்கு நீதான் நிகர். அதே போல் எல்லாப் பக்கங்களுக்கும் காரணம் அன்றிருந்த கட்டமைப்பிலே அதே இடத்தில் அதே விடயம் தொடருகிறது. உதாரணமாக ஆன்மீகம், கவிதை, உங்கள் பக்கம் போன்றன. ஆக நிலையான தன்மையை உன்னில் காண்கிறேன். அவ்வகையில் மேலும் வாசகர் உள்ளக்குமுறல்களை நன்கு புரிந்து செயற்பட்டு வருகிறாய். அண்மைய இதழில் "புனித மக்காவிற்கு மக்கள் வருகையை தந்திருந்தாய். அதுதான் 'த கிரேட்டஸ்ட் முரசு! நீ மதங்களை மதிப்பவன். அதனால்தான் வீரநடை போடுகிறாய். அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், அதுமட்டுமின்றி வாசகர்களின் கையெழுத்துப் பிரதியை சாலைப்பகுதியில் இணைக்கும் செய்கை வாசகர் உணர்வலைகளை திகைப்படையச் செய்கிறது. சோ (SO) தொடரும் உன் அதிரடி!


*-எஸ்.எம்.ரம்ஸி, காத்தநகர்.*


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வழிக்கு வராவிட்டால் புலிகளுக்குத் தடை!

## -சர்வதேச சமூகம் எச்சரிக்கை

வன்செயல்களைக் கைவிட்டு, வழிக்குத் திரும்புமாறு புலி இயக்கத்துக்கு நோர்வேயின் சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆலோசனைதெரிவித்திருப்பதாகக் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. "துப்பாக்கிக் குழாய்களுக் கூடாகத் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள புலிகள் இயக்கம் முயற்சியெடுக்கும்வரை உலகிலுள்ள எந்தவொரு நாடுமே அதனுடன் காத்திரமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளமாட்டாது" என்று கொழும்பில் அமெரிக்க அரசியல்துறைத் துணைச் செயலாளர் நிக்கலஸ் பேர்ண்ஸ் அறிவித்து 48 மணித்தியாலங்களுக்குள் இந்தத் தகவல் புலித் தலைமையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதேநேரம் 25 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் இயக்கத்தைத் தமது பயங்கரவாதப் பட்டியலில் இட்டு அதனை முற்றாகத் தடை செய்வது பற்றி ஆராய்ந்து வருவதாக, 'யுனைட்டட் பிரஸ் ஒப் இந்தியா' என்ற செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த ஆகஸ்ட் மாதம் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் கடந்த செப்டம்பரில் புலிகளுக்குப் பயணத் தடை விதித்திருந்தது. இதன் பின்னரும் இலங்கையின் வடக்கு, கிழக்கில் புலிகளின் வன்செயல் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாலேயே முற்றுமுழுதான தடை விதிப்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியப் பேச்சாளரொருவர் கூறினார். இதேவேளை இலங்கைக்கு வருகை தந்திருக்கும் அமெரிக்கத் துணையமைச்சர் நிக்கலஸ் பேர்ண்ஸ், நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கு புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து விலாவாரியாக எடுத்து விளக்கப்பட்டதாகவும் கொழும்பிலுள்ள அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. பொது மக்களின் போர்வையில் புலிகளே தாக்குதல் நடத்துகின்றனரென்றும் பொது மக்களுக்குப் பயிற்சியளிப்பதாக புலிகள் தமது இணையத்தளத்தில் வெளியிட்ட படங்களும் அமெரிக்க,நோர்வே தரப்பினருக்கு எடுத்துக்காட்டப்பட்டன என்றும் அந்த வட்டாரங்கள் கூறின. இதேவேளை புலித் தலைமை நோர்வேத் தரப்புக்குத் தெரிவித்த சில விடயங்கள் அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் நோர்வே தூதரகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். டோக்கியோ உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளில் அங்கம் வகிக்கும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் எடுத்திருக்கும் கடின நிலைப்பாடு பயன்தருமென்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்கப் பேச்சாளரொருவர் கூறினார்.




"பயங்கரவாதத்தைக் கையாள்வதற்கு ஒரு வழிதான் இருக்கிறது" என்ற வாசகங்களடங்கிய சுவரொட்டிகள் கொழும்பில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. "பேர்ண்ஸ் அவர்களே! " என்ற தலைப்பிட்டு ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் பின்லேடனின் படமும் பிரபாகரனின் படமும் காணப்படுகின்றன. பின்லேடனின் படத்தின் கீழ் 'தேடப்படுகின்றார்' என்ற வாசகமும் பிரபாகரனின் படத்தின் கீழ் கேள்விக்குறியும் இடப்பட்டிருக்கிறது.

## தமிழகத் தேர்தலில் இலங்கைப் பிரச்சினை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையால் தமிழகத்தில் மவுசிழந்து, மௌனித்துப் போன இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சிகளில் திராவிடக் கட்சிகள் இறங்கியுள்ளன. 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத்தின் ஸ்ரீ பெரம்புதூர் என்ற இடத்தில் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியான தனு என்ற பெண்ணால் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். இதனையடுத்து எழுந்த அனுதாப அலை காரணமாக ஜெயலலிதா ஆட்சி பீடமேறினார். கடந்த இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்திலுள்ள 35 தொகுதிகளையும் ஜெயலலிதாவின் கூட்டணிக் கட்சிகள் கோட்டை விட்டபோதிலும், மாநில சட்டசபை அவரது கட்சியின் ஆட்சியிலேயே இருந்து வருகிறது. எதிர்வரும் மே மாதம் தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருப்பதால் புலி இயக்க சார்பாளர்களான வைகோ, இராமதாஸ், பழ.நெடுமாறன், வீரமணி போன்றோர் இலங்கை இனப் பிரச்சினையை முன்வைத்து இயக்கங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் புலி எதிர்ப்பாளரான ஜெயலலிதா மௌனம் சாதிப்பதும், புலி இயக்கம் தொடர்பாக மௌனம் சாதித்து வந்த கருணாநிதி இலங்கையில் 'கொடூரங்கள்' என்று கருத்துச் சொல்ல முனைந்திருப்பதும் தேர்தல் உத்திகளென்று பரவலாகத் தமிழகத்தில் நம்பப்படுகிறது.



சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூகப் பாதுகாப்பு மத்திய நிலையங்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வாரம் கொழும்பிலுள்ள சமூக சேவைகள் அமைச்சில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யுனிசெப் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாண மக்களுக்கு காலாவதியான உணவுப் பொருட்கள்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கடந்த மாதம் அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்களில் பூச்சி, புழுக்கள் காணப்பட்டதாக யாழ்ப்பாண மக்கள் தெரிவித்துள்ளனர். அரிசி, பருப்பு, மா, ரவை ஆகிய பொருட்களிலேயே இவை காணப்பட்டனவென்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கொழும்பிலிருந்து உணவுத் திணைக்களம் நல்ல தரமான உணவுப் பொருட்களையே அனுப்பியதாகவும் விசாரணையிலிருந்து தெரியவருகிறது. ஏ-9 பாதையால் எடுத்துச் செல்லப்பட்ட இந்த உணவுப் பொருட்கள் இடைநடுவில் புலிகளால் அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது. ஓமந்தைக்கும் முகமாலைக்குமிடையிலான தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இப் பொருட்களைக் கைப்பற்றிய புலிகள், அதற்குப் பதிலாகத் தமது களஞ்சிய சாலைகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருட்களையே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மக்கள், புலிகளின் யாழ்ப்பாண அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். இது பற்றித் தமக்கு எதுவுமே தெரியாதென்று அவர் கையை விரித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்கள் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளன.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 60 சமூகப் பாதுகாப்பு மத்திய நிலையங்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்று முகமாகவும் சமூக நலன்புரிச் சேவைகள் தேவையான மக்களுக்கு நீண்ட கால அடிப்படையில் உதவுமுகமாகவும் சமூக, பாதுகாப்பு மத்திய நிலையங்களை நிறுவுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூகப் நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார். வடக்கு, கிழக்கு, தெற்கு உட்படப் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளிலும் இவ்வாறான 62 மத்திய நிலையங்களை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான கலந்துரையாடலொன்று அமைச்சரின் தலைமையில் கடந்த வாரம் அமைச்சுக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் யுனிசெப் உட்படப் பல அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஒவ்வொரு நிலையத்தையும் அமைப்பதற்கு ஒன்பது மில்லியன் ரூபா செலவாகுமென்றும், இவற்றின் செயற்பாட்டுக்கு வருடாந்தம் தலா ஒரு இலட்சம் ரூபா செலவிடப்படுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலே கூறப்பட்ட சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியும் பெறப்படும். கடந்த வருடம் ஏற்கனவே இவ்வாறான நிலையங்கள் அமைக்கப்பட்ட போதிலும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் இடைத் தங்கல் முகாம்களில் கஷ்டப்படுவதாகவும் கலந்துரையாடலின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

## மன்னார் ஆயரின் கோரிக்கை நிராகரிப்பு

மன்னார், முருங்கனில் அரச கட்டுப் பாடற்ற பகுதியில் சுமார் இரண்டரை மாதங் களுக்கு முன்னர் புலிகளால் கைதுசெய்யப் பட்ட மூன்று பொலிஸாரையும் விடுவிக்குமாறு தாம் கோரிக்கை விடுத்தபோதும், இதுவரை அவர்கள் விடுவிக்கப்படவில்லையென்று மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் தெரிவித்தார். இது தொடர்பாக புலிகளுக்குத் தான் கடிதம் எழுதியதாகவும் இதுவரை அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் தனக்கு வந்து சேரவில்லையென்று ஆயர் கூறினார். சிறுவனொருவனை துஷ்பிரயோகத்திற்குட் படுத்தியதாக கூறப்படும் வெளிநாட்டுவாசி ஒருவரைக் கைது செய்வதற்குப் புலிகளின் பகுதிக்குச் சென்ற மூன்று பொலிஸார் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கில் பரீட்சைகள் சீர்குலைவு

வடக்கு, கிழக்கில் இலங்கையின் நிருவாகச் சேவை பரீட்சை நடத்த முடியாமைக்கு அங்கு நிலவி வரும் அமைதியற்ற சூழலே காரணமென பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க கூறினார். யாழ். பல்கலைக்கழகத்தில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் சீர்குலைக்கப்பட்டுள்ள இந்நிலையில் நிருவாகச் சேவை பரீட்சையை எவ்வாறு நடத்துவதென்று வினா எழுப்பினார். வடக்குக் கிழக்கைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் பரீட்சார்த்திகள் கொழும்பில் பரீட்சைக்குத் தோற்றுவது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாருக்குப் பணிப்புரை

மலையகத்தில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸார், பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படா வண்ணம் நடந்து கொள்ள வேண்டுமென்று ஊவா மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ரி.எம். மிஸ்கின் அறிவுறுத்தியுள்ளார். புலிகளின் பிஸ்டல் குழுக்கள் மலையகத்துக்குள் ஊடுருவியிருப்பதாக வெளியான தகவல்களையடுத்து மலையகத்தின் பல பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொண்ட போதே இப் பணிப்புரையை விடுத்துள்ளார். மலையகக் கட்சிகளான இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி ஆகியவை புலிச்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவியமை குறிப்பிடத்தக்கது.

## காரைநகர், பிரதேசத்தில் ஆதரவற்றவர்களுக்கு அவசர உதவி

வடக்கேயுள்ள காரைநகர், தோப்புக்காடு என்ற பின்தங்கிய கிராமத்தைச் தவிர்ந்த சுமார் 400 பேர் காரைநகரிலுள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சி அலுவலகத்துக்குச் சென்று தமக்கு உதவிகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். விதவைகள், அங்கவீனர்கள், அநாதைகள், ஆதரவற்றோர் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களே கடந்த 21ஆம் திகதி காரியாலயத்துக்குச் சென்று இக் கோரிக்கையை விடுத்துள்ளனர். சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்குத் தமது நிலைமையை எடுத்து விளக்கி முதற்கட்டமாக நிவாரண உதவிகளைப் பெற்றுத் தருமாறும் பின்னர் சமூக நலத்துறை சார்ந்த உதவிகளைப் பெற்றுத்தருமாறும் கோரியுள்ளனர். புலிகளின் அச்சுறுத்தலின் பேரில் தோப்புக்காடு கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் வன்னிக்கு இடம் பெயர்ந்திருப்பதாகவும் தாம் தமது சொந்த மண்ணைவிட்டு வெளியேறப் போவதில்லையென்றும் தெரிவித்துள்ளனர். இந்த மக்களின் அவல நிலை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, உடனடியாக நிவாரணங்களை அனுப்பி வைக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## சம்பந்தனுக்கு மேலதிகப் பாதுகாப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் பாதுகாப்புச் செயற்பாடுகளை மேலும் அதிகரிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோதபயா ராஜபக்ஷவுக்கு உத்தரவிட்டுள்ளார். அண்மையில் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய பின்னரே இப் புதிய உத்தரவு விடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் காலத்தில் குண்டுகள் துளைக்காத காரொன்றினை சம்பந்தன் கோரிப் பெற்றிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் புலிகளுக்குத் தடை வருகிறது

"கனடாவில் புலி இயக்கத்தினர் நிதி சேகரிப்பது குறித்தும் தமிழ் மக்கள் பெருமளவு வாழும் ரொறன்ரோவில் அவர்கள் தமிழ் மக்களுக்கு தொந்தரவுகள் கொடுப்பது பற்றியும் நாமறிவோம். அவர்கள் செய்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. கனடாவில் அவர்களின் கிறிமினல் நடவடிக்கைகள் தொடர்வதை அனுமதிக்க முடியாது. நாம் பதவிக்கு வந்ததும் நிச்சயமாகப் புலி இயக்கத்தைத் தடை செய்வோம்" என்று கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் ரொறன்ரோவில் போட்டியிடும் பீற்றர் கென்ற் என்பவர் தெரிவித்தார். கனடாவிலிருந்து வெளிவரும் 'வைகறை' என்ற தமிழ்ப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கனடியத் தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி தோல்வி அடைந்துள்ளது "கன்சர்வேட்டிவ் கட்சி பதவிக்கு வந்துள்ளது ஹிஸ்புல்லா, ஹாமாஸ், எல்.ரி.ரி.ஈ. போன்ற பயங்கரவாத இயக்கங்களைப் பொறுத்தவரை லிபரல் கட்சியினர் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வந்தனர். இந்த நிலை மாற வேண்டும். கன்சர்வேட்டிவ் கட்சியினர் தமிழ் மக்களையும் புலிகள் இயக்கத்தையும் வெவ்வேறாகவே பார்க்கின்றனர். அரச படைகளின் அட்டூழியங்கள் காரணமாகத் தமிழ் மக்கள் தமது நாட்டை விட்டுத் தப்பியோடி வந்துள்ளனர். ஆனால் இதே பிரச்சினைகளை அந்த மக்கள் கனடாவிலுள்ள புலிகளிடமிருந்து எதிர்நோக்க வேண்டியுள்ளது" என்றும் கூறினார். கன்சர்வேட்டிவ் கட்சியினர் குடியேற்றவாசிகளுக்கு எதிரானவர்களல்லர். உண்மையில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் ஸ்கார்பரோ தொகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் வின்சன்ட் வீரசுந்தரம் என்பவர் போட்டியிட்டார் என்றும் அவர் சொன்னார்.

## உலகச் சந்தையில் எரிவாயு விலை அதிகரிக்கலாம்

சாதாரண மக்களின் அன்றாட அவசியத் தேவையான சமையல் வாயுவின் விலையைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சர்வதேசச் சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால், இலங்கையில் எரிவாயு விநியோகத்தில் ஒரு சில பல்தேசியக் கம்பனிகள் கொண்டிருக்கும் ஏகபோகத்தைத் தகர்க்குமாறும் கூடிய நேரம் எரிவாயுவைப் பாவிக்கக் கூடிய உபகரணங்களை அறிமுகப் படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## அமெரிக்காவின் தலையீடு மாறுதலைத் தருமா?

*அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.*

**தற்போது** நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வன்முறைகளின் அதிகரிப்பினால் சமாதான முயற்சிகள் கேள்விக்குறியாகியுள்ளன. மக்கள் கொண்டிருக்கும் பதற்றமான சூழலை அதிகரிப்பதா அல்லது தணிப்பதா என்பதை நன்கு புரிந்துகொண்டு ஊடகங்கள் பணியாற்ற வேண்டியது அவசியமாகும். ஊடகங்களின் தான்தோன்றித்தனமான போக்கு, நிலைமையை மேலும் மோசமடையவே செய்யும். மறுபக்கத்தில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதும், கொலை அச்சுறுத்தலுக்குள்ளாவதும் கண்டிக்கப்பட வேண்டியதோடு, தடுக்கப்படவும் வேண்டியதாகும். அந்த வகையில் 'சுடரொளி' பத்திரிகையின் செய்தியாளர் திருகோணமலையில் சுடப்பட்டது கண்டனத்துக்குரியதாகும். ஒருவரின் கருத்து எதுவாகவும் இருக்கலாம். அதற்காக அவரைக் கொலை செய்வதென்பது ஏற்க முடியாததாகும்.

படுகொலைகளுக்கும், கிளைமோர் தாக்குதல்களுக்கும், கைக் குண்டுத் தாக்குதல்களுக்கும் மக்களின் இடப்பெயர்வுக்குமிடையில் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் அமெரிக்காவின் நிக்கலஸ் பேர்ண்ஸ் ஆகியோரின் வருகையும் இடம் பெற்றிருக்கிறது. மீண்டுமொரு யுத்தத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் கடைசிக் காலகட்டத்தில் அமெரிக்காவின் தலையீடு கவனத்தில் கொள்ளத்தக்கது. அமெரிக்கப் பிரதிநிதியின் வருகையே, எரிக் சொல்ஹெய்மின் வருகையின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. மறுபுறத்தில் புலிகளின் தரப்பிலிருந்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் பாலகுமார், தமது தலைவர் முக்கியத்துவமானதும் அதிர்ச்சி தரக் கூடியதுமான செய்தியை வெளியிடுவார் என்று கூறிவருகிறார். ஆனால் அவ்வாறானதொரு அதிர்ச்சித் தகவலை பிரபாகரன் வெளியிடுவாராயின், சர்வதேசத்தின் ஒட்டுமொத்தப் பகைக்கும் புலிகள் ஆளாக நேரிடும் என்பதை அறியாமையாகும்.

தற்போது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தேவையானது அதிர்ச்சித் தகவலல்ல. பதற்றத்தைத் தணிக்கக் கூடிய சமாதானத்துக்கான சமிக்ஞையேயாகும். மக்களின் இந்த நியாயமான எதிர்பார்ப்பை அரசும் - புலிகளும் நிராகரித்துவிட முடியாது. புலிகள் தாக்குதல்களை நடத்துகின்றபோதும் அரசு பதில் தாக்குதலை நடத்தாத சூழ்நிலையிலும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி அதிகமானதாகவுள்ளது. இப்போதே இந்தியாவுக்கும் பாதுகாப்பான இடங்களுக்கும் மக்கள் இடம்பெயரத் தொடங்கிவிட்டனர். இந்த நிலை மாற்றமடைந்து அரசும் - புலிகளும் நேரடியாக யுத்தத்துக்குள் பிரவேசித்தால் கடந்த காலத்தை விடவும் மோசமான நெருக்கடி நிலை ஏற்படும். அதன் பின்னர் மக்களுக்கோ, அரசுக்கோ, புலிகளுக்கோ நிதானம் எடுக்கவோ சிந்திக்கவோ கால அவகாசம் கிடைக்கப் போவதில்லை. இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இயலுமானவரை போர் ஒன்றைத் தவிர்க்கவே இருதரப்பும் முயற்சிக்க வேண்டும். இது போர் புரிவதை விடவும் கடினமான பணியென்பதை வரலாறு எமக்குக் கற்பித்துள்ளது.

ஆகவே, சிக்கல் மிகுந்த புதிய பாடங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்கனவே பெற்ற அனுபவங்களில் தேர்ச்சியுற்றவர்களாக அதிலிருந்து கற்றுக்கொண்டு தவறுகளைத் திருத்துவதும், இன்னொரு தவறுக்குள் வீழ்ந்துவிடாமல் இருப்பதுமே புத்திசாதுரியமானதாகும்.

அரசுக்கும் - புலிகளுக்கும் சமாதானத்தின் மீதும், மக்களின் மீதும் உண்மையான அக்கறை இருக்குமானால் இடம் தொடர்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். அதேவேளை, புலிகளும் தாக்குதல்களைத் தொடர்வதைத் தவிர்த்து சமாதானத்தின் மீதான தமது விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வழுக்கு மரம் ஏறுகிறார் எரிக் சொல்ஹெய்ம்

நரன்

பெரிய பிரித்தானியாவின் வட அயர்லாந்து, இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலம், ஆபிரிக்காவின் லைபீரியா - இவையெல்லாம் உள்நாட்டு யுத்தத்தை கடந்த வருடம் முடிவுக்குக் கொண்டுவந்து, சமாதானத்தின் உதயத்துக்காகச் சாதனை புரிந்தவையென பாராட்டப்பட்டன. ஏறக்குறைய இரு தசாப்தங்களுக்கு மேலாக யுத்தத்தின் கோரங்களைச் சுமந்து நின்றவை இவை. இந்த மூன்று இடங்களிலும் ஆட்சியாளர்களும், சம்பந்தப்பட்ட ஆயுத இயக்கங்களும் மோதலை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயக ரீதியாகத் தீர்வு காண்பதற்கு விசுவாசமாகச் செயற்பட்டதாலேயே தீர்வுகள் தேடிப் பிடிக்கப்பட்டன.

இலங்கையும், இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட சிவில் யுத்தக் கொடூரங்களுக்குப் பாரிய விலையைக் கொடுத்த ஒரு நாடு. சுமார் ஒன்றரை இலட்சம் மனித உயிர்களைக் காவு கொடுத்த இந்த நாட்டில், சமாதான முயற்சிகளை மேற்கொள்தற்காக ஐந்து வருடங்களுக்கு முன்னர் நோர்வே அழைக்கப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நோர்வேயை ஏற்பாட்டாளராகப் பணிபுரியுமாறு அழைப்பு விடுத்திருந்தார். எரிக் சொல்ஹெய்ம் சமாதானத்தைத் தேடி இந்த யுத்த களத்துக்கு வருகை தந்தார். ஐந்து வருடங்கள் கடந்து விட்ட இந்த நிலையிலும் கண்மூடித்தனமான மனிதப் படுகொலைகள் இன்னமும் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பிரபாகரனுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் போன்றவற்றையெல்லாம் செய்து கொண்டார். ஆனாலும் எதிர்பார்த்த பலன் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. யுத்த களமாகத் திகழ்ந்த வடக்கும், கிழக்கும் கடந்த வருடம் மீண்டும் வேட்டுகளால் அதிரத் தொடங்கின. அரசு தரப்பில் சமாதான முக்கியஸ்தராகத் திகழ்ந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கொழும்பின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வைத்துப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் எதிரொலியாக ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் இயக்கத்திற்குப் பயணத்தடை விதித்ததோடு, வன்செயல்களைக் கட்டுப்படுத்துமாறும் திட்டவட்டமாகக் கூறியிருந்தது. ஆயினும் படிப்படியாக பொலிஸார் மீதும் அரசபடையினர் மீதும் கல் வீச்சுகள், கைக்குண்டு வீச்சுகள் என்று தொடங்கிய புலிகள், கிளைமோர் தாக்குதல்களையும் நடத்துமளவுக்கு உற்சாகம் பெற்றனர். மட்டக்களப்பிலுள்ள யுத்தநிறுத்த அலுவலகமும் தாக்கப்பட்டது. மாற்றுக் கருத்துக் கொண்ட மக்களும், புலனாய்வுப் பிரிவினரும் தாக்கப்பட்டனர்.

ஆனால், புலிகள் தமது 'போர்மியுலா' பாணியிலான சாக்குப் போக்குகளையே சொல்லி வந்தனர். சொல்லியும் வருகின்றனர். அதாவது சமாதானத்தோடு சம்பந்தப்பட்ட தாம், தாக்குதல்களை நடத்தவில்லையென்றும் தமிழ் மக்களே எழுந்தமானமாக எழுந்து தாக்குதல்களை நடத்துகின்றனரென்றும் புலிகள் கரடி விட்டனர். இதன் எதிர்விளைவாக ஏட்டிக்குப் போட்டியான படுகொலைகளும் நிகழத் தொடங்கின.

இந்த நிலையில்தான் மீண்டும் சர்வதேச சமூகம் இலங்கையின் மீது கூடிய அக்கறை காட்டத் தொடங்கியிருக்கிறது. அரசுக்கு ஆலோசனையும், புலிகள் இயக்கத்திற்கு அழுத்தமும் கொடுக்கும் முன்முயற்சிகளில் சர்வதேச சமூகம் தற்போது அக்கறையோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. முன்னாள் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் போராளியும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முக்கியஸ்தருமான மார்ட்டின் மெக்கியூன் கொழும்பு வந்தார். உயர் மட்டத் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்கினார். வந்த கையோடு திரும்பி விட்டார். சமாதான மேசைக்கு சிங்கங்களையும் (அரசு) புலிகளையும் மீண்டும் கூட்டி வரும் முயற்சியில் ஈடுபடுவதற்காக அமெரிக்க அரசியல்துறை பிரதியமைச்சர் நிக்கலஸ் போர்ண்ஸ், நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் இங்கு வந்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை தமிழகத் திராவிடக் கட்சிகள், தேர்தல் காலத்தை முன்னிட்டுக் கையாள முனைந்திருக்கும் இந்நிலையில், தமிழ் தேசிய விடுதலை இயக்கம், விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க., ம.தி.மு.க. போன்ற சிறிய தமிழகக் கட்சிகள் இலங்கைப் பிரச்சினை குறித்து உரத்துக் குரல் கொடுக்க முனைவதும் தமிழகத்தில் சிறு சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதை யாரும் மறுக்க முடியாது. திராவிடக் கட்சிகளின் தயவில் இந்திய மத்திய அரசின் பெரும்பான்மைப் பலம் தங்கியிருப்பதால், மத்திய ஆட்சி கைகட்டிப் பார்வையாளனாக நிற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதும் இலங்கையின் சமாதான முயற்சிகளோடு சம்பந்தப்பட்ட சர்வதேச தரப்பும், இலங்கை அரசும் முயற்சிகளின் முன்னேற்றம் பற்றி அவ்வப்போது இந்தியாவுக்குத் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் இலங்கையின் சமாதான சக்கரம் முன்னோக்கிச் சுழலுமா? இல்லையா? என்ற பாரிய கேள்வியொன்றும் எழுந்துள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தையை எங்கு ஆரம்பிப்பதென்று அரசுக்கும் புலிகளுக்கும் நிலவும் இழுபறி, இந்த சந்தேகத்தைப் பிரதானமாகக் கிளப்பியிருக்கிறது. நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில்தான் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று புலிகள் இயக்கம் வலியுறுத்துகிறது. ஆனால், நோர்வேயின் ஏற்பாட்டாளர் பணி குறித்தும் நோர்வேயின் தலைமையிலான யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்தும் பல்வேறு தரப்புகளிலிருந்து சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருப்பதால், அரசாங்கம் ஒஸ்லோவைத் தவிர்த்துக் கொள்ள விரும்புகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்றவற்றின் அழுத்தமும் இதற்குக் காரணமாகவிருக்கலாம். சிங்கள, பௌத்த கடும் போக்குக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுக்கு அப்பாவி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில் அக்கறை கொள்ள நேரமில்லை. சாராயத்திற்கும், சிகரெட்டுக்கும் எதிராகப் போர்க் கொடி தூக்குவதும், சிங்கள பௌத்தக் கொடி பற்றிப் பேசுவதுமே அவர்களின் பொழுதுபோக்கு அரசியலாகிவிட்டது என்பது வேதனைக்குரிய விடயம்தான்.

இருந்தபோதிலும் தென்னிலங்கைக் கட்சிகளின் இணக்கப்பாட்டைப் பெறுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய சர்வ கட்சி மாநாடு, புலிகளுடன் உடனடியாக பேச்சினை ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்திருக்கிறது. பேச்சுவார்த்தையை கொழும்புக்கு வெளியே நடத்தக் கூடாது என்ற ஜாதிக ஹெல உறுமயவின் எதிர்ப்பை ஜனாதிபதி சமாளித்திருப்பது வெற்றிகரமான ஓர் அடியெடுப்பென வர்ணிக்கலாம். இதைப் போன்றே அன்ரன் பாலசிங்கத்திற்கு வன்னி செல்ல விமானப் படை ஹெலிக்கொப்டர் வழங்கக் கூடாது என்ற கோரிக்கையையும் ஜனாதிபதி நிராகரித்திருக்கிறார்.

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கென ஐந்து நாடுகளைச் சிபாரிசு செய்திருந்ததாகக் கூறப்படுகிறது. இக்கட்டுரை அச்சுக்குப் போகும் வரை புலிகள் இயக்கம் இத்தகைய இடப் பிரச்சினை குறித்து எந்த முடிவுக்கு வருமென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படவில்லை. இருந்தாலும் இந்த விவகாரத்தில் அரசும் புலிகளும் நெகிழ்வுப் போக்கைக் காட்டினால் மட்டுமே சொல்ஹெய்மின் முயற்சியில் ஓரளவுக்காவது வெற்றியேற்படுமென்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தப் பேச்சுவார்த்தை விடயத்தோடு இரு விடயங்கள் சம்பந்தப்படுகின்றன. ஒன்று - வடக்குக் கிழக்கில் அதிகரித்து வரும் வன்செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது. இரண்டு - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துவது. இவை அனைத்துமே ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட விடயங்களாகும்.




புலிகள் தரப்பு வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது, துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைவது, பொது மக்களின் பாதுகாப்பு போன்ற விடயங்களை முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை புலிகளின் வன்செயல்களைக் கண்டித்திருப்பதோடு துணைப் படையென்று கூறப்படுபவை தொடர்பாகவும் தமது சீற்றத்தை வெளியிட்டிருக்கின்றன.

அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் புலிகளே அடாவடித்தனங்களை முடுக்கி விட்டிருப்பதால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய தேவை அரசுக்கு இருப்பதாகவும், பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற பொறுப்பு அரசுக்கு மட்டுமல்ல, ஆயுதம் ஏந்திய புலிகளுக்குமிருக்க வேண்டுமென்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

வன்னியில் பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட உயர் மட்டத் தலைவர்கள் நடத்திய மந்திராலோசனைக் கூட்டத்தில் அரசினதும் சர்வதேச சமூகத்தினதும் சமாதான முன்முயற்சிகளை எப்படித் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதென்று ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், சொல்ஹெய்மின் விஜயமும், சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களும் பெரு வெற்றியைத் தருமெனக் கூற முடியாது. "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற பாணியிலேயே மீண்டும் புலிகளின் வன்செயல்கள் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளே பெருமளவு காணப்படுவதாக எதிர்வு கூறப்படுகிறது. சிலவேளைகளில் வேட்டுச் சத்தங்கள் தற்போதைக்குத் தணியலாம். ஆனால் நிரந்தரமாகத் தணியப் போவதில்லை. ஏனெனில் ஜனநாயகத்தையும், பன்முக தன்மையையும், மனித உரிமைகளையும் மதித்து சமாதான விசுவாசத்தோடு நெகிழ்வுத் தன்மையை இரு தரப்பும் காட்டினால் மட்டுமே வெற்றி கிட்டும். தற்போது பந்து புலிகளின் பக்கத்தில். ■

## ஊரிலிருந்து....



முன்னரெல்லாம் மக்கள் போராட்டம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் போராட்டங்கள் சர்வ சாதாரணமானவை. நாளொரு ஊர்வலமும் பொழுதொரு டயர் எரிப்புமாக குடாநாட்டில் அவை நிகழ்ந்து கொண்டிருந்தன. இப்பொழுதோ நாளொரு குண்டு வீச்சு பொழுதொரு கொலையாக விழுந்து கொண்டிருக்கின்றது. போதாக்குறைக்கு தெடுதல் சோதனை நடவடிக்கைகளும் தொடங்கிவிட்டுது ஆனால் இந்த போராட்டம் என்ற பேச்சையே காணவில்லையே ஏன் மாஸ்டர்? என்றேன்.

குடாநாட்டில இருந்து வன்னிக்கு சில பேர் இடம் பெயர்ந்து போகீனம் தெரியுமோ? என்றார் மாஸ்டர். என்ன இது நான் ஒண்டைக் கேட்க மாஸ்டர் வேற என்னமோ சொல்லுறார் எண்டு மண்டையைக் குழப்ப, அதை விளங்கிக் கொண்ட மாதிரி மாஸ்டர் சொன்னார். "வன்னிக்கு இடம் பெயருங்கோ எண்டு புலிகள் சொன்னவுடன முதலில பாய்ஞ்சு ஓடினவை யார் தெரியுமோ? கொடுக்கு கட்டிக் கொண்டு டயர் எரிச்சவையளும் கோஷம் போட்டவையளும்தான். ஆனானப்பட்ட, திருகோணமலை 5 மாணவர் படுகொலைக்கே, வடக்கு கிழக்கில ஏனைய மாவட்டங்களில ஹர்த்தால் நடந்திருக்குது. இண்டைக்கு வரைக்கும் யாழில ஏண்டும் நடக்கேல்லை. ஒரு டயரும் எரியேல்லை இப்ப விளங்குதோ? என்றார் எனக்கு ஏதோ விளங்கிற மாதிரி இருக்குது.

# முடங்கிப் போகும் கண்காணிப்புப் பணி

## - நேரடிப் பேட்டி

**முன்னாள்** பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையில் 2002.02.22ஆம் திகதி போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு ஏற்பாட்டாளராக நோர்வே அரசு அழைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மேற்படி ஒப்பந்தத்தை இருதரப்பினரும் முறையாக கடைப்பிடிக்கின்றனரா அல்லது மீறுகின்றனரா என்பதைக் கண்காணிப்பதற்காக நோர்வேயின் தலைமையில் ஸ்கண்டிநேவிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வரவழைக்கப்பட்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம், அதைக் கண்காணிக்க் குழு என்று அடுத்தடுத்து நிகழ்ந்தவைகள் இலங்கை மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த புதிய நம்பிக்கையை தோற்றுவித்தது. ஆனால் இந்த நம்பிக்கை நீடிக்கவில்லை. புலிகளினால் மாற்றுக்கருத்தாளர்கள் படுகொலை செய்யப்பட்டதும், அவர்கள் தற்கொலை குண்டுதாரியை அனுப்பும் வரையும் தொடர்ந்ததெல்லாம் ஏற்கனவே போதுமான அளவுக்கு அலசப்பட்ட விடயம். இன்னும் இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

இவற்றைக் கண்டுகொண்டாலும் தடுத்து நிறுத்த முற்படாத கண்காணிப்புக் குழுவினரும், நோர்வேயும் கொலைகளுக்கு விளக்கமளித்து வந்தனர். ஏனைய நாடுகளில் இவ்வாறான ஒப்பந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களோடு ஒப்பீட்டுப் பார்க்கும்போது, இலங்கையில் இடம் பெறும் படுகொலைகளும், வன்முறைகளும் மிகக் குறைவானதுதான் என்பதால், இச்சம்பவங்கள் சமாதானத்தையோ, ஒப்பந்தத்தையோ பாதிக்காது என்றனர். இவ்வாறு குற்றவாளி தப்பித்து விடுவதற்கு வழியேற்படுத்திய விதண்டாவாதங்களின் விளைவே இன்று சராசரியாக ஒரு நாளைக்கு மூன்று பேருக்கு மேல் படுகொலைகள் நடைபெறுகின்ற சூழலைத் தோற்றுவித்துள்ளது. இது தவிரவும், மனித உரிமைகள் மீறப்படுகின்ற நாடுகளில் ஆசியாவில் இலங்கை மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. தற்போதைய நிலை தொடருமாக இருந்தால் இந்தப் பட்டியலில் முதலிடத்தை இலங்கை பிடிக்கும்.

புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை ஏந்தியவாறு மாற்று ஜனநாயக அமைப்புகளும், பொதுமக்களும் நியாயம் கேட்டபோதும், கொலைகள் தொடராமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி மகஜர்கள் கையளிக்கப்பட்டபோதும், அந்த மகஜர்களைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட வெளியில் வராமல் இருந்த நோர்வே தூதுவராலயமும், கண்காணிப்புக் குழுவும் இன்று நம்பகத்தன்மை இழந்தவர்களாகவும், செயற்திறனை இழந்தவர்களாகவும், பொறுத்தமற்ற பணிக்கு வலிந்து அமர்த்தப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

தற்போது நிலைமையில் ஏற்பட்டுள்ள மோசமான சூழல் காரணமாகக் கண்காணிப்புப் பணியாளர்கள் தமது அலுவலகத்தை விட்டு வெளியில் இறங்க முடியாதுள்ளனர். அப்படி வருவதானால் படைத்தரப்பின் பாதுகாப்பு அவசியம் என்றும் கூறுகின்றனர். இதுவும் கண்காணிப்புக் குழுவின் தவறுதான்.

2003ஆம் ஆண்டு நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த புலிகளின் படகைச் சோதனையிட கடற்படையினருடன் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் சென்றிருந்தனர். அப்போது புலிகளின் படகில் கண்காணிப்புக் குழுவினர் ஏறியபோது குண்டை வெடிக்க வைத்துப் புலிகள் தப்பினர். கண்காணிப்பாளர்கள் கடலுக்குள் பாய்ந்து உயிர் தப்பினர். அந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஒழுங்கான நடவடிக்கை எடுத்திருந்தால்,

> யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில், கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துள்ளதோடு ரோந்துப் பணிகளையும் நிறுத்தியுள்ளனர். பெயருக்கு அலுவலகம் மட்டும் உள்ளது. இதே நிலைதான் வடக்கு, கிழக்கில் எல்லாப் பகுதிகளிலும் நிலவுகிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் கண்காணிப்புக் குழுவினரின் அலுவலகங்கள் எதுவும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. புலிகளை நம்பமுடியாததும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.

2005ஆம் ஆண்டில் திருமலைக் கடலில் மூதூருக்கு அருகில் புலிகளின் கடல் வலைய சர்ச்சை தொடர்பாக அவதானிக்க கடற்படையினரின் படகில் கண்காணிப்பாளர்கள் சென்றபோது புலிகளினால் தாக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்காது. இந்தத் தாக்குதல் சம்பவத்தை புலிகள் மறுத்தபோதும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளே இருந்தே துப்பாக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கண்காணிப்பாளர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதைவிட, மட்டக்களப்பில் கண்காணிப்புக் குழுவினரின் வாகனத் தரிப்பிடத்தில் தரித்து நின்ற வாகனங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னரே தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை கண்காணிப்பாளர்கள் தமக்கு நேரடியாக நடத்தப்பட்ட தாக்குதலாகக் கருதுவதாகத் தெரிவித்திருந்தனர். அந்தச் சம்பவத்தில் மூன்று வாகனங்கள் சேதமாகின. உயிர்ச் சேதம் எதுவும் இடம்பெறவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக வன்னியில் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கருத்துத் தெரிவிக்கும் போது, இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியவர்கள் யார் என்று தமக்குத் தெரியும் என்றும், ஆனால் தம்மால் வெளியே சொல்ல முடியாதென்றும் கூறியதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. அப்படியென்றால் கண்காணிப்பாளர்கள், குற்றவாளிகளை - வன்முறையாளர்களை, பாதுகாக்கும் வேலையைச் செய்கிறார்கள் என்பதைத்தவிர, வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

இதற்குப் பிறகு, திருகோணமலையில் கடற்படையினரின் பஸ் வண்டி தாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர் திடீரென்று கண்காணிப்பாளர்கள் திருமலையில் தங்கள் பணியை தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்தனர். அடுத்தநாள் அவர்களது அலுவலகத்தில் பறந்து கொண்டிருந்த அவர்களின் கொடியை இனந்தெரியாதவர்கள் அரைக் கம்பத்தில் கட்டிவிட்டனர். இது பரபரப்பை ஏற்படுத்தவும் விரைந்து சென்ற கண்காணிப்புக் குழுவினர் அந்தக் கொடியை அகற்றினர். பின்னர் அடுத்த நாள் தாம் தமது பணியை மீண்டும் ஆரம்பித்து விட்டதாகத் தெரிவித்தனர். மட்டக்களப்பில் குண்டு வைக்கப்பட்ட பின்னரே அலுவலகத்தை மூடாத, இவர்கள் திருமலையில் திடீரென்று அலுவலகத்தை மூடியதன் காரணம் என்னவாக இருக்கும் என்ற கேள்விக்கு கண்காணிப்புக் குழுவினர் திருப்தியான பதிலை வழங்கவில்லை.

இதே போல் யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில், கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துள்ளதோடு ரோந்துப் பணிகளையும் நிறுத்தியுள்ளனர். பெயருக்கு அலுவலகம் மட்டும் உள்ளது. இதே நிலைதான் வடக்கு, கிழக்கில் எல்லாப் பகுதிகளிலும் நிலவுகிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் கண்காணிப்புக் குழுவினரின் அலுவலகங்கள் எதுவும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. புலிகளை நம்பமுடியாததும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. ஆக மொத்தத்தில் இலங்கையில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பிரதிநிதிகள் கூலிக்கு ஒப்பாரி வைப்பவர்கள் போல் வில்லங்கத்திற்கு வேலை செய்து கொண்டிருக்கிற மனோநிலையிலேயே இருக்கின்றனர்.

அவர்களோடு நேரடியாகப் பேசியபோது, அவர்களின் பேச்சாளர் ஹெலன் கூறிய கருத்துக்கள் :-

***கேள்வி** :- மட்டக்களப்பில் உங்களின் அலுவலகம் மீதான தாக்குதலில் புலிகளோ இராணுவமோ சம்பந்தப்படவில்லை என்று உங்களின் தலைவர் ஒரு நேர்காணலில் கூறி இருக்கிறார். அப்படியென்றால் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் யார் என்பது பற்றி ஏதாவது தெரியுமா?*

**ஹெலன்** :- எங்களுக்கு அதுபற்றி எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்குரியது. அவர்கள் விசாரணை செய்து சொன்னால் அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

எங்களுடைய வேலை கண்காணிப்பதே தவிர, விசாரணை செய்வதில்லை.

***கேள்வி** :- வடக்கிலும் - கிழக்கிலும் அண்மைக் காலமாக வன்முறை அதிகரித்து வருகிறது. இதில் படைத்தரப்பு கொல்லப்படுவதோடு, பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தத் தாக்குதல்களைப் புலிகள்தான் நடத்துகிறார்கள் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. எனவே இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்க உத்தேசித்துள்ளீர்களா?*

**ஹெலன்** :- நடைபெறும் வன்முறைகள் மிகவும் கவலைதரக் கூடிய விடயம். எனவே இரு தரப்பும் வன்முறையைக் கைவிட வேண்டுமென நாங்கள் கேட்டிருக்கின்றோம். புலிகள் மட்டுமல்ல, இராணுவத்துடன் செயல்படும் துணைப்படைகளின் ஆயுதங்களும் களையப்பட வேண்டுமென வலியுறுத்த இருக்கின்றோம். எனவே இருதரப்பும் வன்முறையைக் கைவிட்டு சமாதான மேசைக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அலசுவது

**- மதியூகி -**

***கேள்வி** :- இரு தரப்பையும் வன்முறையைக் கைவிடுமாறு கூறியிருக்கும் நீங்கள், மட்டக்களப்பில் உங்கள் அலுவலகம் மீதான தாக்குதலை இரு தரப்பும் நடத்தவில்லை என்கிறீர்களே?*

**ஹெலன்** :- இருதரப்பும் வன்முறைகளில் ஈடுபடுவதாக எம்மிடம் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆகையால்தான் இரு தரப்பையும் வன்முறையைக் கைவிடுமாறு கேட்கின்றோம். மட்டக்களப்பு சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம் பெறுவதால் இப்போதைக்கு ஒன்றும் சொல்லமுடியாது. அதுகுறித்து தகவல் கிடைத்ததும் நாங்கள் உரிய நடவடிக்கை எடுப்போம்.

***கேள்வி** :- கண்காணிப்பு என்பதை என்ன அர்த்தத்தோடு பார்க்கிறீர்கள்? உங்கள் பணிபற்றி விளக்கமாகக் கூறமுடியுமா?*

**ஹெலன்** :- இரு தரப்பும் அத்துமீறல்களில் ஈடுபடாமல் தடுப்பதும், இரு தரப்புக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து உரிய தரப்பினருக்கு அவற்றை நிறுத்தும்படி கூறுவதுமாகும். இதற்கு மேலதிகமாக விசாரணை நடத்தவோ - நடவடிக்கைகள் எடுக்கவோ எங்களுக்கு அதிகாரமில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். ◎

---

# அதிரடி அய்யாத்துரை



**வட, கிழக்கில** இருந்து சனம் இடம்பெயர்ந்து கொண்டிருக்கினம். எங்கால போறதெண்டு தெரியாமலும், சனங்கள் யோசிச்சுக் கொண்டும் இருக்கினம். அண்டை நாட்டுக்குப் போறவை போக கொஞ்சப் பேர் தலைநகரிலேயே வாடகைக்கு வீடு பார்க்கினமாம்.

சனங்கள் வீடு தேடத்தேட வாடகைக்கு வீடு குடுக்கிறவை கூலியையும் கூட்டிக் கொண்டு வருகினம். பத்து பச்சைத் தாளுக்குக் குறையாம வீடு பார்க்கிறது பெரும் பாடாக் கிடக்கெண்டு சனம் சொல்லித் திரியினம். என்னதான் தலைநகரில தேடுதல்களும், கைதுகளும் நடந்தாலும் நிம்மதியா இருக்கலாமெண்டு யோசிக்கினமாக்கும். சனத்தின்ர உந்த யோசனையிலயும் ரெண்டெழுத்தார் ஒரு குண்டைத் தூக்கிப் போடுகினம். எப்படித் தெரியுமோ? சண்டை துவங்குச்சுது எண்டால் முதலில கொழும்பிலதான் வெடிக்குமெண்டினமாம். அப்புடியெண்டால் பாவம் சனங்கள் எங்கதான் போவினமெண்டதுதான் கவலையாக் கிடக்கு.

**பராக்...** பராக்.... பராக்... வந்திட்டாருங்கோ. ஆலோசகர் அரசாங்கத்தின்ர பட படாவில போய் வன்னியிலையும் இறங்கிட்டார். தாய்லாந்தில போய் செய்த தப்புத்தாளங்களை தம்பட்டமடிச்சவர் இவ்வளவு சீக்கிரம் திரும்புவார் எண்டு நினைக்கயில்லை. லண்டனில இருந்து புறப்பட்ட ஆலோசகருக்கு, படபடாவாலை வன்னியில இறங்கும்போது பிரஷர் அதிகரிச்சுப்போட்டுதாம். ஏக தலைவர் என்னன்ன கேக்கப்போறாரோ எண்டதுதான் தன்ர யோசனையாக் கிடக்கு எண்டு மனிஷன் பிளைட்டில வரேக்கேயே பினாத்திக்கொண்டுதான் வந்தவராம்.

நம்பமுடியாத சிங்கள தேசத்தின்ர செலவில கூசாம ஆலோசகர் விஜயம் செய்யிறதை ராஜதந்திரமென்று சொல்லுறவை, சனம் தொடர்புகொள்ளுறதை துரோகமெண்டினமே. உந்த நியாயத்தை எந்த லிஸ்ட்டில சேர்க்கிறதெண்டு வாத்தியார் கேக்கிறாருங்கோ.

**அவசரகாலச்** சட்டத்தை எதிர்த்து வாக்களிச்சாலே அது உச்சுப்போட்டு அமுலுக்கு வந்துபோடுது எண்டு கூத்தமைப்புக்காரர் அடிக்கடி சொல்லுவினம். இந்த முறை கொஞ்சம் வித்தியாசமா நடந்திருக்குங்கோ. உந்த சப்ஜெக்ட்டை தொடவிடாமலே சபையைக் கூத்தமைப்புக்காரர் குழப்பிக் கொண்டிருந்திச்சினம். இவையின்ர குழப்பத்தையும் கூச்சலையும் ஒரு பொருட்டா எடுக்காமலே அவசரகாலச் சட்டம் அமுலாகிட்டுது. காகம் திட்டி மாடு சாகாதெண்டுவினம். அது மாதிரி, இவை கத்தி தன்னை ஒண்டும் செய்ய ஏலாதெண்டு சட்டம் தன்ர பவரைக் காட்டிப் போட்டுதுங்கோ. கூட்டமைப்பா இருந்து கூத்தமைப்பா மாறினவை, இப்ப கூத்தமைப்பா இருந்து கூச்சலமைப்பா மாறியிருக்கினமெண்டு சக எம்.பி.மார் சிரிக்கினமுங்கோ. உந்தக் கூத்தமைப்பார் எந்த வேலையை எடுத்தாலும் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான மாதிரித் தானுங்கோ முடியுது. இனியாகிலும் ஒரு சேஞ்சுக்கு குரங்கு பிடிக்க ரை பண்ணிச்சினமெண்டால் ஒருவேளை பிள்ளையாரா ஆகுதோ எண்டு பாக்கலாம் புரியுதோ....

**யாழ்ப்பாணத்தின்ர** கலாசாலைக்குள்ள எரிமலையொண்டு குமுறிக்கொண்டு இருக்குதுங்கோ. எப்ப வெடிச்சுச் சிதறுமோ எண்டு தெரியல்லை. இந்த வருஷம் எக்ஸாம் எழுதினால் கிரஜுவட்டா போற மாணவர்களிட்டப் போய் ஒரு வருஷத்துக்கு கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்த வேணுமெண்டு ரெண்டெழுத்தார் சொல்லியிருக்கினம். பாவம் பெடியள். படிச்சுப்போட்டு படிப்பை இடைநிறுத்தினால் சிரமமா இருக்குமெண்டு யோசிக்கினமாம். உதுக்கெல்லாம் காரண கர்த்தா உந்த குதிரைக் கஜேந்திரன்தான் எண்டு விஷயம் அறிஞ்ச பெடியளும், இறுதியாண்டு மாணவர்களும் தானுங்கோ. உள்ளுக்குள்ள குமுறிக்கொண்டு இருக்கினமாம். மாணவர்களின் சக்திக்கு எவ்வளவு பவர் இருக்கெண்டதை தெரிஞ்சு கொண்டும் கஜேந்திரனார் உப்புடி கல்வியில கத்தி வைக்கிறது நல்லதுக்கில்லையுங்கோ. மாணவர்கள் பொறுமையின்ர எல்லையைத் தாண்டிச்சினமெண்டால் கஜேந்திரனாரும் அவருக்குக் கொடி பிடிக்கிறவையும் எந்த மூலைக்குப் போவினமோ தெரியாதெண்டு மாணவர்கள் சொல்லினமுங்கோ. தமிழ் சமூகத்திற்ற மிச்சம் இருப்பது கல்விதான். இப்ப அதுக்கும் வச்சிட்டினம் ஆப்பு.

**பொதுமக்கள்** சாகினம், பொதுமக்கள் சாகினம் எண்டு புலம்பிக் கொண்டு திரியிற எந்தவொரு கூத்தமைப்பு எம்.பி.யும் ஒரு பொதுமகனின்ர செத்த வீட்டுக்கும் போகயில்லை யுங்கோ. உந்த லட்சணத்தில தான் இவை சனம் சாகுதெண்டு கத்தினம். பாத்தியளோ ரெண்டெழுத்தாரின்ர வியாதி கூத்தமைப்பாருக்கு எப்படிப் பரவியிருக்கெண்டு?

என்னடா இது வியாதி? பறவைச் காச்சலோ, எலிக் காச்சலோ எண்டு பயந்து போடாதீங்கோ. செத்தவனின்ர பேராலை பொலிரிக்ஸ் பண்ணிறதுதானுங்கோ அந்த வியாதி. நாட்டில நல்லது நடக்க வேணுமெண்டால் முதலில உந்தச் சவப்பெட்டிக் கடைக்கார பொலிரிக்ஸ் நடத்திறவையை இல்லாமல் செய்ய வேணுமுங்கோ. இல்லாட்டில் யாரடா சாவான், எப்புடியடா பொலிரிக்ஸ் பண்ணலாமெண்டு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரியிறவையை திருத்த முடியாதுங்கோ.

**பொதுவா** ஏதாவது மெசேஜ் சொல்லுற குருவியார் வழக்கத்துக்குமாறா கொடுக்குக் கட்டிக்கொண்டு சவால் விடுறாருங்கோ. என்ன சவால் எண்டு யோசிக்காதேங்கோ. குடா நாட்டில கொடி பிடிச்சவை, டயர் எரிச்சவை, கல் எறிஞ்சவை எல்லாப் பேரும் வன்னிக்குப் பறந்திட்டினமாம். மிச்சமிருக்கிற கொஞ்சப் பேரும் வெளியால இறங்கி முகத்தைக் காட்டப் பயப்படுகினமாம். ஏன் தெரியுமோ? ரெண்டெழுத்தாரின்ர ஆட்டத்துக்கு தாளம் போட்டு விலாசம் காட்டினவை அண்மைக் காலமாகக் குறிவைக்கப்படுகினமெல்லோ, அந்தப் பயம் மற்றவைக்கு பரவியிருக்காம். காசு குடுத்து குண்டை எறியச் செய்தாலும் செய்யலாம். இனி ஆர்ப்பாட்டம், கொடி பிடிப்புக்கு ஆள் சேர்க்கிறது கடினமான காரியம்தான் எண்டுபோட்டு முடியுமெண்டால் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னம் மாதிரி பெருங் கூட்டத்தைக் கூட்டி நடத்திக் காட்டுங்கோ பாப்பம் எண்டு குருவியார் சவால் விடுறார். நான் எந்தக் காலத்தில கூட்டம் கூட்டினனான். கூட்டம் கூட்டிற வைக்குத்தானுங்கோ குருவியாரின்ர உந்தச் சவால் பொருந்தும். இல்லையோ... ஓமோ....




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## சிங்கள நாளிதழ் செய்திகள்

சிங்கள நாளேடுகளில் வலம் வரும் செய்திகள் தற்போது தமிழ் தேசிய பத்திரிகைகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு வருவதானது வரவேற்கப்படக்கூடிய விடயமாகும். 'இதன்மூலம் சிங்கள பத்திரிகைகளின் செய்திப் பார்வையினை தமிழ் பேசும் மக்கள் அறியக் கூடியதாக இருப்பதுடன், தமிழ் நாளிதழ்களில் வெளிவராத அல்லது நேரடியாகப் பிரசுரிக்க முடியாத விடயங்களையும் அறியக் கூடியதாக உள்ளது. சிங்கள நாளிதழ்களின் செய்திகளானது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அப்படியே வெளி வருவதனால் அச்செய்திகளின் நம்பகத்தன்மைக்கு அப்பால், இப்படியும் செய்திகள் உண்டு என்பதை அறியக் கூடியதாய் இருப்பதே பெரிய விடயமாகும்.

ஆயினும் ஒரு வேண்டு கோள் ஒரு பக்க செய்திகளை மட்டும் மொழிபெயர்த்து வெளியிடாமல் பொதுவான சகல செய்திகளையும் வெளியிடுவதே நன்மை பயக்கும் இல்லையேல் சிங்கள நாளேடுகள் மீதான சேறு பூசும் நடவடிக்கையாகவே அது போய் முடியும் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

*க. சுந்தரலிங்கள், மட்டக்குளி.*

## இலைமறை காய்கள்

இலங்கை வானொலி தென்றல் சேவையில் தினமும் மாலையில் ஒலிக்கும் இதய வீணையில் அறிவிப்பாளராக விளங்கும் மதிவண்ணன் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர். சிறந்த அறிவிப்பாளரான இவர், செய்தி வாசிப்பதிலும் நேர்காணலிலும் சிறந்து விளங்கும் அதேவேளை அப்படி மதிவண்ணனது திறமை குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியினுள்ளேயே முடங்கிப் போனது என்பது ஆச்சரியமே? அவரைப்போல் ஏராளமானோர் இலைமறை காயாக நாடு முழுவதும் இருக்கின்றார்கள். அவர்களுக்குள் ஒருவராக விளங்கும் மதிவண்ணனை தரம் கண்டு அடையாளப்படுத்திய இதய வீணையின் வளர்ச்சிக்கு எமது வாழ்த்துக்கள்.

*சப்ரினா, பஸ்மினா பர்வீன், காத்தாக்குடி.*

## சங்கீதமான உச்சரிப்பு

இலங்கையில் வானொலி வரலாற்றில் தலை சிறந்த பல செய்தி வாசிப்பாளர்களை நாம் அறிந்தும் கேட்டும் உள்ளோம். தமிழில் சரியாக உச்சரிக்க வேண்டுமா? வானொலியில் செய்தி யறிக்கையினைக் கேள் என தமிழ் நாட்டில் முன்னர் கூறுவார் களாம். தற்போது அதற்கு முற்றிலும் பொருத்தமான வராக விளங்குபவர் ஒலிபரப்பாளர் சங்கீதா பாக்கியராஜா ஆவார். தனக்கிருக்கும் குரல் வளத்துடன் அழுத்தம் திருத்தமான சொற்பிரயோகத்தை துல்லியமாகப் பிரயோகித்து செய்திகளை அவர் வழங்குகின்றார் என்றால் அது மிகையாகாது (நான் இங்கே வானொலி அறிவிப்பை அல்ல செய்தி வாசிப்பினையே குறிப்பிடுகின்றேன்) சற்சொரூபவதி நாதன், ராஜேஸ்வரி ஷண்முகம் போன்ற பெண் ஒலிபரப்பு சிகரங்களை நிச்சயம் சங்கீதா பாக்கியராஜாவும் எட்டுவார் என வாழ்த்துகின்றேன்.

*றொபேர்ட் வயலட், சுண்டுக்குளி.*

## நாகபூஷணிக்கு வாழ்த்துக்கள்

தற்போது இலங்கை வானொலிக்கு நிகராக தனியார் வானொலிகளும் தமது ஒலிபரப்பினை விஸ்தரித்துக்கொண்டு செல்வதால் ஏராளமான அறிவிப்பாளர்கள் நம்முன் தோன்றியுள்ளனர். ஆயினும் இலங்கை வானொலியில் பழைமையினைப் பேணி தனக்கென ஒரு புதுப்பாணியிலான அறிவிப்பினை வழங்குபவர் நாகபூஷணி என்றால் அது மிகையாகாது. ஆர்ப்பாட்டமில்லாத குரலில் அமைதியாகவும், தெளிவாகவும் அவர் கதை சொல்வது போல செய்தி வாசிக்கும் அழகே தனி. பல புதிய அறிப்பாளர்களுக்கு எதிர்காலத்தில் அவர் ஒரு முன்னோடியாகத் திகழ்வார் என்பது திண்ணம்.

*எல்.எம். ஜஸ்மின், கல்கிசை*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் சுவர்ணவாஹினி

பிரபல்யமான தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனங்களில் சுவர்ணவாஹினியும் ஒன்று, நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறும் குண்டு வெடிப்புக்கள் மற்றும் நிகழும் விபத்துக்கள் போன்ற நிகழ்வுகளை செய்தியாக்கும் போது அவற்றை சம்பவம் நிகழும் போதே வீடியோப் படம் பிடிப்பது என்பது இயலாத காரியம் ஆயினும் தற்போதுள்ள தொழில் நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி இடம்பெறும் சம்பவத்தினை அப்படியே கம்பியூட்டர் கிராப்பிக்ஸில் வெளிக் கொண்டுவரும் சுவர்ணவாஹினிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் ஆயிரம் வார்த்தைகளினால் சொல்லுவதை விட தத்ரூபமாக நிகழ்வுகளைக் காட்டுவதானது பாமரருக்கும் புரியும் விடயமாகும்.

அதேவேளை தமிழ் திரைப்படங்களை புதன்கிழமைகளில் ஒளிபரப்பும் சுவர்ணவாஹினி, நேரகாலம் பிந்தி ஆரம்பதும் ஒரு திரைப்படத்தை பாதிபாதியாக இரு கிழமைகள் ஒளிபரப்புவதும் தமிழ் பேசும் நேயர்களை மாற்றாந்தாய் மனப்பாங்கோடு நடாத்துகின்றதா? எனும் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. எனவே சுவர்ணவாஹினி இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யுமா?

*அகமட் இக்ரம், உடதலவின்ன.*


**சிங்கப்பூரில் தங்குமிட வசதி**


சிங்கப்பூரில் விடுமுறையை கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இலவச போக்குவரத்து, வசதி வழிகாட்டி (guide) வசதி. மேலதிக விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியான அப்புலிங்கம்

கை தொலைபேசி எண் : 0065 97514941
தொலை நகல் (Fax) : 0065 64816144

LINGAM WEDDING SERVICES
153, Jalan Jarak, , Singapore 809281



**நவசித்தர் மாந்தீரீகம்**



ஓம் குருவே நம : கர்மவினைகளினால் தீயசக்திகளினால் ஏறபட்ட தீராத உடல் நோய் குடும்பப் பிரச்சினை, காதல் விவகாரம், வியாபாரம், கல்வி, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பயணம், பிரிந்தவர் ஒன்றுசேர வேண்டாதவரை விலக்க இன்னும் அனேக காரியங்களுக்கு மஹாசக்தி உபாசகர் மட்டக்களப்பு பரம்பரை சித்த ஆயுள்வேத மாந்தீரீக மருத்துவர்.

Dr. T. Murukuppillai (S.A.M.P),Main Street, Pandiruppu - 01, Kalmunai. (Sri Lanka) Tel : 067-2224077, வெளிநாடு 0094672224077


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமை யாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk





**மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.


அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -1 1 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்



**“தமிழ்நாட்டு அரசியலும் இலங்கையும்; இருக்கக்கூடிய வழி” என்ற தலைப்பில் கே.கொடகே என்பவர் எழுதிய கட்டுரையில் சில பகுதிகள் தமிழாக்கம் செய்யப்பட்டுக் கடந்த வாரம் இப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஒன்பதாம் திகதி ‘டெயிலி மிரர்’ ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரைக்குப் பதில் கட்டுரையொன்று கடந்த 19ஆம் திகதிய டெயிலி மிரர் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. எம்.எஸ்.ஷாஜகான் என்பவர், கொடகேயின் கட்டுரையில் சில தவறுகள் காணப்பட்டதாகக் கூறி, அப் பதில் கட்டுரையை எழுதியிருந்தார். அவரது கட்டுரையிலிருந்து முக்கிய பகுதிகள் இங்கே மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன.**

# இலங்கைப் பிரச்சினையில் தமிழகக் கட்சிகளின் ததிங்கிணதோம்!

**1. 1972ஆம்** ஆண்டு கருணாநிதிக்கும் எம்.ஜி.இராமச்சந்திரனுக்குமிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றதையடுத்து தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்டார். இதனையடுத்து எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை (அ.தி.மு.க) ஸ்தாபித்தார். பின்னர் இக் கட்சி அகில இந்திய தி.மு.க.வெனப் பெயர் மாற்றப்பட்டதென்று ..கொடகே குறிப்பிட்டிருந்தார். அகில இந்திய தி.மு.க என்றல்ல, அகில இந்திய அண்ணா தி.மு.க. என்றே பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அண்ணா - அதாவது அண்ணாத்துரையின் பெயரை நீக்க எம்.ஜி.ஆர். துணியவில்லை. தேசியப் பார்வையைக் கைவிட்டு பிராந்திய நோக்குக் கொண்ட தி.மு.க. மற்றும் இந்தியக் கட்சிகளை பிரதமர் இந்திரா காந்தி தடை செய்யலாமென்று எழுந்த சந்தேகத்தின் காரணத்தினாலேயே அண்ணா தி.மு.க.வுக்கு அகில இந்திய அ.தி.மு.க. என்று பெயரிடப்பட்டது.

2. தி.மு.க.விலிருந்து பிரிந்து தோற்றம் பெற்றது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும். தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்ட வி.கோபாலசாமி என்பவரால் 1994ஆம் ஆண்டு இக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இவருக்குப் பின்னர் வைகோ என்பவர் அக்கட்சியின் பொறுப்பை ஏற்றார். இவர் புலிகளின் நெருங்கிய ஆதரவாளராவார் என்று கொடகே எழுதியிருந்தார். தி.மு.க.வில் அங்கம் வகித்த வையாபுரி என்பவரின் மகனே கோபாலசாமி. இதனால் வை.கோபாலசாமி வைகோ என்று அழைக்கப்பட்டார். இவரே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகராவார். இவர் எவருடைய பொறுப்பையும் கையேற்கவில்லை. இவர்தான் எம்.பி.யாகவிருந்தபோது 1980களில் பாக்கு நிரிணையை களவாக படகொன்றின் மூலம் கடந்து பிரபாகரனைச் சந்திப்பதற்காகச் சென்றவராவார். கருணாநிதியின் மகன் ஸ்டாலினிற்கு அரசியல் ரீதியில் சவாலாகத் திகழ்ந்தவர் என்பதாலேயே இக்கட்சியிலிருந்து வைகோ வெளியேற்றப்பட்டார். இவர் புலிகள் மீது கொண்டிருக்கும் அபிமானத்தினால் இவருக்கு கஷ்டங்களும் நன்மைகளும் கிடைத்திருக்கின்றன.

பிரபாகரன் மீது இவர் அபிமானம் கொண்டிருக்காவிட்டால், இவரது கட்சி மேலும் பலம் பெற்றிருக்குமென்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். புலிகள் இயக்கத்தின் மீது இவரது முழுக் கட்சியுமே ஆதரவளிக்கவில்லை என்று சொல்லலாம். வைகோவின் கொள்கையை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மாட்டாத ஒரு தரப்பினர் இக்கட்சிக்குள் இருக்கின்றனர். புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக ஆதரிப்பது இந்திய அரசியலைப் பொறுத்தவரை சிக்கலுக்குரியது என்று கருதும் அரசியல் ஆர்வம் கொண்ட இரண்டாம் மட்டத் தலைவர்கள் சிலர் இக் கட்சிக்குள் உள்ளனர். ஆனால், புலிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் கட்சிக்குக் கிடைக்கும் அபரிமிதமான நிதியுதவி அனைவரையும் வாயடைக்க வைத்துள்ளது என்று கூறப்படுகிறது. சட்டத்துறையில் எம்.ஏ.பட்டம் பெற்ற வைகோ சிறந்த எழுத்தாளர், வாசகர், சிறந்த பேச்சாளர். இவரது தாய் மொழி தெலுங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் அவரது கட்சியான அனைத்திந்திய அ.தி.மு.க.வும் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கொண்டதென்று கொடகே கூறுகிறார். இன்று அது உண்மையாக இருக்கலாம். நேற்று அவர்கள் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருக்கவில்லை. நாளை அவர்கள் எந்த நிலைப்பாட்டினை எடுப்பார்களென்று எவருமே கூற முடியாது. தி.மு.க.வோ அல்லது அனைத்திந்திய அ.தி.மு.க.வோ நிரந்தரமாக புலிகளுக்கு ஆதரவாகவோ எதிராகவோ இருந்ததில்லை. அல்லது இந்த இரு கட்சிகளின் தலைவர்களும் நிரந்தரமாகப் புலிகளை ஆதரித்து வந்ததோ எதிர்த்து வந்ததோ கிடையாது. தமக்குச் சாதகமானபோது, தமது சொந்த அரசியல் நிலைமைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காகத் தமிழர் இலட்சியத்தைக் கையேற்று காற்றடிக்கும் பக்கமாகச் சாய்ந்து கொண்டார்கள். பாதிக்கப்பட்ட தமிழர்களின் நலனை விடத் தமது நலன்களையே பார்த்துக் கொண்டார்கள்.

ராஜீவ் காந்தியின் கடைசி நாள் வரை இலங்கைத் தமிழர்களுக்காகக் கருணாநிதி பெரிதாக ஒன்றும் செய்து விடவில்லையென்று விமர்சித்துவந்த ஜெயலலிதா, தமிழர் இலட்சியத்துக்கான பெரும் போராளியாகத் தன்னைக் காட்டிக் கொண்டார். ராஜீவின் படுகொலைக்குப் பின்னர் ஏற்பட்ட அனுதாப அலையையும் புலி எதிர்ப்பு வாக்குகளையும் தனக்குச் சாதகமாக்கி தனது சார்பு நிலையை மாற்றிக் கொண்டார். அத்துடன் ஒரு காலத்தில் எவர்களின் இலட்சியத்துக்காக ஜெயலலிதா போராடினாரோ, அவர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தனது பந்தோபஸ்தைப் பலப்படுத்திக் கொண்டார்.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர். பதவிக்கு வந்த பின்னர் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டிப்பதற்குத் தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். ஆரம்பத்தில் மறுத்தார். அப்படிக் கண்டிப்பது தனது சிங்கள விசிறிகளின் ஆதரவை இழக்கச் செய்து விடுமென அவர் நினைத்தார். கருணாநிதி இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் 83ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் அனைவரும் மாறினர்.

எல்லாமே மாற்றம் பெற்றன. களத்தில் தனக்குச் சிறந்த பந்தயக் குதிரையாக பிரபாகரன் திகழ்வாரென்ற தீர்மானத்தில் பிரபாகரனைத் தனது செல்லப் பிள்ளையாக்கிக் கொண்டார் எம்.ஜி.ஆர். ‘மகனே’ என்று அவர் பிரபாகரனை அழைத்தார். புலி இயக்கத்தின் மீது அவர் கொண்டிருந்த தாராள மனோபாவம் வாசகர்களை ஆச்சரியத்துக் குள்ளாக்கும்.

> **புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பாலசிங்கம் இது சம்பந்தமான பேச்சை எடுத்தபோது, அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர்., புலிகள் இயக்கம் தன்னிடமிருந்து எவ்வளவு தொகையை எதிர்பார்க்கின்றதென்று கேட்டார். எவ்வளவு தொகையென்றாலும் எம்.ஜி.ஆர். பெருந்தன்மையுடன் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாக அதிர்ச்சியுற்ற பாலசிங்கம் பதிலளித்தார். திடீரென தனது வலது கையின் இரு விரல்களை V வடிவில் காட்டிய எம்.ஜி.ஆர். இரண்டு போதுமா என்று தமிழில் கேட்டார். எம்.ஜி.ஆர். இரண்டு இலட்சம் ரூபாயைத் தான் குறிப்பிடுகிறாரென்று நினைத்த புலி இயக்க உறுப்பினர்கள் தலையசைத்தனர். முதலாவது சந்திப்பிலேயே பெருந் தொகைப் பணம் கிடைத்ததாக நினைத்து புலிகள் சந்தோஷப்பட்டனர். உண்மையிலேயே பாரிய தொகையான இரண்டு கோடி ரூபாவையே எம்.ஜி.ஆர். குறிப்பிட்டார்.**

“ஏமாற்றக்கூடிய நெஞ்சத்தின் உட்புறம்” என்ற தனது நூலில் எம்.ஆர்.நாராயண் சாமி கீழ்க்கண்டவாறு கூறுகிறார். (பக்கம் 108)

“புலிகள் இயக்கத் தூது கோஷ்டி தமது கெரில்லா அமைப்பின் வரலாற்றை எம்.ஜி.ஆருக்கு சுருக்கமாக எடுத்து விளக்கியதோடு, இலங்கையில் தமிழ் குடிமக்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திவரும் “கொடூரங்களை” எடுத்து விளக்கியது. இந்திய மற்றும் தமிழக மக்களினதும் அரசாங்கங்களினதும் ஆதரவையும் அனுதாபத்தையும் உண்மையாகவே பாராட்டுவதோடு பண உதவிக்கான அவசரத் தேவையிருப்பதாக புலி இயக்க உறுப்பினர்கள் எடுத்து விளக்கினர். எம்.ஜி.ஆர்.இவர்களுக்கு ஏதாவது செய்தாரா?

எம்.ஜி.ஆர். கதிரையொன்றில் படபடப்பின்றி அமர்ந்திருந்தார். கறுத்தக் கண்ணாடி அவரது கண்களை மறைத்திருந்தது. அவரது மொட்டைத் தலையை உரோமத் தொப்பிமறைத்திருந்தது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பாலசிங்கம் இது சம்பந்தமான பேச்சை எடுத்தபோது, அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர்., புலிகள் இயக்கம் தன்னிடமிருந்து எவ்வளவு தொகையை எதிர்பார்க்கின்றதென்று கேட்டார். எவ்வளவு தொகையென்றாலும் எம்.ஜி.ஆர். பெருந்தன்மையுடன் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாக அதிர்ச்சியுற்ற பாலசிங்கம் பதிலளித்தார். திடீரென தனது வலது கையின் இரு விரல்களை V வடிவில் காட்டிய எம்.ஜி.ஆர். இரண்டு போதுமா என்று தமிழில் கேட்டார்.

எம்.ஜி.ஆர். இரண்டு இலட்சம் ரூபாயைத் தான் குறிப்பிடுகிறாரென்று நினைத்த புலி இயக்க உறுப்பினர்கள் தலையசைத்தனர். முதலாவது சந்திப்பிலேயே பெருந் தொகைப் பணம் கிடைத்ததாக நினைத்து புலிகள் சந்தோஷப்பட்டனர். உண்மையிலேயே பாரிய தொகையான இரண்டு கோடி ரூபாவையே எம்.ஜி.ஆர். குறிப்பிட்டார். அப்பணத்தை எம்.ஜி.ஆர். வைத்தபோது புலி இயக்க உறுப்பினர்கள் அதிர்ச்சியால் திகைத்து நின்றனர். அவர்கள் என்றுமே இந்தளவு பாரிய தொகையைக் கண்டதேயில்லை. பெரிய தொகையாக இருப்பதால் இத்தொகையை பகுதி பகுதியாகப் பெற்றுக் கொள்ள புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக மிக்க மரியாதையுடன் எம்.ஜி.ஆருக்குத் தெரிவித்தனர். முதலமைச்சருக்கு இதுபெரும் பிரச்சினையாக இருக்கவில்லை. புலிகளின் தூதுகோஷ்டி இச் செய்தியை பிரபாகரனுக்கு அறிவித்தபோது அவரும் அதிர்ச்சியடைந்தார். எம்.ஜி.ஆரின் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இயன்றவரை விரைவாக அவரைச் சந்திப்பதற்கு பிரபாகரன் தீர்மானித்தார். இவ்விருவரும் சந்தித்தபோது எடுக்கப்பட்ட ஆரம்பகாலப் புகைப்படங்களில் ஒன்று முடி கட்டையாக வெட்டப்பட்ட நிலையில் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன், முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு முன்பாக பணிவாக நிற்பதைக் காட்டியது. எம்.ஜி.ஆரின் பெருந்தன்மையைப் பிரபாகரன் என்றுமே மறந்ததில்லை. இதனால் எம்.ஜி.ஆர். மீது பெருமதிப்பு வைக்கத் தொடங்கினார். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் தங்கியிருந்த பிரபாகரன், நண்பர்கள் கேட்டுக் கொண்டபோதும் கூட, எம்.ஜி.ஆரின் ஜென்ம அரசியல் விரோதியான கருணாநிதியை சந்திக்கவோ வாழ்த்தவோ மறுத்தார். இலங்கை தமிழ் கெரில்லாக் குழுக்கள் அனைத்துக்கும் தலா 25 ஆயிரம் ரூபாவை வழங்கக் கருணாநிதி தீர்மானித்தபோது, அதனை ஏற்றுக்கொள்ள பிரபாகரன் மறுத்தார். உலகத் தமிழ் மக்களின் ஒரே தலைவனாகத் தன்னைக் கருதிக்கொண்ட கருணாநிதியோடு ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ இயக்கத் தலைவர்கள் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்தது போல, பிரபாகரன் கொடுக்க மறுத்தார். இது வெகுவாக எம்.ஜி.ஆரைக் கவர்ந்ததோடு இருவரின் உறவையும் வலுப்படுத்தியது.

இந்தியாவில் பிரபாகரனுக்குத் தஞ்சமளிக்கப்பட்டமை, அவர் இனியும் பதுங்கி வாழத் தேவையில்லையென்ற நிலையை ஏற்படுத்தியது. இலங்கையைப் போலன்றி, அவர் பயந்து வாழ வேண்டிய தேவை அங்கிருக்கவில்லை.

எம்.ஜி.ஆர். மரணமடைந்த பின்னர் அவரின் நீண்ட கால எதிரியான கருணாநிதியுடன் பிரபாகரன் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். தமிழ்நாட்டில் பிரபாகரன் தங்கியிருந்த நான்கு வருட காலத்தில் கருணாநிதியைப் புறக்கணித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கருணாநிதி இலங்கையில் இந்திய ‘கொடுமைகள்’ என்ற அரசியல் தடி கொண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தாக்கி மீண்டும் ஆட்சி பீடமேறுவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்.

ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் செயலாளர் நாயகமான பத்மநாபா 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னையின் மத்திய பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு அரை மணித்தியாலத்துக்குள் இக்கொலையில் புலிகள் இயக்கம் சம்பந்தப்படவில்லையென்று அந்த இயக்கத்தை தாஜா பண்ணுவதற்காக உத்தியோகபூர்வ அறிக்கையொன்றினை கருணாநிதி விடுத்திருந்தார். இது அவர் செய்த மிக மோசமான பிழையாகும். இது டில்லியிலுள்ள பலரை ஆத்திரப்படுத்தியது. அப்போதைய பிரதமர் சந்திரசேகரை ராஜீவ் காந்தி பின்னர் நிர்ப்பந்தித்து கருணாநிதியின் அரசைக் கலைத்து ஆளுநர் ஆட்சியைப் பிறப்பிக்க வழி செய்தது.

ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதில் கருணாநிதிக்கு அலாதிப் பிரியம். எனவே இதற்காக எவருடனும் அவர் கூட்டுச் சேர்ந்து கொள்வார். அதற்குத் தடையாக இருப்பவர்களிடமிருந்து என்றும் விலகியிருப்பார். 1991ஆம் ஆண்டு மே மாதம் நடந்த தேர்தலில் ஜெயலலிதா முதலமைச்சரானார். புதுடில்லியிலிருந்து தொந்தரவு வருவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் புலி இயக்கம் சம்பந்தப்பட்ட தனது செயற்பாடுகளில் மிகக் கவனமாக நடந்து கொண்டார். அன்றிலிருந்து தமிழர்களின் இலட்சியமென்ற பெரும் பொறுப்பை சிறிய கட்சிகளிடம் விட்டுவிட்டு அவர் ஒதுங்கிக் கொண்டார்.

இலங்கை விவகாரங்களைப் பொறுத்தவரை எவ்வளவு காலத்துக்கு அ.இ.அ.தி.மு.க. புலி எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருக்கப் போகிறது? எவ்வளவு காலத்துக்கு தி.மு.க. மௌனம் சாதிக்கப் போகிறது? காற்று மாறி வீசும் வரைதான் இவ்வாறு இருப்பார்கள். இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மீது பாதுகாப்புப் படையினரின் ‘கொடூரங்கள்’ என்ற அதே வார்த்தைகளைப் பயன்படுத்தும் போக்கு மெதுமெதுவாக ஆரம்பிக்கிறது போல் தெரிகிறது. இதுவே புலிகளின் திட்டமாகும். தமிழக மாநிலத் தேர்தல் மே மாதம் எதிர்பார்க்கப்படுவதால் ஒவ்வொரு தமிழனின் கொலையும் பெண்ணின் கற்பழிப்பெனக் கூறப்படுவதும் தமிழகத்தைக் கொதிக்க வைக்கும்.

தனது கூட்டாளிகளைச் சாந்தப்படுத்துவதற்காக, இலங்கைக்கு இராணுவ ரீதியில் உதவியளிக்க மாட்டோமென்று புதுடில்லி சொல்லித் தீர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பிரபல குறியீட்டுப் பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் அமெரிக்காவில் நாம் தங்கியிருக்க முடியுமா?

பிரபாகரனுக்கு என்றுமே சமாதானப் பேச்சுகளில் நம்பிக்கை இருப்பதில்லை. ஈடாட்டமான பொருளாதாரத்தைக் கொண்ட, இறைமைமிக்க நாடொன்று யுத்தத்துக்குச் செல்வது பயங்கரமானது. அது பட்டினியால் வாடும் பெண்ணொருத்தி அடிக்கடி கர்ப்பம் தரிப்பதைப் போன்றதாகும். யுத்தம் வேண்டுமென்று தூண்டும் அதே நபர்கள், வரிச் சுமையால் பாதிக்கப்படும்போது அரசுக்கெதிராக மாறுகிறார்கள்.

டெல்லி பலவீனப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டின் உதவி அதற்குத் தேவைப்படும் வரை பிரபாகரன் எந்த வல்லரசு குறித்தும் கவலைப்படப் போவதில்லை.


*நன்றி :– ‘டெயிலி மிரர்’*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

குமார், இசையமைத்து நான் எழுதுவதும் உண்டு; நான் எழுதி அவர் இசையமைப்பதும் உண்டு. அது எப்படியிருப்பினும், 'நெய்க்கு தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா? என்று பிரித்துணர இயலாதவண்ணம் எங்கள் பாட்டுக்களில் இருவரது பங்கும் பரவியிருக்கும்.

நானும் குமாரும் சேர்ந்து பல்லாண்டுகள் ஒரு 'Successful



Combination' ஆக இருந்து ஏராளமான ஹிட் பாடல்களை வழங்கியிருக்கிறோம்.

குமாருடைய மெட்டுக்களில், அந்நாளில் பணியாற்றிக் கொண்டிருந்த இசையமைப்பாளர்களின் பாதிப்பு கொஞ்சம் கூட இருக்காது. 'இது குமார் பாட்டு' என்று இனம் கண்டு கொள்ளலாம். அப்படி அவருக்கென்று ஒரு தனித்தன்மையை அவர் தக்க வைத்துக் கொண்டு பணியாற்றியதுதான் அவர் தனிச் சிறப்பு.

குமாரின் பாடல்கள் அனைத்திலுமே Classical Touches ஏராளமாக இருக்கும். யமுனா கல்யாணி கபபந்துவராளி முதலிய ராகங்கள் அவர் அடிக்கடி கையாளக் கூடியமையாகும். அவருடைய பின்னணி இசையில் புல்லாங்குழல் அதுவும் 'பன்னாலால் கோஷின் பாணி'யில் பிரதானமாக இடம் பெறும்.

தொலைபேசி இலாகாவில் பணி புரிந்த காலத்திலேயே அவர் தொல்லிசையையும், மெல்லிசையையும் கற்றுத் தேர்ந்திருப்பதை, அவர் பாடும் போது அருகிருந்து உணர்ந்தவன் நான்.

'எதிர் நீச்சல்', 'நூற்றுக்கு நூறு', 'இருகோடுகள்', 'வெள்ளி விழா' முதலிய கலாகேந்திரா படைப்புக்களில் எங்கள் இருவரது பங்கும் ஏராளமாக உள்ளது. அந்தப் படத்தின் பாடல்களெல்லாம் மிகவும் பிரபல்யம் பெற்று, சம்பந்தப்பட்டவர்களெல்லாம் சரியாமல் காப்பாற்றியிருக்கிறது.

'புன்னகை மன்னன்' பாடல் 'இரு கோடுகளின்' வெற்றிக்கு பலமான அஸ்திவாரம் என்பதையும், அதங்கு அற்புதமான இசையமைத்து பாடல் வரிகளைப் பரமளிக்கச் செய்தது குமார் என்பதையும், அந்தப் பாடல் 'பாப்புலராக' இருக்க வேண்டும் என்பதை மட்டுமே மனதில் கொள்ளாமல், காட்சிக்குப் பொருத்தமான கருத்தாழத்தோடு துலங்க வேண்டுமென்பதை நெஞ்சில் நிறுத்தி எழுதப்பட்டது என்பதையும்,

சராசரி ரசிகன் கூட இன்றளவும் உணர்ந்து பேசுகின்ற நிலையில் இருக்கும்போது - இதையெல்லாம் சொல்ல வேண்டியவர்கள் சொல்லாமல் கல்லாக இருந்துவிட்ட காரணத்தால் நானே சொல்ல வேண்டியிருக்கிறது.

பொதுவாக சினிமாவில், ஏறி வந்தவர்கள் ஏணிகளை உதாசீனப்படுத்திவிட்டு, இன்றைய சூழ்நிலைக்கேற்ப நிறம் மாறி நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளும் அறியாமை, எவரிடத்தும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

குமார் இசையமைத்த அனைத்துப் படங்களுக்கும் குமாரின் Contribution விகிதாசாரத்தில் வேண்டுமானால் வித்தியாசப்படலாமே தவிர, இறவே இல்லையென்று எவரும் சொல்ல இயலாது. குமாரின் பெரும்பாலான படங்களுக்குப் பாடலாசிரியானாக இருந்தவன் என்கிற முறையில் நான் சொல்லுவதுதான் முக்காலும் உண்மை.

எனக்கு வி.குமாருக்கும் இடையே சுதி சுத்தமாக ஒரு Vibration இருந்ததுதான் - பாடல்களின் வெற்றிக்கு முக்கியக் காரணம்.

குமாரின் இசைப்புலமையில் முழு நம்பிக்கை இருந்த காரணத்தால்தான்.

'வெள்ளிவிழா'ப் படத்தில் வருகின்ற் - 'உனக்கென்ன குறைச்சல்...' என்ற பாடலைப் பாட, திரு. விஸ்வநாத அண்ணன் மனப்மொப்பி வந்து பாடிக்கொடுத்தார்.

(தொடரும்.......)





# உலகின் முதன் முதலாக பரபரப்பை ஏற்படுத்திய செக்ஸ் ஊழல்

### இங்கிலாந்து மந்திரி இராஜினாமா

**இப்போதெல்லாம்** மந்திரிகள் மீது பல்வேறு ஊழல் புகார்கள் கூறப்படுவதும், அதனால் அவர்கள் பதவியை ராஜினாமா செய்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது.

இதுபோலவே செக்ஸ் விவகாரத்தில் சிக்கி அதன் காரணமாக பதவி இழந்த சம்பவங்களும் உண்டு.



பிரபியூமே



கீலர்

பண்டைய கால மன்னர்கள் ஆட்சி ஆனாலும் சரி, இக்காலத்து அரசியல் ஆனாலும் சரி, இந்த செக்ஸ் விவகாரம் பல பிரபலங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டு, அவர்களுடைய பதவிகளுக்கு வேட்டு வைத்து திருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க ஜனாதி பதியாக இருந்த பில் கிளிண்டனுக்கும், வெள்ளை மாளிகை (ஜனாதிபதி மாளிகை) பணிப்பெண் மோனிகா லெவின்ஸ்கிக்கும் இடையே ஏற்பட்ட செக்ஸ் விவகாரம் புயலை கிளப்பியது. கோர்ட்டு வரைக்கும் சென்ற இந்த விவகாரம், ஒரு வழியாக சுமுகமாகி கிளிண்டனின் பதவி தப்பியது.

இந்த செக்ஸ் விவகாரம் இன்று நேற்றல்ல, 40 ஆண்டுகளுக்கு முன்பே அரங்கேறி உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

### இங்கிலாந்து மந்திரி

முதன் முதலாக செக்ஸ் விவகாரத்தில் சிக்கி, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மந்திரி ஒருவர் பதவியை இழந்தார். இது 1963ஆம் ஆண்டில் நடந்தது.

அந்த மந்திரியின் பெயர் பிரபியூமோ. இங்கிலாந்து மந்திரி சபையில் யுத்த மந்திரியாக பதவி வகித்தார். கன்சர்வேடிவ் (பழமையாளர்) கட்சியைச் சேர்ந்தவர். 48 வயதான மந்திரி பிரபியூமோ திருமணம் ஆனவர். மனைவி பெயர் வேலரி காட்சன். இவர் நடிகையாவார்.

### அழகியுடன் தொடர்பு

பிரபியூமோவுக்கும், கிறிஸ்டியன் கீலர் என்ற அழகிக்கும் காதல் ஏற்பட்டது. இதே சமயம் கீலருக்கும், ரஷ்ய கடற்படை அதிகாரிக்கும் தொடர்பு இருந்தது.

அழகி கீலரின் தொழிலே விபசாரம்தான். இதனால் மந்திரி பிரபியூமோ - "கீலர் காதல் விவகாரம் பத்திரி கைகளில் வெளியாகியது. கீலர் ஒரு விபசாரி. ரஷ்ய அதிகாரியுடனும் தொடர்பு வைத்திருக்கிறாள். எனவே, இங்கிலாந்து நாட்டின் இராணுவ, அரசாங்க இரகசியங்கள் பிரபியூமோ மூலம் கீலருக்குத் தெரிந்து, ரஷ்யாவுக்குப் போய்விட்டன" என்று பத்திரிகைகள் எழுதின.

இதனால் இந்த விவகாரம் இங்கிலாந்து அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியது.

### குட்டு உடைந்தது

ஆனால், இந்த விவகாரத்தை பிரபியூமோ திட்டவட்டமாக மறுத்தார். எனக்கும், அவளுக்கும் (கீலர்) தொடர்பு இல்லை. அப்படி கூறப்படுவது சுத்தப்பொய் என்று கூறினார்.

அவருடைய இந்த மறுப்பு வெகு நாளைக்கு நிலைக்கவில்லை. குட்டு உடைந்து உண்மை வெளிவந்தது.



கீலர் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டு முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டாள். அந்த விசாரணையின்போது அவள், எனக்கும், பிரபியூமோவுக்கும் தொடர்பு உண்டு என்று கூறிவிட்டாள்.

இதனால் கீலருடன் உள்ள தொடர்பை மந்திரி பிரபியூமோவும் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

### ராஜினாமா

இதனைத் தொடர்ந்து 1963ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி மந்திரிப் பதவியை பிரபியூமோ ராஜினாமா செய்தார். தனது ராஜினாமா கடிதத்தை இங்கிலாந்து பிரதமருக்கு அனுப்பி வைத்தார்.

அந்த ராஜினாமாக் கடிதத்தில் அவர் கூறி இருந்ததாவது :-

### பொய் சொல்லிவிட்டேன்


அரசாங்க ரகசியங்கள் எதையும் நான் கீலருக்கு தெரிவிக்கவில்லை. என்றாலும் உண்மையை மறைத்து, கீலருடன் எனக்கு தொடர்பு இல்லை என்று கூறி இருந்தேன். என் குடும்ப கௌரவத்திற்காக நான் பொய் சொல்லிவிட்டேன். அப்படி பொய் சொன்னதால் இனி பதவியில் நீடிக்க எனக்கு அருகதை இல்லை. மந்திரிப் பதவியை ராஜினாமா செய்கிறேன்.

இவ்வாறு பிரபியூமோ தெரிவித்து இருந்தார். செக்ஸ் விவகாரத்துக்காக உலகில் முதல் முதலில் பதவியை இழந்த மந்திரி இவர்தான்.

# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

**அவற்றில்** ஆயுதங்கள் பொருத்தி, வேண்டிய இலக்குகளை தாக்கும் திட்டத்தை அமெரிக்கா வேகமாக தயாரித்துக் கொண்டிருக்கிறது. நட்சத்திரப் போர் (Star War) என்கிற அழகான பெயரில் இது அழைக்கப்படுகிறது. உலகப் பெரும் வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு அனு ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டு வருகின்றன. மனித சிந்தனையின் வேகத்துக்கு இணையாக விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் நுணுக்க முன்னேற்றமும் ஏற்பட்டு வருகிறது.

இதன் விளைவாக ஒரு நாட்டின் ரகசியங்களை இன்னொரு நாடு அறிந்து கொள்ளும் முயற்சி வேகப் பட்டிருக்கிறது. CIA, KGB ஒற்றர்கள் உலகெங்கும் பரவி செயல்பட்டுக் கொண்டிக்கிறார்கள். பத்திரிகைகள், டெலிவிஷன், ரேடியோ போன்றவை சக்தி வாய்ந்த பிரசார சாதனங்களாக விளங்குவதால் அவற்றில் வேலை செய்கின்றவர்களை தங்களுடைய கையாட்களாக ஆக்கிக் கொள்வதில் உளவு நிறுவனங்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. அவர்கள் மூலம் தாங்கள் சார்ந்துள்ள நாடுகளுக்கு சாதகமான அபிப்பிராயங்களை உருவாக்குவது சுலபம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். குறிப்பாக இந்தியா போன்ற வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளை தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ள வல்லரசுகள் பெருமுயற்சிகளில் ஈடுபடுகின்றன. ஒரு பத்திரிகையில் வேலை செய்யும் ஆசிரியர்கள் பெறுகின்ற சம்பளத்தைப்




போல பல மடங்கு ஊதியத்தை அவருக்குக் கொடுத்து, அவரைத் தங்களுடைய ஆதரவாளராக ஆக்கிக் கொள்ள வல்லரசு உளவு நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. இதைவிடப் பெரிய வேடிக்கை என்ன வென்றால் தகவல்களை அவர்களே கொடுத்து அதையே கட்டுரையாக எழுதி பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படியான ஏற்பாடுகளையும் அவர்களால் செய்ய முடிகிறது என்பதாகும். பத்திரிகைகளில் வெளியாகின்ற தகவல்களை மக்கள் தொடர்ந்து படிக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாக அந்த எண்ணங்களின் ஆதிக்கத்திற்குள் அவர்கள் வந்து விடுவதை எவரும் மறுக்க முடியாது. ரேடியோ, டெலிவிஷன் போன்ற அமைப்புகள் தனியார் நிறுவனமாக செயல்படும் நாடுகளில் அந்நிய சக்திகளின் ஊடுருவல் சுலபமாக நடைபெற்று விடுகிறது. தாங்கள் எடுக்கும் பிரசாரம் கலந்த படங்களை டெலிவிஷன் நிறுவனங்களுக்கு மலிவான விலையில் விற்று சில சமயங்களில் இலவசமாகவும் கொடுத்து, தங்களுடைய கருத்துக்களைப் பரப்பும் முயற்சிகளில் வல்லரசுகள் ஈடுபடுவதும் உண்டு. இந்த விஷயத்தில் அமெரிக்கா, ரஷ்யாவையும் ரஷ்யா, அமெரிக்காவையும் சர்வ சாதாரணமாக, குற்றம் சாட்டுவதை பார்க்க முடியும். குறிப்பாக இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் இந்திய-அமெரிக்க நட்புறவு அமைப்புகளும் இந்திய-சோவியத் நட்புறவு அமைப்புகளும் இந்திய - சோவியத் நட்புறவு கழகங்களும் தாராளமாகவே செயல்பட்டு வருகின்றன. இந்தியாவுக்கும் இந்த நாடுகளுக்கும் நட்புறவை வளர்ப்பதுதான் இந்த அமைப்புக்களின் நோக்கம் என்று சொல்லப்பட்டாலும் தங்களுடைய கையாட்களை உருவாக்குவதற்கும் இந்த அமைப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# ஓர் குறுக்கு விசாரணை மேலை நாட்டில் அல்ல கொழும்பில்

சாட்சி :- நான் எனது 11 வயது முதலே ஷமந்தவுடன் பழகி வருகின்றேன். இரவு களியாட்ட விடுதிகளுக்கு செல்வது எனக்கு பிடிக்கும் தாஜ் ஹோட்டலில் உள்ள புளூ எலிபன்ட் கிளப் எனக்கு மிகவும் பிடித்த இடம்.

*வழக்கறிஞர்:- நீங்கள் மது அருந்துவீர்களா?*

சாட்சி : ஆம், என்னுடைய மற்றைய நண்பர்களைப் போல நானும் மது அருந்துவேன்.

*வழ : எப்போதிலிருந்து?*

சாட்சி : என்னுடைய 15 வயதில் இருந்து. அது மட்டுமல்ல, நண்பர்களுடன் நடனமும் ஆடுவேன்.

*வழ : நீங்கள் குற்றவாளியுடன் தனிமையாக இருந்துள்ளீர்களா?*

சாட்சி : ஆம். பையன்கள், பெண்பிள்ளைகளுடனும், பெண்பிள்ளைகள், பையன்களுடனும் வெளியே செல்வது சகஜம். அதில் தவறேதும் இல்லை நானும் அவருடன் தனிமையில் இருந்துள்ளேன்.

*வழ : குற்றவாளியுடன் நெருக்கமான உறவு ஏதும் உங்களுக்கு உண்டா?*

சாட்சி : ஆம். நட்புக்கு மீறிய ஒரு விடயம் கடந்த வருடம் இடம்பெற்றுள்ளது.

*வழ: அது என்ன நெருக்கமான உறவு?*

சாட்சி : முத்தமிட்டோம். அதை விடக் கூடதலான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டோம்.

மேற்கூறிய உரையாடல் என்ன என்று யோசிக்கின்றீர்களா, கடந்த ஜூன் 30ஆம் திகதி கொழும்பு றோயல் பாக் சொகுசு தொடர்மாடி மனையில் கொலை செய்யப்பட்ட அழகி ஈவோனின் மரண விசாரணையில் அவரின் தங்கை கரோலின், தனக்கும் குற்றவாளிக்கும் இடையிலான தொடர்பினைப் பற்றிக் கூறியதுதான். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி வழக்கு நடந்தபோது வழக்கறிஞரின் விசாரணையின் போது பதிலளித்த சாட்சியின் தற்போதைய வயது 16 என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அரச மாளிகை பற்றிய சில திடுக்கிடும் தகவல்கள்

**மறைந்த** இங்கிலாந்து இளவரசி டயானா உலகப் புகழ்பெற்ற பெண்மணி. இளவரசர் சார்லசை மணந்து வில்லியம், ஹரி என்ற இரு குழந்தைகளுக்கு தாய். சார்ல சுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால் அரச குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்.

பின் டோடி அல் பயத்துடன் காதல் கொண்ட அவர் 1997-இல் பாரீஸ் நகரில் ஒரு விபத்தில் மரணமடைந்தார். டயானா அரச குடும்ப வாழ்க்கையை விரும்பாத சுதந்திர பறவை. ஆனால் அந்த இளம் பறவை பலரின் வேட் டைக்கு உள்ளான மர்மங்கள் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

டயானா வாழ்க்கையில் நடந்த திரைமறைவு இரகசி யங்களை அவரிடம் 6 வருடம் மெய்க்காப்பாளராகப் பணி யாற்றிய கென்வார்ப் அம்பலப்படுத்துகிறார்.

1993-ஆம் ஆண்டு டயானா தனது மகன்கள் வில் லியம், ஹரியுடன் ஆஸ்திரியா லீச் நகரத்திற்கு பயணம் சென்றார். அது பனி சறுக்கு விளையாடுவதற்கு ரம்மிய மான இடம். பல்வேறு நாடுகளின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கோடீஸ்வரர்களும் குவியும் நாடு அது. சொர்க்கலோகம் போன்ற உல்லாச வாழ்க்கை நகரம் அது.

அங்கே ஆல்ப்பெர்க் ஓட்டலில்தான் டயானா தன் இரு மகன்களுடன் தங்கிருந்தார்.

ஒருநாள் சரியாக காலை 6.00 மணிக்கு நான் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தேன். திடீரென எனது அறைக்கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. நான் என் உறக்கத்தைக் கலைத்து விட்டு கதவைத் திறந்தேன். இரவு நேர பாதுகாப்பு அதிகாரி மார்க் ஜாவோஸ்கி நின்றி ருந்தார். அவரது முகத்தில் பீதி பரபரப்பு.

இளவரசி இப்போது நன்றாகத்தானே இருக்கிறார் என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. மார்க் எதற்காக இப்படி பூடகமாக கேட்கிறார் என்று நினைத்தேன். என்ன நடந்தது என்று கேட்டேன். மார்க் மூச்சு வாங்கியவாறே பேசத்தொடங்கினார்.

அதிகாலை 5.30 மணி இருக்கும் ஹோட்டலின் கதவு மணி அடிக்கும் சத்தம் கேட்டது.

ஓடிச்சென்று பார்த்தேன். காரில் இருளில் ஸ்கார்ப், தொப்பி அணிந்து இளவரசி வெளியே நின்று இருந்தார். என்னைப் பார்த்ததும் குட்மார்னிங் என்று கூறி விட்டு தனது அறைக்கு போய்விட்டார்.

அதைக் கேட்டதும் எனக்கு தூக்கி வாரி போட்டது. மார்க் யாருக்கும் தெரியாமல் எப்படி இளவரசி வெளியே போனார்.




இப்போது அவர் எங்கே. என அடிவயிற்றில் இருந்து கேள்வி வந்தது. அவரது ரூமில்தான் இருக்கிறார் என்று மார்க்கூறியதும்தான் எனக்கு நிம்மதி வந்தது. எப்படி போனார் நான் மார்க்கிடம் கேட்டேன். அவர் முன்பக்க வாசல் வழியாக போயிருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னதும் நான் வெளியே எட்டி பார்த்தேன்.

நாங்கள் அந்த ஓட்டலின் முதல் மாடியில் தங்கி இருந்தோம். பல்கனியில் இருந்து கீழே உள்ள புல் தரைக்கு 20 அடி உயரம் இருக்கும். அவர் பல்கனி வழியாக குதித்துதான் வெளியே சென்று இருக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். உடனே நான் கீழே சென்று புல்வெளியைப் பார்த்தேன். அங்கு காலடி தடங்கள் இருந்தன.

நல்லவேளை அவர் கீழே குதித்த போது பனி அதிகமாகப் பெய்து கொண்டு இருந்ததால் அவருக்கு அடியேதும் விழவில்லை.

இளவரசி அதற்கு முந்தைய ஆண்டுதான் இளவரசர் சார்ள்ஸிடம் இருந்து பிரிந்து இருந்தார். பத்திரிகைக் காரர்களும் புகைப்படக்காரர்களும் துரத்தி துரத்தி செய்தி சேகரித்த நேரம் அது.

மறுநாள் டயானாவிடம் நீங்கள் நேற்று இரவு எங்கு சென்றீர்கள் என்று கேட்டேன். அது எனக்குள் இருக்க வேண்டிய இரகசியம் என்று கூறிவிட்டார். அத்துடன் நான் பேச்சை முடித்துக் கொண்டேன். இரண்டு வாரங்கள் கழித்து நான் லீச் நகருக்குச் சென்ற போதுதான் அவர் யாரை சந்திக்கச் சென்றார் என்பது தெரியவந்தது.



செல்சியா (இங்கிலாந்து) நகரின் மிகப்பெரிய கோடீஸ் வரர்களில் ஹோரே என்பவரும் ஒருவர். ஈரானிய ஓவியக் கலைகளில் மிகுந்த நாட்டம் கொண்டவர். இவரது மனைவி டாயனே. இவர் பிரெஞ்சு அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண் மணி. இதனால் இவர்களுக்கு இங்கிலாந்து அரச குடும்பத் தவருடன் நெருக்கம் உண்டு.

1985ஆம் ஆண்டு ஹோரேவும் அவரது மனைவி டாயனேவும் ஒருமுறை லண்டனுக்கு வந்தார்கள். இருவரும் ராணியின் விருந்தினர்களாக ஒருவாரம் வின்ட்சர் காஸ்டில் அரண்மனையில் முகாம் போட்டார்கள். அந்த ஒரு வாரமும் கேளிக்கை, விருந்துதான். ஹோரே பார்ப்பதற்கு ஆள் ஜோராக இருப்பார். அப்போது ஹோரேவுக்கு வயது 39. இளவரசி டயானாவுக்கு வயது 25.

ஹோரேவும், டயானாவும் ஒருவரையொருவர் அப் பொழுதுதான் முதல் முறையாகப் பார்த்துக் கொள்கிறார்கள். ஹோரே கை குலுக்க முன்வருகிறார். (அரச குடும்பத்தில் ஆண்-பெண் கைகுலுக்கி கொள்வது சகஜம்.) ஆனால் டயானாவின் முகத்தில் வெட்கம், நாணம் பீறிடுகிறது. தயங்கிக் கொண்டே ஹோரேவுடன் கைகுலுக்குகிறார்.

அதன்பிறகு டயானாவே, தான் ஹோரேவுடன் கைகுலுக் கியபோது வெட்கப்பட்டதாக ஒப்புக் கொண்டும் இருக்கிறார். ஹோரேயின் மனைவி டாயனவும் இளவரசி டயானாவும் அவரவர் குடும்ப சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ள நட்பு வலுப்பெற்றது.

டயானா, ஹோரேயையும் அவரது மனைவி குழந்தை களையும் தனது கென்சிங்டன் மாளிகைக்கு அழைத்து விருந்தும் கொடுத்தார். இந்த நேரத்தில்தான் இளவரசர் சார்லஸ் - காதலி காமில்லா பார்க்கர் விவகாரம் சூடுபிடித்துக் கொண்டிருந்தது.

ஹோரேயிடம் தனது மனக்குமுறலைக் கொட்டினார் இளவரசி. ஹோரேம் சார்ள்ஸ் - டயானா பிரச்சினையை தீர்க்க முன் வந்தார். அது திசைமாறியது. சார்லஸ் - காமில்லா பார்க்கா காதல் விவகாரத்தை ஹோரே மூலம் தணிக்க முயன்ற இளவரசி டயானா மெல்ல மெல்ல காதல் பாதைக்கு மாறிவிட்டார்.

ஹோரேவுக்கோ டபுள் கொண்டாட்டம். ஒருபக்கம் இளவரசர் சார்ள்ஸ் - காமில்லா விவகாரத்தைத் தலையிட்டு சமாளிப்பது மாதிரி போக்கு காண்பித்துக் கொண்டே டயானாவின் அன்பையும் பெற்று விட்டார்.

செல்சியா நகருக்கு ஹோரே திரும்பிய பிறகும் டயானா சும்மா இருக்கவில்லை. அவ்வப்போது போனில் சார்ள்ஸ் பற்றி தொண தொணக்க ஆரம்பித்துவிட்டார். ஹோரே ஆறுதல் கூற டயானாவுக்கு அவர் மீது அபரிமிதமான காதல் வளர்ந்தது.

1992ஆம் ஆண்டு வாக்கில் டயானா முழுவதுமாக தன்னை மறந்து ஹோரேவை காதலிக்கத் தொடங்கிவிட்டார். இன்னும் புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் ஹோரேவை முதல் தடவையாக டயானா பார்த்தபோதே அவரிடம் மனதை அடகு வைத்து விட்டார். ஒரு கம்பீரமான ஆண் என்றால் ஹோரேயை மாதிரித்தான் இருக்க வேண்டும் எனவும் நினைத்தார்.

இவர்கள் இருவரும் இது போன்று காதலை வளர்த்துக் கொண்டாலும் பட்டும்படாத மாதிரி சற்று தூரத்தில் நிற்பது மாதிரித்தான் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

ஒருநாள் சார்ள்ஸ் இல்லாத நேரத்தில் ஹோரே இளவரசி டயானாவின் கென்சிங்டன் அரண்மனைக்கு வந் தார். இது புதிய விஷயம் அல்ல. இருவரும் தனிமையில் பேசிக்கொண்டிருந்தனர். அதன்பின் டயானா என்னிடம் உதிர்த்த வார்த்தைகள்தான் என்னால் புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. கென், நாங்கள் பேசிக்கொண்டுதான் இருந்தோம். அவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். இனிமை யான மனிதர் என்று என்னிடம் சொன்னார்.

ஒரு ஆண் அழகானவர், பழகுவதற்கு இனிமையானவர் அனுபவம் வாய்ந்தவர் என்றால் அதற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

அன்று விடிகாலை 3.30 மணி இருக்கும். இளவரசியின் அறை பக்கமிருந்து திடீரென்று புகை அலாரம் அடிக்க ஆரம்பித்தது. நான் ஐயோ இளவரசிக்கு என்ன ஆயிற்றோ ஏது ஆயிற்றோ என்ற பீதியில் அலறியவாறு அவரது அறையை நோக்கி ஓடினேன். ஆனால் இளவரசியின் அறைக்குள் நுழையும் முன்பே ஒரு பொலிஸ்காரன் என்கிற முறையில் அங்கே நடந்ததை என்னால் ஊகிக்க முடிந்தது.

அந்த அறையில் ஒரு பெரிய செடி. அருகே தலை கலைந்த கோலத்தில் ஹோரே சிகரெட்டை உறிஞ்சி இழுத்துக் கொண்டிருந்தார். டயானாவுக்கு சிகரெட் புகையை சுவாசிக்கப் பிடிக்கவில்லை. அதனால் ஹோரேயை சற்றுத் தள்ளிச் சென்று புகை பிடிக்கும்படி கூறி இருக்கிறார். ஆனால் புகை அலாரம் அங்கு இருந்ததை டயானா மறந்துவிட்டார். அதனால்தான் அலாரம் அடித்து இருக்கிறது.

நான் அங்கே வந்ததை ஹோரே விரும்பவில்லை. தனிப்பட்ட முறையில் அவர் மீது எனக்கு எந்தவித வருத்த மும் இல்லை. என்றாலும் அவரது சிகரெட்டை அணைக்கச் சொன்னேன். அவர் பயந்தவாறே என்னைப்பார்த்தார். பிறகு கீழே விழுந்த நெருப்புச் சாம்பலை கூட்டி தள்ளினார். பின் அங்கிருந்து சென்றுவிட்டார்.

மறுநாள் காலையில் இந்த சம்பவத்தை நான் வேடிக் கையாய் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த டயானாவிடம் விவரிக்க முயன்றேன். ஆனால் அவர் அதை விரும்ப வில்லை. விருட்டென்று எழுந்து தனது அறைக்குள் சென்று விட்டார்.

இளவரசர் சார்ள்ஸைப் பிரிந்த டயானாவின் கவனம் முழுக்க முழுக்க ஹோரே மீதே இருந்தது. அதனால் இந்த விஷயம் வெளியே கசிந்தால் உங்களுக்குத்தான் ஆபத்து என்பதை டயானாவிடம் வெளிப்படையாகவும் சொன்னேன்.

இளவரசி அதையெல்லாம் ஒரு பொருட்டாகவே மதிக்க வில்லை. இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டு விட்டார்.

தனிமை, பிரிவு அவரை வாட்டியது. குழப்பமான சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டார். ஹோரேயுடன் எப்படியாவது தனது உறவை நீட்டிக்க விரும்பி அவரது மனைவி டாயனேவை தோழியாக்கிக்கொள்ளவும் முனைந்தார். இதுவும் கைகூடவில்லை. அவரது, வேதனை, ஆற்றாமை, ஏமாற்ற உணர்வு பெருகப் பெருக தேவைகள் அதிகப்பட்டுக் கொண்டே போயின.

இதனால் செல்சியாவில் இருந்த ஹோரே வீட்டுக்கு போன்மேல் போன் போட்டார். இரண்டு மாதத்தில் அவர் ஹோரே வீட்டுக்கு போட்ட போன் கால்கள் மட்டும் 400க்கும் மேலிருக்கும்.

எதிர்முனையில் போனை ஹோரே எடுத்துப்பேசினால் மட்டுமே இளவரசி டயானா அவருடன் சுவாரஸ்யமாகப் பேசு வார். அவர் மனைவி டாயனே எடுத்தது தெரிந்தால் போனை டொக்கென்று வைத்து விடுவார்.

இந்த அனாமதேய போன் தொல்லையால் அவதிப்பட்ட ஹோரேவின் மனைவி டாயனே பொலிஸில் புகார் செய்து விட்டார். விசாரணை நடந்தது. அப்போது அந்த போன் கால்கள் எல்லாமே கென்சிங்டன் மாளிகையில் இருந்து பேசப்பட்டவை என்பது தெரிந்தது.

டயானாவின் விசாரணை நடந்தது. அடியோடு இல்லை என்று சொல்லிவிட்டால் நம்பமாட்டார்கள் என்று உணர்ந்த இளவரசி, நான் ஹோரே வீட்டுக்குப் போன் செய்து பேசியது உண்மை. ஆனால் நான் பேசியவை கொஞ்சம்தான். மற்றவற்றை நான் பேசவில்லை என்று மழுப்பிவிட்டார்.

அந்த விஷயம் அதோடு முடிந்துவிட்டது. ஆனால் அன்று லீச்சில் தங்கியிருந்தபோது ஹோட்டல் பல்கனியில் இருந்து இளவரசி டயானா குதித்து எங்கே சென்றிருப்பார் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஹோரேவும் லீச் வந்திருந்தார். அவர் தங்கியிருந்த இடத்துக்குத் தான் அந்த நள்ளிரவில் டயானா சென்றார் என்பதை இன்னும் சொல்லவும் வேண்டுமோ?

டயானாவின் மெய்க்காப்பாளராக பணியாற்றிய கென் வார்ப் இளவரசியின் காதல் அனுபங்களைத் தொடர்கிறார்.

அரச குடும்பத்தவர்கள் தங்களது அந்தரங்க விஷயங்களை முழுமையாக மறைத்து விட இயலாது. மறைப்பதும் கடினம். இதற்கு டயானாவும் விதி விலக்கானவர் அல்ல. அவருடைய பாதுகாப்பு அதிகாரி என்கிற முறையில் அவர் சில விஷயங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கும்.

இளவரசி, தோழிகள் யாருடனாவது தியேட்டருக்குத் செல்ல விரும்பினாலோ, அல்லது ஆண் ஆதரவாளர் எவருட னாவது சாப்பிட விரும்பினாலோ அதை முன் கூட்டியே தெரிந்து கொண்டு அதற்கேற்ப நான் பணிபுரிய வேண்டும்.

ஹைகுரோவ் மாளிகையில் இருந்த தலைமை இன்ஸ்பெக்டர் கிரஹாம் சுமித், நான் டயானாவிடம் பணிபுரிய வருவதற்கு முன்பே என்னிடம் இரகசியமாகச் சொன்னார். இளவரசிக்கு ஒரு ஆணுடன் தொடர்பு உண்டு. அவர் குதிரை பயிற்சியாளர் கேப்டன் ஜேம்ஸ் ஹெவிட்.

அரச குடும்பத்தில் யார் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றி மெய்க்காப்பாளர் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்களா? அவர்களை எவ்வாறு பாதுகாப்பது? என்பதே எங்கள் பணி.

இளவரசி டயானாவிடம் வேலைக்கு சேரும் சில மாதங்களுக்கு முன்னர்தான் ஜேம்ஸ் ஹெவிட்டை இளவரசி சந்தித்து இருக்கிறார். டயானாவின் மெய்க்காப்பாளராக பின்பு ஹெவிட் உடன் பேசிய விஷயங்களை அவர் என்னிடம் கூறியிருக்கிறார். ஹெவிட் உடனான முதல் சந் திப்பு இயல்பாக இருந்ததாக என்னிடம் டயானா கூறுவார். அதனால் அவர் மீது டயானாவுக்கு ஈர்ப்பு உண்டு என்பதை அறிவேன்.

ஹெவிட் அரச குடும்பத்தின் குதிரையேற்ற பயிற் சியாளர். குதிரையில் சவாரி செய்வதில் உள்ள சிக்கல் பற்றி டயானா கூறும்போதெல்லாம் அதை சுலபமாக சமாளிப்பது எப்படி என்று ஹெவிட் விளக்கி கூறுவார். இயல்பாக இருந்த இவர்களது பேச்சு சந்திப்பு உறவு வைத் துக் கொள்ளும் அளவிற்கு மாறிப்போனது.

இளவரசர் சார்ள்ஸ் மீது டயானா உயிரையே



வைத்திருந்தார். ஆனால் உடல் டயானாவிடமும் உயிர் காமில்லா பார்க்கரிடமும் இருந்தது. இதனால் நொறுங்கி போயிருந்த டயானாவுக்கு ஒரு வடிகால் தேவைப்பட்டது. அந்த வடிகாலாய் வந்து வாய்த்தார் ஜேம்ஸ் ஹெவிட். ஏற்கனவே பெண் பித்தர் என்று பெயரெடுத்தவர் அவர். அதனால் இளவரசி டயானா போன்றவர் கிடைத்தால் விடுவாரா என்ன? தனது உடல் இச்சைகளைத் தணித்துக் கொள்ள தயாராகி விட்டார்.

நீங்கள் கள்ளத்தொடர்பு வைத்தால் எனக்கு வைக்கத் தெரியாதா? என்பது போல இருந்தது டயானாவின் தேடுதல்.

ஒருபுறம் சார்ள்ஸ் - காமில்லா பார்க்கர் ஜோடி காதல் களியாட்டம் போட இன்னொரு பக்கம் ஹெவிட், டயானா சல்லாபம் என்று ஹைகுரோவ் மாளிகை காதல் சண்டைக் களமாக மாறிப்போனது. ஆனால் சார்ள்ஸ் கொஞ்சம் அடங்கிப் போவார். இளவரசியை சமாதானப்படுத்துவார். ஆனால் எதுவும் எடுபடாது.

பல தடவை சார்ள்ஸ் பிரச்சினைகளை மறந்து தனது நண்பர்களை டின்னருக்கு அழைத்து வருவார். டயானாவோ உங்கள் அழுகிப்போன நண்பர்களை நான் எதற்கு கவனிக்க வேண்டும்?

அவர்கள் எனது நண்பர்களே அல்ல! என காட்டு கத்ததாக கத்துவர்.

இருவருக்குமிடையே பனிப்போர் நீடித்தது.

ஹெவிட்டை முதன் முதலாக நான் மத்திய லண்டனில் உள்ள நைட்ஸ் பிரிட்ஜ் பராக்ஸில் சந்தித்தேன். கூடவே டயானாவும் இருந்தார். என்னை இளவரசியின் மெய்க் காப்பாளன் என்று நினைத்தாரோ, அல்லது காதலியின் காவலன் என்று நினைத்தாரோ எனக்கு ஏக மரியாதை கொடுத்தார். தனது காதலுக்கு அதிகாரப்பூர்வமான அங்கீகாரம் கிடைத்து விட்டது என்று கூட அவரது உபசரிப்புக்கு அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

ஹெவிட் மீது இருந்த காதலை டயானா என்னிடம் எடுத்த உடனே கூறி ஒப்புக் கொள்ளவில்லை. வெளிப்படையாகவும் பேசத் தயங்கினார். எனக்கு தர்ம சங்கடமாகிப் போனது.

இந்த சூழ்நிலையில்தான் ஹெவிட்டின் தாயார் ஷெர்லியை டேவன் நகரில் உள்ள அவரது வீட்டில் டயானா சந்தித்துப் பேசி பரபரப்பை உண்டு பண்ணிவிட்டார்.


நான் இதெல்லாம் வேண்டாம் அம்மா உங்களுக்கு சரிப்பட்டு வராது என்று எவ்வளவோ கூறிப்பார்த்தேன். எதையும் கேட்கவில்லை.

இன்னொரு நாள்.

குதிரை சவாரிப் பயிற்சிக்காக இளவரசி அடிக்கடி வெளியே செல்வதுண்டு. அப்படிப்போன போது ஷெய்லிங் காட்டேஜில் நாங்கள் தங்கியிருந்தோம்.

அன்று மாலை நான் சமையல் செய்து கொண்டிருந் தேன். (இந்த பொறுப்பும் எனக்கு உண்டு) இளவரசியும், ஹெவிட்டும் வெளியே ஹாலில் அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரே கூத்து, கும்மாளம்தான். அதன் பின் இரவு வரை நான் ஜேம்ஸ் ஹெவிட்டுடன் சீட்டு விளையாடுவதில்



மும்முரமாக இருந்தேன். இளவரசி வந்ததும் அவர் எழுந்து கொண்டார். இருவரும் மாடிப்படியில் ஏறி படுக்கை அறைக்கு சென்றனர்.

மறுநாள் காலை டயானா வெகுநேரம் கழித்து எழுந்தார். வெளியே வந்த போது அவர் தலைமுடி கலைந்து இருந்தது.

சிறிது நேரத்தில் காலை உணவை முடித்துக் கொண்டவர் வெளியே கிளம்பி விட்டார். ஜேம்ஸ் ஹெவிட் டுடன் தனியாகத்தான் புறப்பட்டார். அந்தக் கொட்டேஜில் தங்கியிருந்த நாட்களில் ஜேம்சும், டயானாவும் எங்கு போனாலும் தனியாகத்தான் போவார்கள். வாக்கிங் போனால் கூட அவருக்குத் துணை ஜேம்ஸ் ஹெவிட்தான்.

இவர்களது இரகசிய காதல் வெளியுலகத்திற்குத் தெரிய வந்த போதுதான் சார்ள்ஸூம், டயானாவும் பிரிவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ஹெவிட்டுடன் இருந்த தொடர்பால் டயானாவின் 2ஆவது மகன் ஹரி ஹெவிட்டுக்கு பிறந்திருக்கலாம் என்று கூட வதந்திகள் வெளியாயின.

ஆனால் ஹரி பிறந்த பிறகுதான் ஹெவிட் - டயானா உறவு மலர்ந்தது என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல இயலும் என்று கூறும் இவரின் கருத்தை பார்த்தால் அரசமாளிகையில் இன்னும் பல இரகசியங்கள் உண்டு என்பதை மறுக்கமுடியாது.





கண்ணிலாப் பேயை எள்ளுவேன்; அனியெக்
காலுமே அமைதியி லிருப்பேன்;
தண்ணிலா முடியிற் புனைந்துநின் றிலகும்
தாயுனைச் சரண்புகுந் தேனால்

- சுப்பிரமணிய பாரதியார்

# பூதமும் அமுதனும்


முன்னொரு காலத்தில் பணக்கார பிரபு ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் அமுதன். மிகவும் நல்லவன். இரக்க குணமுடையவன். இளையவன் யாசகன். மிகவும் கெட்டவன்.

கொஞ்ச நாட்களில் பணக்காரர் இறக்கவே, அண்ணனும் தம்பியும் வியாபாரத்தை கவனித்து வந்தனர். அவர்கள் இருவரும் ஒரு முறை ஒரு கிராமத்திற்குப் போய் தமக்கு வரவேண்டிய ஆயிரம் பவுண்களை வசூலித்தனர்.

அதனை ஒரு பையில் போட்டுக் கொண்டு இருவரும் ஊர் திரும்ப ஆற்றங் கரைக்கு வந்து சேர்ந்தனர். படகுக்காரன் எங்கோ போயிருந்ததால் தம்பியிடம் பண மூட்டையைக் கொடுத்து விட்டுச் சற்று கண் மூடித் தூங்கினான் அண்ணன். இதற்குள் தம்பி அதே பண மூட்டையைப் கற்களை வைத்துக் கட்டி எடுத்து ஒளித்துக் கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் படகுக்காரன் வரவே தம்பி தன் அண்ணனை எழுப்பி அவரோடு படகில் ஏறி உட்கார்ந்தான். படகும் கிளம்பியது. படகு நடு ஆற்றில் போகும் போது தம்பி ஒரு மூட்டையை எடுத்து ஆற்றில் நழுவ விட்டு, 'ஐயோ அண்ணா பண மூட்டை ஆற்றில் விழுந்து விட்டதே' எனக் கூறினான்.

'போனால் போகட்டும். அது நம் பணமாக இருந்தால் நமக்கே கிடைக்கும்' எனக் கூறினான் அமுதன். தம்பியும் தான் தந்திரமாக ஆயிரம் பவுண்களைத் தட்டி விட்டதாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால் அவன் அவசரத்தில் ஆற்றில் போட்டது பண மூட்டையைத்தான். கற்களை வைத்துக் கட்டிய மூட்டைதான் அவனிடம் இருந்தது.



அந்த ஆற்றில் ஒரு பூதம் இருந்தது. அது தம்பி மூட்டையை ஆற்றில் போட்டதும் ஒரு மீனை உடனே விழுங்கச் சொல்லி கட்டளை இட்டது. மீனும் அப்பூதம் சொன்னபடி நடந்தது.

பூதம் தம்பி செய்த மோசடியைப் புரிந்து

**பாப்பா முரசு சிறுகதை**

கொண்டது. எனவே, அந்தப் பண மூட்டையை எப்படியும் அண்ணனிடம் சேர்த்து விட எண்ணி மூட்டையை விழுங்கிய மீன் எங்கும் போகாத படி காவல் காத்தது.

அண்ணனும், தம்பியும் காசிக்கு வந்து தம் வீட்டை அடைந்தனர். தம்பி வீட்டில் தனியாக ஓரிடத்திற்குப் போய் தன்னிடமிருந்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கற்கள் இருப்பதைக் கண்டு "ஐயோ! நான் அண்ணனை ஏமாற்ற எண்ணி நானே ஏமாந்தேனே..." என எண்ணி மனம் புழுங்கினான்.

அன்று சில மீனவர்கள் ஆற்றில் வலை போட்ட போது பூதம் மீனவராக மாறி அந்த மீனை எடுத்துக் கொண்டு அண்ணனின் வீட்டுக்குச் சென்றது. அண்ணன் அவன் கேட்டபடியே ஒரு பவுணைக் கொடுத்து அந்த மீனை வாங்கிக் கொண்டார். அதனை அவர் தன் மனைவியிடம் கொடுக்கவே, அவள் அதனை இரண்டாக நறுக்கினாள். அதன் வயிற்றிலிருந்து பணமூட்டை வெளியே விழுந்தது.


அதைக் கண்டு திகைத்தான் அமுதன். "இது நம் பணமே. இதனை நம்மிடம் கொடுக்கவே இந்த மீனவன் வந்திருக்கிறான். இவனுக்கு எப்படி இது தெரிந்தது?" என எண்ணி ஆச்சரியப்பட்டான்.

அப்போது "அமுதா... நீ மிகவும் நல்லவன். இந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு நிறைய உதவிகளைச் செய்கிறாய். ஒருமுறை நீங்கள் படகில் சென்ற போது, உன் கையில் இருந்து நழுவிய உணவுக் பொட்டலத்தை உண்டேன்.

அது எனக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்தது. அதனால் தான் உன்னுடைய பணமூட்டையை உன் தம்பி வேண்டுமென்றே தூக்கி வீசிய போது அதை விழுங்கும்படி இந்த மீனுக்கு கட்டளை கொடுத்தேன். அந்த மீனை எடுத்துக் கொண்டு வந்தேன். நல்லவர்களுக்கு எல்லாமே நல்லதாய் தான் நடக்கும்...." என்று சொல்லி மறைந்தது.

அதைக் கேட்டு மகிழ்ந்தான் அமுதன். மறைக்காமல் அதில் பாதியான ஐநூறு பவுண்களைத் தன் தம்பியிடம் கொடுத்தான். தம்பியும் தனது அண்ணனுடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.02.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 629**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 627

**பரிசுக்குரியவர்:**
**முதஸ்ஸிர் அஹமத், 91,**
**உடையார் வீதி, அக்கரைப்பற்று - 02**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ர. வினோ, தரம் 8K, மட். செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. | ரம்சிகா ஜெகதாசன், புனித பெனடிக் மாவத்தை, கொட்டாஞ்சேனை. |
| கே. திவியன், 276, ஹில் வீதி, தெகிவளை. | எம். நசீஹா பேகம், எருக்கலம்பிட்டி, பாலாவி. |
| லோ. மதுரன், 360, அயின் தியேட்டர் வீதி, மூர் வீதி, மன்னார். | எம்.என்.எம். நஸ்றி, கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரி, கல்முனை |
| ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | மர்சியா நாபீர், பாக்கீர் மாக்கார் அவனியூ, பேருவளை. |
| அ.அஸ்றியா பானு, 26/4, சாவியா வீதி, மோதனார் வீதி, காத்தான்குடி - 01. | ர. நிரஞ்சனா, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. |

# ஆத்திசூடி

## தோற்பன தொடரேல்

நீ தோல்வியைத் தரத்தக்க செயல்களைத் தெரிந்திருந்தும் அகங்காரம் காரணமாகச் செய்து முடிப்பேன் என்று செய்ய முற்படாதே.

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# வாளித் தண்ணீர் வடிந்தாச்சு




சோடி மாடு போல்நின்றோம்
சோக்காய் முன்னே நடக்கின்றோம்.

வட்டக் குண்டுச் சங்கிலியில்
வாளித் தண்ணீர் வருகுதுபார்.


வாளித் தண்ணீர் வடிந்தாச்சு
வாடா தம்பி பின்னுக்கு.

வாய்க்கால் தண்ணீர் பாயுதுபார்
வளரும் பயிரும் விளையுதுபார்.

விளையும் கதிரும் பசிபோக்கும்
வளரும் இளைஞர் உழைப்போமே.

# அதிசய உலகம்

## ஓநாய்கள்



ஓநாய்கள் சரியான புத்திசாலிகள். இவை தனக்கென்று வேட்டையாட ஒரு எல்லை யைத் தேர்தெடுக்கும். பின் தனது சிறுநீரி னால் அந்தப் பரப்பிற்கு எல்லைக்கோடு போடும். மேலும் எல்லையில் கொம்புகளால் கற்களை நடும். அதன் பிறகு எல்லைப் பகுதியை மிகவும் கவனமாகப் பாதுகாக்கும்.

இது குழிமுயல், அணில், எலி, மான், குதிரை போன்றவற்றைத் தின்னும். வேட்டையாடும் போது கொடூரமாகத் தோற்றமளிக்கும். இவை, குடும்ப வாழ்க்கையில் மிகவும் அன்பும் பண்பும் பாசமும் கொண்டவை. ஒருவருக்கு ஒருத்தி என்ற கற்பு நிலையோடு ஓர் ஆண் ஓநாய் ஒரே பெண் ஓநாயுடன் மட்டும் வாழ்நாள் முழுவதும் வாழ்கிறது. இவை ஜனவரி முதல் மார்ச் வரை இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. இவற்றின் குட்டிகள் வயிற்றில் 63 நாட்கள் இருக்கும். பிறகு 5 முதல் 14 குட்டிகளைப் போடுகின்றன.

# பழங்குடியினர்



ஆப்பிரிக்கா மற்றும் வட அமெரிக்காவில் வாழும் பழங்குடியினரின் தலைவர்கள் இந்தமாதிரி இறகுகள் தோல் மற்றம் மெட்டல் கொண்ட தொப்பிகளை அணிகின்றனர். இவை அழகுக்காக அணியப்பட்டாலும் இதன் ஒவ்வொரு மணிகளுக்கும் ஒரு அர்த்தம் உள்ளது.


இந்த அர்த்தம் ஒவ்வொரு பழங்குடி இனத்திற்கு இனம் மாறுபடும். அமெரிக்க இந்தியர்கள் அணியும் தொப்பியின் பெயர் வார்போனட். இதன் ஒவ்வொரு சிறகும் ஏதாவது ஒரு வீரச் செயலை அதை அணிபவர் செய்யும்போது ஒரு சிறகு அவரது தொப்பியில் சேர்க்கப்படும். சிலர் தங்களது தொப்பிகளின் நுனியில் முடிகளைக் கட்டி வைத்திருப்பர். இது இவர்களது எதிரிகளுக்குச் சவால் விடுவது போன்ற செயலாகும்.

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. மிக வெப்பமான இடம் எது? - அஸ்ஸியா.
2. மிக குளிர்ச்சியான இடம் எது? - லெர்க்கோ பார்ஸ்க்
3. மிகப் பெரிய கட்டடம் எது? - ஸேன்ஸ் டவர்
4. மிகப் பெரிய செயற்கை தடாகம் எது? - மியாட் தடாகம்
5. மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள தலைநகர் எது? - லாலாஸ்
6. மிகப் பெரிய விளையாட்டு மைதானம் எது? - றொகியானா மைதானம்
7. மனிதனால் ஆக்கப்பட்ட மிகப் பெரிய ஏரி எது? உகண்டாவில் உள்ள ஒலக்பார்ஸ் ஏரி.
8. மிக உயரமான வெளிச்ச வீடு எது? - ஜப்பானில் உள்ள இஸ்ரிக்
9. மிகப்பெரிய மணிக்கூட்டின் பெயர் என்ன? - பிக்பென்.
10. மிகப் பெரிய இராணுவம் எந்த நாட்டில் உள்ளது? - சீனாவில் (46 இலட்சம்)
11. மிகப் பெரிய துறைமுகம் எது? - நெதர்லாந்திலுள்ள ஈரோம போட்.
12. ஆசியாவில் மிகப் பெரிய ஜனநாயக நாடு எது? - இந்தியா.





## சமாதானச் சின்னம்





**சமாதானத்தைப்** பற்றி பல்வேறு துறையினர் வாய் கிழியப் பேசினாலும் மனிதரிடையே அது சாத்தியப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனால் ஐந்தறிவு படைத்த எதிரும் புதிருமான ஜீவன்கள் என்னமாய் ஒற்றுமையாய் நின்று போஸ் கொடுக்கின்றன. எந்நேரமும் சண்டையிட்டுக் கொண்டிருப்போரை நாயும் பூனையும் மாதிரி, எலியும் பூனையும் மாதிரி என்று சொல்வோருக்கு இந்தப் படத்தைத்தான் காட்ட வேண்டும்.

**ஜெர்மன்** ∴பிராங்பெர்ட் நகரில் அண்மையில் நடைபெற்ற சர்க்கஸ் கண்காட்சியின் போது பல அபூர்வ நிகழ்வுகளைக் காணக் கிடைத்தது. அங்கோலாவைச் சேர்ந்த வூயிட் வூயிட் என்ற இளைஞர் இச் சர்க்கஸ் விழாவில் கலந்து கொண்டு தனது உடலை வில் போன்று வளைத்தார். இவரை இளைஞர் என்பதற்குப் பதில் வளைஞர் என்று சொல்லலாமல்லவா?





## மடியும் மணி




**நேரம்** என்பது சுருட்டி மடித்து எடுத்துச் செல்லக்கூடிய ஒன்றல்ல என்பது நமக்குத் தெரிந்ததே. ஆனால் நேரத்தைக் காட்டும் மணிக்கூட்டை நாம் விரும்பியது போல் மடித்து எடுத்துச் செல்லக் கூடிய வாறு இப்போது சந்தைக்கு வந்துள்ளது. ஜப்பான் மணிக்கூட்டு நிறுவனமான 'சிட்டிசன் கம்பனியினால்' அறிமுகப் படுத்தப்பட்ட இம்மணிக்கூடு சாதாரண புகைப்படம் ஒன்றின் தடிப்பமுடையதாகும்.

## அலையே பெரு அலையே




**சுனாமியின்** தடயம் ஒன்றோ என்று நினைத்தீர்களா? இல்லை, இதுவும் சுனாமியைப் போன்ற 16 அடி உயர்ந்த ஓர் அலையாகும். சுனாமிக்குப் பின் இவ்வாறான அலையைப் பார்த்தால் எமக்கு அடிவயிற்றில் புளி கரைத்தாலும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரன் பெரோடாவுக்கு அளவில்லா ஆனந்தத்தை அளிக்கிறது. அண்மையில் ஹவாய் சன்செட் கடற்கரையில் நடைபெற்ற "உலக சர்பின்" விளையாட்டுப் போட்டியின் போதே அலையைக் கண்டு கிரன் இவ்வாறு துள்ளிக் குதித்தார்.





**பயன்** எதுவும் இல்லாத பொருளுக்கு மதிப்பில்லை. தீக்குச்சிக்கும் இது பொருந்தும். ஆனால் படத்தில் இருக்கும் இத் தீக்குச்சி பயன்படாமல் இருப்பதே எல்லோருக்கும் நன்மை. ஏனெனில் இதைப் பயன்படுத்தினால் விளைவது சர்வநாசம். சீனாவின் தொழிற்சாலை ஒன்றில் தயாரிக்கப்பட்ட இத்தீக்குச்சியின் நீளம் இரண்டு மீட்டர் ஆகும்.

**தனக்குப்** போதுமான அளவு தூரம் சைக்கிளை ஓட்டிச் சென்று, களைப்பு ஏற்படும் சமயத்தில் அச் சைக்கிளையே கூடாரமாகவும் மாற்றி ஓய்வு பெற வசதியான முறையில் உருவாக்கப்பட்ட ஓர் வித்தியாசமான சைக்கிளே இது. இச் சைக்கிள் "பையிகம்பர் டென்ட் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது."

## ஓட்டவும் உறங்கவும்





வீனித் - நவ்யா நாயர்
பாசக்கிளிகள்

# ‘தம்பி’யை நம்பியிருக்கும் மாதவன்

**மிட்வேலி** எண்டெர்டயின்மெண்ட், மோஷன் பிக்சர்ஸ் பார்ட்னர்ஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் மிகப் பிரமாண்டமானப் படம் தம்பி! பாஞ்சாலங் குறிஞ்சி, இனியவளே, வீரநடை போன்ற படங்களை இயக்கிய சீமான், கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் ‘தம்பி’ படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் மாதவன். இதுவரை நடித்திராத முற்றிலும் புதிய வேடம் ஏற்றிருக்கும் மாதவனுக்கு ‘தம்பி’ படம் புதிய அடையாளத்தைக் கொடுக்கும். அவருக்கு ஜோடியாக நடிக்கிறார் பூஜா.

தம்பி படத்தில், மாதவன் ஏற்றிருக்கும் தம்பி கதாபாத்திரம் இன்றைய இளைஞர்களுக்கு முன் மாதிரியாய் உருவாக்கப்பட்டிருக்கிறது. ‘வன்முறைக்கு வன்முறை தீர்வு இல்லை’ என்ற கொள்கை கொண்ட தம்பி கதாபாத்திரம், தமிழ்த்திரை கண்ட கதாநாயகப் பாத்திரங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.


ஆளுமையும், கம்பீரமும் கொண்ட தம்பி கதாபாத்திரத்தின் தன்மையை உணர்ந்து, உள்வாங்கி மிகச் சிறப்பாய் நடித்திருக்கும் மாதவன், தம்பி கதாபாத்திரத்துக்காக மிக நீளமாய் தலைமுடி வளர்த்திருக்கிறார். தலைமுடி காற்றில் பறக்க, அவர் தோன்றும் காட்சிகளில் அனல் பறக்கும். ஏகே 47 துப்பாக்கிக் குண்டின் வேகத்தைவிட தம்பியின் வார்த்தைகள் வேகமானவை. வீர்யமானவை. தோற்றம், வசன உச்சரிப்பு, கம்பீரம், பாடி லாங்வேஜ் என எல்லாவற்றிலும் முழுமையாய் மாறி இருக்கிறார் மாதவன்.


தம்பி கதாபாத்திரத்தை ஒரு தவமாய் நினைத்து நடித்திருக்கும் மாதவன், இருபது நிமிடம் தவிர்த்து படம் முழுக்க கண்களை இமைக்காமல் நடித்திருக்கிறார் என்பது ஆச்சரிய செய்தி. தம்பிக் கண நேரம் கூட, கவனம் சிதறாதவன் என்ற இயக்குநரின் எதிர்பார்ப்பைப் புரிந்துகொண்டு, அதைப் பிரதிபலிக்கும் வகையில், இமைப்பதைக் கவனத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டு சிறப்பாய் நடித்திருக்கிறார்.

தம்பி படத்தில், நாயகி பூஜா கல்லூரி மாணவியாக நடிக்கிறார். தம்பியின் செயல்பாடுகளில் முரண்பட்டு, பிறகு அவரைப் புரிந்து கொள்ளும் வேடம். பூஜாவுக்கும் தம்பி குறிப்பிடத்தக்கபடமாக இருக்கும் என்பது உறுதி.

வில்லனாக நடிப்பவர் மலையாள நடிகர் பிஜுமேனன். வழக்கமான வில்லனாக இல்லாமல், ‘உனக்குத் தப்பாகத் தெரிவது எனக்கு சரியாகத் தெரிகிறது’ என்ற கொள்கையுடன் இயங்கும், யதார்த்த வாழ்வில் நாம் சந்திக்கும் மனிதராக பிஜுமேனன் நடிக்கிறார்.

பொதுவுடமை என்ற கதாபாத்திரத்தில் வித்தியாசமான தோற்றத்தில் நடிக்கிறார் மணிவண்ணன். தம்பியின் காட்.. பாதரான இந்த வேடம் மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கும்.





# அசின் செய்த குளறுபடி

ரமணா படம் பார்த்துவிட்டு டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் படம் ஒன்றில் நடிக்க விருப்பப்பட்டார் தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி. ஆனால் அது முடியாமல் போயிற்று. இருந்தும் ரமணா படத்தை தாகூர் என்ற பெயரில் தெலுங்கில் நடித்தார் சிரஞ்சீவி. இப்போது முருகதாஸின் ‘கஜினி’ தமிழில் மட்டுமின்றி தெலுங்கிலும் சக்கைப்போடு போடுகிறது. ‘கஜினி’ தயாரிப்பில் இருக்கும்போதே சிரஞ்சீவியின் ஸ்டாலின் படத்தை இயக்க ஒப்பந்தமாகிவிட்டார் முருகதாஸ்.

‘கஜினி’ ரிலீஸ் நாள் அன்று லேப் செட்டில்மெண்ட்டில் பிரச்சினை. ஒருசில ஏரியாவை வாங்கிக்கொள்வதாக சொல்லியிருந்த சூர்யா, அதிலிருந்து விலகிக்கொண்டார்.இந்த நிலையில் பெரியதொகை ஒன்று இருந்தால்தான் பெட்டி போகும். உடனே சிரஞ்சீவிக்கு விஷயத்தைச் சொன்னார் முருகதாஸ். தன் மைத்துனரான தயாரிப்பாளர் அல்லு அரவிந்துக்கு போன்போட்டு விஷயத்தைச் சொன்னார் சிரஞ்சீவி. அல்லு அரவிந்த் லேபுக்கு போன் போட்டார். எந்தப் பிரச்சினையும் இன்றி கஜினி வெளிவந்தது. இதில் சிரஞ்சீவி மேல் ரொம்பவே பிடித்தமாகிவிட்டது முருகதாஸுக்கு.

இந்நிலையில் ‘ஸ்டாலின்’ படத்திற்கு பெரிய தொகை முருகதாஸுக்கு சம்பளமாக தரப்பட்டது. இதற்கு தெலுங்கு பட டைரக்டர்கள் எதிர்ப்பு தெரிவித்து அது பெரிய அளவில் பிரச்சினையானது. அதையும் சிரஞ்சீவி தீர்த்து வைத்தார். இப்படி...ஒவ்வொரு விஷயத்திலும் சிரஞ்சீவி ஓடிவந்து உதவ, உருகிப்போனார் முருகதாஸ். இதற்கு மத்தியில்தான் சிரஞ்சீவிக்கும் முருகதாஸுக்கும் இடையே விளையாட்டு காட்டிவிட்டார் அஸின்.

ஹைதராபாத் போன அஸின், அல்லு அரவிந்தை சந்தித்து, ‘முருகதாஸோட கஜினியில் நடிச்சிருக்கேன். அவர் என்னோட நண்பர். இந்தப் படத்தில் எனக்குத்தான் வாய்ப்பு தருவதாகச் சொல்லியிருக்கார்’ என உட்கார்ந்துவிட்டார் ஆபீஸில். விஷயம் சிரஞ்சீவிக்குப் போனது. ஏற்கனவே த்ரிஷாவை பேசியிருக்கிற நிலையில், ஒருவேளை முருகதாஸிற்கு அஸின்தான் கதாநாயகியாக வேண்டும் என்று நினைக்கிறாரோ என்ற குழப்பம். உடனே முருகதாஸிற்கு போனை போட்டார், விஷயத்தைச் சொன்னார். மிரண்டுபோனார் முருகதாஸ். "நான் அந்த மாதிரி சொல்லல ஸார்...அஸினுக்கு இப்படி ஒரு உத்தரவாதத்தை நான் கொடுக்கலை. கதாநாயகி விஷயத்துல நான் தலையிடவும் மாட்டேன்" என தன் நிலையை விளக்கினார். இதையடுத்து அஸினை அடுத்த படத்தில் வாய்ப்புத் தருகிறோம் எனப் பேசி சமாதானப்படுத்தி அனுப்பியிருக்கிறார்கள்.



ப்ரியா மணி


## சி னி வி சி ட்



## குத்துமதிப்பா த்ரிஷாவின் சொத்து மதிப்பு

**ஆந்திரக்** காரர்கள் த்ரிஷா எவ்வளவு கேட்டாலும் அள்ளிக்கொட்டத் தயாராக இருக்கிறார்கள். ஸ்டாலின் படத்திற்காக சிரஞ்சீவி, த்ரிஷாவிற்கு தந்திருக்கும் சம்பளம் ஒரு கோடியாம். இப்படி சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் சொத்துகளாக மாற்றி வருகிறார் த்ரிஷா. சென்னையில் புதிதாக ஒரு பங்களாவும் வாங்கி விட்டார். ஏற்கனவே அடையாறு போட்கிளப்பில் ஒரு வீடு உள்ளது. இதுபோக, ஹைதராபாத்திலும் ஒரு பங்களா வாங்கியிருக்கிறார். ஹைதராபாத்திலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் அருவியுடன் கூடிய தோட்டம் ஒன்றை வாங்கிப்போட்டிருக்கிறார் சமீபத்தில். சென்னையில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதாக இருந்த த்ரிஷா, அந்தத் திட்டத்தை ஏனோ கைவிட்டுவிட்டார். எப்படியும் மகள் ஹோட்டல் கட்டுவாள், நாம் எம்.டி.யாகிவிடுவோம் என நம்பியிருந்தார் அப்பா கிருஷ்ணன். இதற்காகத்தான் பிரபல அரசியல் தலைவர் ஒருவரின் நட்சத்திர ஹோட்டலில் வேலைக்குச் சேர்ந்து அனுபவமும் கற்றுக்கொண்டார். ஆனால் த்ரிஷாவின் அம்மா ஹோட்டல் கட்டுவதற்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டார். அம்மாவின் பேச்சைக் கேட்டு அப்பாவைக் கைவிட்டுவிட்டார் த்ரிஷா.


சில மாதங்களுக்கு முன் வெளிநாட்டிலிருந்து உயர்ரக கார் ஒன்றை வாங்கியிருந்தார் த்ரிஷா. வீட்டில் அண்டர்கிரவுண்ட் கார் ஷெட்டில் நிறுத்தியிருந்தார். உள்ளே மழைவெள்ளம் புகுந்து கார் ரிப்பேராகிவிட்டதாம்.



நகைச்சுவை நடிகர்

## மீண்டும் ‘புலன்விசாரணை!’

டைரக்டர் ஆர்.கே.செல்வமணியின் பேர் சொல்லும் படங்களில் ஒன்று, ‘புலன் விசாரணை’. விஜயகாந்திற்கும் இது ஒரு மெகா படம். தயாரிப்பாளர் இப்ராஹிம் ராவுத்தருக்கும் இது சூப்பர் ஹிட் படம். சரத்குமார் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்திய படமும் இதுதான். இப்போது ‘புலன் விசாரணை’யின் 2ஆம் பாகத்தை எடுக்கவிருக்கிறார் செல்வமணி. தயாரிப்பு இப்ராஹிம் ராவுத்தர்தான். ஹீரோ யார் என்கிறீர்களா? பிரசாந்த்.




மேக்னா நாயுடு - பிரசாந்த் - நிலா
ஜாம்பவான்



விஜய் - த்ரிஷா
ஆதி

**பிரசாத்** ஸ்டுடியோவில் 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படத்தின் பாடல் காட்சி படப்பிடிப்பில் தொடர்ந்து மூன்று நாட்கள் கலந்துகொண்டார் வடிவேலு. மூன்று நாட்களாகத் தனக்கு ஒரே காஸ்ட்யூமை தருவதாகச் சொல்லி, வேறு காஸ்ட்யூம் வேண்டுமென்று மூன்றாம் நாள் படப்பிடிப்பில் இருந்து கிளம்பிப் போய்விட்டார். வரலாற்றுக் கதை; அதில் ராஜா உடையே காஸ்ட்யூம் என்பதால் வேறு உடை இல்லை என்று எவ்வளவோ இயக்குநர் சிம்புதேவன் எடுத்துச் சொல்லியும், நடிக்க வேண்டுமானால் புதிதாகக் காஸ்ட்யூம் வேண்டும் என்று எஸ்கேப் ஆகிவிட்டாராம் வடிவேலு. இதனால் அன்று ஷூட்டிங் கேன்சல். அடுத்த நாளும் ஷங்கரின் யுனிட் ஷூட்டிங்கை கேன்சல் செய்துவிட்டது. மீண்டும் வடிவேலுவுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அநேகமாக இந்நேரம் மீண்டும் படப்பிடிப்பு ஆரம்பமாகியிருக்கலாம்.



மாதவன் - பூஜா
தம்பி

**'ஜித்தன்'** ரமேஷ் நடிக்கும் "நீ வேணும்டா செல்லம்" படத்திற்காக சிம்பு ஒரு பாடலை தீனா இசையில் பாடியிருக்கிறார். சிநேகன் எழுதியிருக்கும் அந்தப் பாடலுக்கு நமிதா செம குத்தாட்டம் போட்டிருக்கிறார். 'பெண்ணெல்லாம் பூமி போல...எந்த மழைக்கும் தாகம் அடங்காதடா' எனத் தொடருகிறது அந்தப் பாடல். சிநேகனின் வரிகள் சர்ச்சைக்கு உள்ளாகுமோ, இல்லையோ தெரியவில்லை. ஆனால் இந்தப் பாடலுக்கு ஆடியபோது நமிதாவின் வலதுகால் சுளுக்கிற்கு உள்ளானதாம்! சுளுக்கை எடுத்துவிட்டது யார்? 'வுட்பி' பரத்கபூரா? உடன் ஆடிய ஜித்தன் ரமேஷா...? நமிக்கே வெளிச்சம்.



சூர்யா - ஜோதியா
ஜில்லுன்னு ஒரு காதல்

**மலையாளத்தைவிட** தமிழுக்கு அதிக முக்கியத்துவம் தந்து வந்த (சம்பளம் ஜாஸ்தி என்பதால்) நயன்தாரா, தற்பொழுது தெலுங்கிலும் அடியெடுத்து வைத்துவிட்டார். தமிழைவிட அங்கு சம்பளம் ஜாஸ்தி என்பதாலோ? எனும் ஆராய்ச்சியில் இறங்குவதற்கு முன் அம்மணி நடிக்கும் படம் ஹீரோ பற்றி மட்டும் தெரிந்துகொள்ளுங்கள். வெங்கடேஷ் ஜோடியாக 'லஷ்மி' எனும் தெலுங்குப் படத்தில் நடிக்கிறார். சம்பளம் நாற்பது லட்சத்திற்கும் மேல் என்பது உபரித் தகவல்.

**சுஹாசினியின்** செல்லுக்கு போன் செய்தால்...போன் செய்பவரின் காதுகளில் ரிங்டோனுக்கு பதிலாக எஸ்.ஜே.சூர்யாவின் 'அ ஆ' படத்தில் வரும் 'அன்பே என் அன்பே ஆருயிரோ' பாடல் ஒலிக்கிறது. அம்மணி பேச்சில் மட்டுமல்ல செயலிலும் அதிரடிதான்!



ரவி - கம்னா
இதயத் திருடன்

**கே.எஸ்.ரவிக்குமார்** இயக்கத்தில் அஜித் நடித்து கொஞ்சநாள் கிடப்பில் போடப்பட்டிருந்த காட் :.பாதர் படத்தின் ஷூட்டிங் மீண்டும் ஸ்டார்ட் ஆகப் போகுது. தயாரிப்பு தரப்பிற்கும் ஹீரோவிற்கும் இடையில் எழுந்த ஈகோ மோதல், முடிவிற்கு வந்துவிட்டதில் இயக்குநருக்கு பரம திருப்தியாம்!

**கலைஞரின்** 'பாசக் கிளிகள்' படத்தில் கதைப்படி நவ்யா நாயர் முதலில் பிரபுவிற்கு ஜோடியாகவும் முரளிக்கு தங்கையாகவும்தான் இருந்திருக்கிறார். ஆனால் இயக்குநர் அமிர்தம் எடுத்த சில காட்சிகளைப் போட்டுப் பார்த்த கலைஞர், பிரபு - முரளி இருவருக்குமே நவ்யாவை தங்கையாக சித்திரித்து, கதையை மாற்றி தனக்கே உரிய லாவகத்துடன் கதை முழுவதும் நவ்யாவைச் சுற்றி வருவது போன்றே மாற்றி அமைத்துவிட்டாராம். பிரபு - முரளி இருவருக்கும் படத்தில் தங்கைதான் - அதாகப்பட்டது கதை(யின்) நாயகி! தனக்காகவும் தன் பாத்திரத்திற்காகவும் கலைஞர் கதையை மாற்றியமைத்ததைக் கேள்விப்பட்டு இரட்டிப்பு சந்தோஷத்தில் இருக்கிறார் பொண்ணு.



மாதவன் - பாவனா
ஆர்யா

**தன்** ஆத்துக்காரர் சுந்தர்.சியை கதாநாயகராக்கி சொந்தப்படம் எடுக்கும் குஷ்புவிற்கு, 'கற்பு' பஞ்சாயத்து விவரமறிந்த எந்தக் கதாநாயகியும் கால்ஷீட் கொடுக்க முன்வரவில்லை. அம்மணி நடிகர் அர்ஜுன் மூலம் ரீமா சென்னுக்கு தூதுவிட்டுப் பார்த்திருக்கிறார்.

ரீமாவோ எனக்கு சுந்தர் ஜோடியாக நடிப்பதில் எந்தப் பிரச்சினையுமில்லை. ஆனால் அவர் (சுந்தர்.சி) இயக்கத்தில், குஷ்பு தயாரிப்பில் முன்பு நான் உங்கள் (அர்ஜுன்) ஜோடியாக நடித்த 'கிரி' படத்திற்காகப் பேசப்பட்ட சம்பளத்தில் இன்னும் ஐந்து லட்சம் பாக்கியிருக்கிறது. அதையும் இந்தப் புதிய படத்திற்கான சம்பளம் முழுவதையும் முதலிலேயே கொடுத்துவிட்டால் நான் நடிக்கத் தயார் என்று சொல்லிவிட்டாராம். இது கேட்டு கடுப்பில் கையைப் பிசைந்து கொண்டு நிற்கும் குஷ்பு, மற்றொரு பக்கம் ரீமாவிற்குத் தெரியாமல் ஜோதர்மயியை ட்ரை பண்ணி வருகிறார் சுந்தருக்கு ஜோடியாக்கிட...!


**சூர்யா** - ஜோதிகா காதல்னா சும்மாவா? சற்றே காஸ்ட்லியான காதல்தானே! அதனால் இருவரது காதலையும் காட்டவிருக்கும் 'ஜில்லுன்னு ஒரு காதல்' படத்தின் தொடக்க விழாவை விமானத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளனர். அதுவும் எப்படி? பறந்தபடி இருக்கும் விமானத்திலேயே நடத்தவுள்ளனர். சென்னை டு ஹைதராபாத், ஹைதராபாத் டு சென்னை பயணிகள் விமானத்தில் விரைவில் 'ஜில்லுன்னு ஒரு காதல்' சல்லென ஸ்டார்ட் ஆக உள்ளதுங்கோ!

**சரத்தின்** 'காக்கி' படத்தில் முக்கிய பாத்திரமேற்றிருக்கும் மல்லிகாவிற்கு கேரளா கொச்சிக்கு ஷூட்டிங் போயிருந்தபோது, அந்த ஊர் உணவும் சீதோஷ்ண நிலையும் ஒத்துக்கொள்ளாமல் போயிருக்கிறது. தொடர்ந்து மூன்று நாட்கள் வாந்தி, வயிற்றுப் போக்கு என்று மருத்துவமனையில் அட்மிட் ஆனதுடன் குளுக்கோஸ் ஏற்றிக்கொண்ட பிறகே வீடு திரும்பினாராம் அம்மணி. இதற்கிடையே காக்கி படம் சரிவர ஷூட்டிங் நடத்தப்படாததால் தனது கால்ஷீட் எல்லாம் வீணாகி, வேறு படத்திலும் கவனம் செலுத்த முடியவில்லை என வருத்தப்பட்ட சரத், சம்பளத்தைத் திரும்ப தந்துவிடுகிறேன். காக்கி படத்திலிருந்து என்னை விடுவித்துவிடுங்கள் என தயாரிப்பாளர் சங்கத்திற்கு கடிதம் அனுப்பியிருக்கிறாராம்.



...க்காளையின் திருமண நிகழ்வில் வடிவேலு விவேக்

**கலைப்புலி** தாணு தயாரிப்பில் கதை, வசனகர்த்தா ரத்னகுமாரின் இயக்கத்தில் எஸ்.ஜே.சூர்யா கதாநாயகனாக நடிக்க இருக்கும் புதிய படத்திற்கு 'திருமகன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாம். இதுதான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ரத்னகுமார், சூர்யாவுடனேயே சுற்றி வந்ததின் இரகசியமோ?



எஸ்.ஜே. சூர்யா - நயன்தாரா
கள்வனின் காதலி

**பிரபல** மலையாள வில்லன் நடிகர் திலகன் வயதாகிவிட்டதால் உடல்நிலை ஒத்துவரவில்லையென்று பல மலையாளப் பட வாய்ப்புகளையே தவிர்த்து வந்தார். இந்த நிலையில் 'நீ வேணும்டா செல்லம்' படத்தில் நீங்கள்தான் நடிக்க வேண்டும் ஒரு முக்கிய பாத்திரத்தில் என்று அதன் இயக்குநர் வெங்கடேஷ் கூற, கதையைக் கேட்ட திலகன்,....உடனடியாக நடிக்க சம்மதித்து சென்னைக்கு ப்ளைட் ஏறிவந்துவிட்டார். 'சத்ரியன்' படத்திற்குப்பின் 'ஆயுதபூஜை', 'மேட்டுக்குடி' என்று ஒரு சில தமிழ்ப் படங்களை மட்டுமே கடந்த பத்தாண்டுகளுக்குள்ளாக ஒப்புக்கொண்டு நடித்தவர் திலகன் என்பது குறிப்பிடத்தக்கது.




## வேலிக்கட்டையாக்குங்கள்

பசையற்ற கைகளுடன்
பட்டமரமாய் நிற்கிறேன்....
நானுமொரு பட்டதாரி
என்பதனால்..!

அதனால் என்னோடு வந்து
எவரும் இப்போது
ஒட்டிக் கொள்வதில்லை!

ஓ...இதனால்

தனிமையில்
உருண்டு
கொண்டிருக்கிறது
என் வாழ்க்கைச் சக்கரம்!

பாடுபட்டுப் படித்தும்
பலாபலன்கள்
எதுவுமில்லை
பட்டமரமாய் நிற்கிறேன்...
கொட்டாவி விட்டபடி!
ஓ...என்னருமை

உறவுகளே....
வேலி
கட்டுவதற்காகவாவது
என்னைக் கொண்டு
நாட்டுங்கள்...

வேலிக்கட்டையாக
ஆவது
நான்
பயன்பட்டுப் போகிறேன்.

*-வில்லூரான்.*

## தேடு

பிறவிகள் தோறும்
பிறவிகள் எடுக்கும்
மனித ஜென்மமே!
உன்னையே
நீ அறிவாய்!
மரத்தை வெட்டி
வைத்துக்கொண்டு
மரத்தில் ஏறுவாய்!
ஆழமும் அறியாது
நீந்தவும் முடியாது
ஆற்றில் இறங்குவாய்!
இனச்சக்தியை
பூசிக்கொண்டு
மத வயலில் நடப்பாய்!
மொழி வெறியால்
மூர்க்கத்தனம் புரிவாய்!
'மதத்தை' தலையில்
கட்டிக்கொண்டு
கோயிலுக்குப்
போவாய்!
வாழ்வு செழித்திட
வழிகளைத் தேடு
இனிதே வாழ்ந்திட
இறைவனைத் தேடு.

*-நா.ஜெயபாலன், பிபிலை.*

## உன் வருகைக்காக...

காலங்கள் கரைய
காத்திருக்கிறேன்
உன்னினைவு
மூட்டைகளை
மேலும் மேலும்
என்னிதயத்தில்
இறக்கியபடி....

பூக்களின்
மடியில் கிடக்கும்
அமுதை
சுவைக்கிறேன்
இனிக்கிறாய்
நீயே!

வானில்
தவழும் மதியும்
நீயே! உன்னில்
நிலாக்காய்கிறேன்

சுகமாக... மிக
சுகமாக...

இரவுத் துயிலில்
குளிரோ என்
துயிலை
இம்சைப்படுத்த
போர்வைக்குள்
துயிலுகிறேன்
சூடாய்ப்போன
உன்
நினைவுகளில்
அதுவே
குளிருக்கு
எதிரியாய்ப்
போனது.

*-எச்.எம்.எம்.பாஹிம், இறக்காமம்.*

## உறவுக்கு சாதியில்லை!

சாதியை வளர்க்கும்
சண்டாளன் யாரு..?
அந்தப் பாவியை
ஒழித்துக்கட்டியே
தீரு!

நீதியைக் கேட்டால்
நீதான் பகைவன்
ஓதிய உண்மை
ஒழிந்தது என்ன...?

வேதியர் மரபில்
மேதைகள் வந்தும்
வேண்டாம் சாதி
என்றது எங்கே...?

கவர்ச்சியைக்
கண்டால்
இகழ்ச்சிகள் பாரான்.
உணர்ச்சியில் வந்து
உறவினைக்
கொள்வான்!

அணைத்தவன்
மார்பில்
அன்பினைக்
கோர்க்க,
இகழ்ச்சிகள்
சொல்லி
சாதியைக் கேட்கும்
- இந்த
ஈனனைக் கண்டால்
கண்டயிடமெல்லாம்
தாக்கு...!

காலத்தாலும்
அழியாத - இக்
கவிதையைத் தந்த
கவிஞனே நீ வாழ்க!

*-கோட்டைமுனை ரி.ஆரிப்சராவுடீன்.*

## தவிர்த்து விடாதே!

முறைத்துப்
பார்க்காதே!
முகப்பருக்கு
வலிக்கிறது.

நீ
திட்டும்போதுதான்
கவனித்தேன் -
உனக்கு
அழகாக
கவிதை
வருகிறதே!

திடீரென ஏன்
விழித்துக்
கொண்டாய்
உன் கனவில்

நான்
வந்து
விட்டேனா?

உன்
பாதையில்
நான்
தவமிருப்பதற்காக
உன்
பணங்களைத்
தவிர்த்து
விடாதே!

*-சிஹ்னாஸ் தௌபீக், ஹஸைனியாபுரம்.*

## காத்திருப்பேன்

உன் நினைவுகளால்,
உணர்வற்றுப் போகிறது இதயம்,
ஒளியிழக்கிறது என் கண்கள்.
உன் பார்வையால்
நடைப்பிணமாய் உலாவுகிறது உடல்,
உயிரைவிட்டு உணர்வுகளைப்
பறித்துவிட்டாயே - உன்
கூர் வேற் கண்ணால்.
தீக்குளிக்கிறது தினம் மனம்,
உருகி ஓடுகிறது கருகிய இதயம்.
அழியவில்லை அப்போதும்
அதில் உன் உருவம்.
என் காதலை உரைக்க,
முனைந்தேன் உன்னிடம்
ஊமையாகின வார்த்தைகள் -
பார்வையால்
பழிதீர்த்து விட்டாய் காதலை.
வறண்ட உன் இதயத்தில் - எப்போது
ஊரும் காதல்
கண்ணீரில் முகம் கழுவி
காத்திருப்பேன் உனக்காக.

*-அ.மு.ராபி, கிண்ணியா - 03.*

*முரசு இதழ் 577இல் வெளிவந்த அழியாத நினைவு எனும் செல்வி நஸீஹா சம்சபாத்தினுடைய கவிதையானது முரசு இதழ் 644 இல் காதலின் பிரிவு எனும் தலைப்பில் எஸ்.தங்கோல் என்பவரினால் அனுப்பப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. முரசிற்கு தமது ஆக்கங்களை அனுப்புபவர்கள் தமது சொந்த ஆக்கங்களை மட்டுமே எழுதியனுப்பும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.*

*ஆ-ர்.*

## காதல் கம்பம்

இருளை விரட்டியடிக்க
விழித்துக் கொண்டிருந்தது
ஒரு தெரு விளக்கு
இங்கே உன்
கனவுகளை விரட்டியத்துவிட்டு
நிஜ நினைவுகளை நுகர
என் மனமோ
உலா வந்து கொண்டிருக்கிறது
நிலாப் போல!

என் தொழிற்சாலையில்
இயங்காமலிருந்த
இதய இயந்திரத்தை
கறை நீக்கி
இயங்க வைத்தவள் நீ!


அன்று இதயம்
காதலால் காயப்பட்டதால்
இன்றைய சோகம் கூட
சுகமாக உள்ளது.

வசந்தத்தைத் தேடி
வரட்சியில் நடக்கின்றேன்
கூதல் காற்றோடு காதல் பேசிய
கடித வரிகளை
மீட்டிப் பார்க்கிறேன்.

என்னை
சிந்தனைச் சிறையில்
சிக்க வைத்தவளே...
உன்னால் என்னிடம்
எஞ்சியது கண்ணீர் மட்டும்தான்!

கற்றுக் கொண்டேன்
காதல் என்பது
ஆற்றலையும் திறமைகளை....
கட்டி வைக்கும்
கம்பம் என்று!!

*-எம்.ஏ.றமீஸ், அட்டாளைச்சேனை - 10.*



*காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவியான விசித்திரா க.பொ.த.சாதாரண தரப் பெறுபேற்றில் 10 ஏ பெற்று அதி திறமைச் சித்தியடைந்திருந்தார். ஆனால் பெறுபேறு வந்தபோது விசித்திராவை சுனாமி காவு கொண்டிருந்தது. அம்மாணவியின் நினைவாக கற்பித்த ஆசிரியர் ஹாமிட் எம்.சுகைப் வரைந்த மடல்.*

## சுனாமிக்குள் விசித்திரா!

விசித்திரா....
நீ நேசித்த
கடலன்னையே...
உன்னை -
காவு கொண்ட
அதிர்ச்சியில்
அந்த நிலவும் -
முகமிழந்து
போனதே!

நீ
இல்லாது -
தவிக்கிறது
காரைதீவு
விபுலானந்த
கல்லூரி!
ஆதவன்
இல்லாத
தாமரையாய்!
நீ
இல்லாது...
துடிக்கிறாள்
காரைதீவு
அன்னை!
கன்றிழந்த
பசுவாய்!

பத்து
அதி விசேட
சித்தியாய்
பூமாலை
உனக்கு
வந்தபோது
விசித்திராவே!
நீ
எங்கு
சென்றாய்!

சித்திரமே..
விசித்திராவே!
உன் நாமத்தை
என்
கவிதைகள்...
பாடும்
எலகமழியும்
வரை!

*-ஹாமிட் எம்.சுகைப்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

*தன் அனுபவங்கள், தன்னினத்தின் இன்பதுன்பங்கள், தான் சார்ந்துள்ள சமூகத்தின் உணர்வுகள் என்பவற்றில் மூழ்கி திளைத்து வெளிகொணரும் முத்தே நூல் என்பது.*

*இத்தகைய நூல்கள்தான் நமது, கால பொக்கிஷங்கள். கடந்த கால வரலாறுகளை எமக்குச் சொல்லும் செப்பேடுகள் எதிர்கால சந்ததியினருக்கு, எமது இருப்பை சொல்லும் பதிவுகள் என்று மிகச் சுருக்கமாக தனது தொகுப்பின் பதிப்புரையில் உணர்வுகளைப் பதியப் போட்டிருக்கும் கவிமணி கலாஜோதி குமார இராமநாதனின் சுஷசாரல் தொகுப்பிலிருந்து மூன்று கவிதைகள் இவ்வாரம்.*

முரசின் கவிதை பயிற்சிக்களம்
பகுதியில் புதிய கவிஞர்களின்
வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு
களம் அமைத்துக் கொடுக்கின்றது.
தமது கவிதை வெளியீடுகளை
அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை
வெளிக் கொண்டுவர விரும்புவோர்
முரசுடன் தொடர்பு கொள்ளலாம்

## எங்கள் அன்னை

ஒன்றும் புரியாமல் உலகம்
தெரியாமல்
இன்றுவரை வாழ்ந்துவிட்டார் எங்கள்
அன்னையர்!

தொன்று தொட்டு விடியலிலே
துயிலெழுந்து சமைத்து வைத்து
குன்றுமலை ஏறி என்றும்
கொழுந்துகள் பறித்தெடுத்து
அந்தியிலே வீடு வந்து
அரவணைத்து குழந்தைகளை
சொந்தமுள்ள கணவனுக்கும்
சுகந்தருவாள் எங்களன்னை!

மாலையில் நாடு சென்று
வருங்கணவன் பார்த்திருந்து
போதையிலே அவனுதைத்தால்
பேதை கண்ணீர் வடித்து
மீதி நகை கொடுக்கும் பெண்மை
மேதினியில் எங்கேயுண்டு?
காலையிலே எழுந்து மீண்டும்
கடமைக்குச் சென்றிடுவாள்! -
எங்களன்னை

கங்காணிமார் தொடங்கியங்கே
கறுப்புதுரைமார்கள் வரை
'செங்கோல்கள்' செலுத்துந் தோட்டம்
தேயிலை அவனின் உலகம்,
தானறியாக் கல்விதனை
தன் மகற்குக் கொடுங்கள் என
மேமலைகள் ஏறிநெற்றி
வியர்வை சிந்திடுவாள்!

இந்தியாவில் வாழ்ந்த கதை
எங்கள் பாட்டன் வந்த கதை
ஆயிரம் கதைகளம்மா
அன்னையவள் தாலாட்டில்

அவள் பறிக்கும் தேயிலையால்
அவனியெங்கும் மாளிகைகள் -
அன்னையவள் உறங்குவதோ
இன்றுமின்றும் லயத்தினிலே
எங்கள் அன்னை! எங்கள் அன்னை!

## இழி பிறப்பு

ஓ மானிடனே!
உலகின் படைப்பில்
உயர்ந்தவன்
நீயென
எண்ணிச்
சிரிக்கின்றாய்
சீச்சி!
இளிப்பை நிறுத்து!
என்றும் நீயே
இழிந்த பிறப்பு!!
உன்னைத் திருத்த
உலகில் தோன்றிய
எல்லா நெறிகளும்
என்ன கிழித்தன
எண்ணில் அடங்கா
எண்ணக் குவியலை
அள்ளித் தெளித்தும்
அவைதான்
மடிந்தன!
வஞ்சனை என்பதை
மனதில் இருத்தி
வாயில் தேனை
வடித்து பேசும்
உன்னைத் திருத்த
உணரமாட்டாய்
உலகைத் திருத்த
ஓடித்திரிவாய்,
உன்னை இன்றும்
உணராத உனக்கு
உலகைப் பற்றிய
கவலை எதற்கு?
காற்றில் ஏறி
விண்ணை அளந்து
சுகன வெளியில்
நிலவைப் பிடித்து
பூதம் ஐந்தைப்
பொறிகளில்
அடக்கிப்
பூமியில் 'ஞானி'
நானே என்று
மார்பில் தட்டி
'மாரடிக் கின்றாய்'
பொறிகள்
ஐந்தால்
புலன்களை
அடக்குந்
திறமை இல்லா
நீயோ ஞானி?
சீச்சி!
வாயை மூடு
உன்னில் ஞானம்
உருப்பெற
வில்லை
விண்ணில் ஞானம்
மேவித் திரிந்தாய்!
உன்னுள்
தோன்றும்
உணர்வுகள்
மட்டும்
உயர்வாய்
தோன்றும்
ஆனால் இந்த
மண்ணில் வாழும்
மற்றோர்
உணர்வை
மதித்திட என்றும்
மறுக்கின்றாயே!
நீயோ மனிதன்?
நீயோ ஞானி?
என்றும் நீயே
இழிந்த பிறப்பு!

## ஓ....... நந்திகளே!

தொந்திகளே
மலையகத்தை சுரண்டி
சுரண்டிக் கொழுத்த
நந்திகளே!
சற்று
நகருங்கள்!


கல்விப் பணிபுரிய
உங்களுக்கு
கடதாசி
நியமனங்கள்!

மலையகத்தைத்
திருத்தும்
மகான்கள் நீங்களல்ல!


வானத்து விடிவெள்ளி,
வழிகாட்டும் விளக்கென்று
தானாக எண்ணித்
தலைகொழுந்துத்
திரியாதீர்!

பல்கலைக் கழகத்தில்
படித்தும் இருக்கின்றோம்,
பள்ளிகளை நிருவகித்துப்
பலரை உருவாக்கிய
பழக்கம் எமக்குண்டு!
கல்வியிலே பலரைக்
கரை
சேர்த்திருக்கின்றோம்!
புதிதாக நீங்கள்
புகட்டுதற்கு ஏதுமில்லை!
வாங்கும் சம்பளத்தை
வழிநடக்கும் செலவுகளை
எண்ணி வாழும்
இதயமிலா உங்களுக்குப்
பந்தம் பிடித்தலையும்
பக்தர்கள் இருக்கலாம்!
அவர்களுக்கு
வரங்கொடுக்கும்
தெய்வங்களாய்
நீங்கள் வாழலாம்!
ஆனால்
எங்களுக்கு நீங்கள்
என்றென்றும் நந்திகளே!

## பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி



பெயர் : தி. லஜீத்
வயது : 20
முகவரி : குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர் : ச. புஸ்பகுமார்.
வயது : 18
முகவரி : சல்லித்தீவு, பனிச்சங்கேணி.
பொழுதுபோக்கு : வழமையானவை




பெயர் : நி. வித்தியா.
வயது : 24
முகவரி : 345, பேராதனை வீதி, கண்டி.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி, கணனி.



பெயர் : என்.எம்.எம். றிஸ்வான்.
வயது : 21
முகவரி : 385/A, மௌலானா வீதி, ஏறாவூர் - 03.
பொழுதுபோக்கு : வழமையானவை

# அழகான குளியலறையின் இரகசியம்!

"என் வீட்டில் பாத்ரூமே இல்லை. கிளாமர் ரூம்ஸ் தான் உண்டு" என்று விளம்பரத்தில் ஒரு மாடல் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். குளியலறையும் ஒரு அறை தான்! அதையும் அலங்கரிக்க வேண்டும் என்ற மனப்பான்மை தற்பொழுது அனைவரிடமும் உள்ளது. ஏனெனில் ஒரு காலத்தில் வீட்டின் பின்புறத்தில் தான் குளியலறை இருந்தது. இப்பொழுது படுக்கையறையோடு சேர்ந்த 'அட்டாச்ட் பாத்ரூம்' என்றாகிவிட்டது.



## குளியலறை அமைப்பு

வீட்டில் வரவேற்பறை, படுக்கையறை, சமையலறை போன்று குளியலறையின் அமைப்பும் முக்கியமான ஒன்று. ஒவ்வொரு குளியலறையிலும் பெரியவர், சிறியவர் ஆகியோர்க்கு ஏற்ற முறையில் அமைப்பது அவசியமாகிறது. அது மட்டுமின்றி வீட்டில் வெவ்வேறு விதமாக இரசனை உள்ளவர் களை மனதில் கொண்டு குளியலறை அமைப்பது அவசியமாகும். இதில் இடம், பரப்பு, வசதிகள் மற்றும் அழகுபடுத்துதல் ஆகிய அனைத்தும் இடம் பெறுகின்றன.

குளியலறையில் பாத்டப் திரை, டைல்ஸ், குழாய், ஷவர், கேபினட், கண்ணாடி போன்றவற்றின் தேவை அவசியமாகிறது. அது மட்டுமின்றி குளியலறை நிறமும் முக்கியமான ஒன்று. கவர்ச்சியான நிறத்தின் மூலம் தான் குளியலறை அழகாகக் காட்சியளிக்க முடியும்.

முன்பே இருக்கும் குளிலறைகளை இடித்து உடைத்து புதிதாகக் கட்டுவதை விட எளிமையான முறையில் சில மாற்றங்களை மட்டும் செய்வதன் மூலம் இவை மேலும் அழகாகக் காட்சியளிக்கக் கூடும்.

### குளியலறையில் இடத்தை எப்படிப் பயன்படுத்துவது?

சில மாற்றங்கள் செய்தால் திரை, டவல்கள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை மாற்றுவதன் மூலம் குளியலறையின் தோற்றத்தை மாற்றலாம். முழுவதும் இருட்டடிக்கிற குளியலறையில் பூந்தொட்டிகளில் செடிகளை வைப்பதன் மூலமும், மங்கலான நிறம் கொண்ட குளியலறையில் பளிச்சிடும் நிறத்தைப் பூசுவதன் மூலமும் குளியலறையை அழகு படுத்தலாம்.

இதேபோன்று குளியலறை மிதியடி, சுவரில் மாற்றம், புகைப்படம், ஓவியம் ஆகியவற்றைக் கொண்டோ தண்ணீர் ஒட்டாத வண்ண வால் பேப்பர் ஒட்டியோ மாற்றத்தைக் கொண்டு வரலாம்.

கூடுதலான இடம் கிடைக்கும். திறப்பாக உள்ள ஷெல்ஃப்களை நல்ல வர்ணம் கொண்டு பூசுவது நல்லது. சுவரில் கண்ணாடி பொருந்துவதால் அதிக இடம் இருப்பது போல் தோன்றும்.

### குளியலறை பற்றிய சில அவசியக் குறிப்புகள்!

குளியலறைக்காக அதிகம் செலவழித்து அழகுபடுத்த வேண்டும் என்று அவசியமில்லை. சுவரில் கண்ணாடி ஷெல்ப் வைத்து அதில் அழகான பூந்தொட்டிகள் வைக்கலாம். சுவரில் இயற்கைக் காட்சி ஓவியங்களை விடவும்.

ஒரு அழகான குளியலறையில் நாள் துவங்கினால் அன்றைய நாள் முழுவதும் மனதில் புத்துணர்ச்சி இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

# கீரை வகைகளின் மருத்துவக் குணம்

***முருங்கைக் கீரை*** - இது ஒரு சத்து நிறைந்த கீரை. ஆண்மையை வளர்ப்பது. குருதியைத் தூய்மைப்படுத்தும். இரும்புச் சத்துக் கொண்டது. உடல் வெப்பத்தை தணிப்பது, மலச்சிக்கலைப் போக்குவது. மாதவிடாய் தறுவாயில் வலியிருந்தால் முருங்கைக் கீரைச் சாற்றில் உப்பு போட்டு அருந்தினால் வலி மறையும். வயிற்றுப் புண் ஏற்படாமல் தடுக்கும். பிற மருந்துகளின் பக்க விளைவுகளை அகற்ற இதன் சாறு உதவும். தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இருதய நோய்களின் தாக்குதலிலிருந்து தப்பிக்கலாம். சிறுநீரைப் பெருக்குவதால் உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் பக்க விளைவுகள் ஏற்படுத்தும் மாத்திரைகளை நிதமும் எடுத்துக் கொள்வதிலிருந்து தப்பிக்கலாம். கருவுற்றோர் வாரம் ஒரு முறை சாப்பிட்டால் நீர் இறங்கும். கை, பாத வீக்கத்தைத் தடுக்கும். சோகையைப் போக்கும்.

***புளிச்சக் கீரை*** - உடலுக்கும் குடலுக்கும் வளமூட்டும். வயிற்றுப் புண்ணை ஆற்றும். வயிற்றுக் கடுப்பு உள்ளவர்கள் இக்கீரையை வெங்காயம், வெந்தயம் போட்டு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் உடனே நிவாரணம் தெரியும். குட் பலவீனத்தால் ஏற்படும் பேதி நிற்கும், குருதிப் போக்கைக் குறைக்கும்.

***சிறுகீரை*** - உடல் தளர்ச்சியைப் போக்கி ஊக்கமூட்டுவது, மலச்சிக்கலைப் போக்குவது, குடலின் பலத்தை அதிகரிப்பது, உடல் பித்தத்தைக் குறைப்பது.

***வெந்தயக் கீரை*** - முருங்கை போலவே இரும்புச் சத்துடையது. உடலுக்கு ஊக்கத்தை அளிப்பது, வயிற்றுப் புண்ணை ஆற்றுவதில் சிறந்தது. கண்ணுக்கு மிகவும் நல்லது. பேதி சமயத்தில் சாப்பிட்டால், பேதியைக் கட்டுப்படுத்தவல்லது.

***அகத்திக் கீரை*** - வெப்பத்தைத் தணிக்கும், உள் சூட்டை அகற்றுவதால் இதற்கு அகத்தி என்ற பெயர் ஏற்பட்டது. அனைத்து வகையான சத்து களையும் உடையது இந்தக் கீரைதான். குடல், குருதியைத் தூய்மைப்படுத்தும். குடற்புழுவைக் கொல்லும், பித்தத்தை தணிக்கும். தலைச்சுற்று, மயக்கம் ஆகியவற்றைப் போக்கும். உடலில் எந்த வகையில் விஷம் சேர்ந்திருந்தாலும் அதை முறிக்கும் தன்மை இதற்குண்டு. ஆனால் இதை அடிக்கடி சாப்பிட்டால் பேதி ஏற்படும்.

***பசலைக் கீரை - பருப்புக் கீரை***

குளிர்ச்சி தருவதில் சிறந்தது. நீர் உடலினர் அடிக்கடி சாப்பிடக் கூடாது. நீரைப் பெருக்கும். பால் சுரக்கும். வயிற்றுப் புண்ணாற்றும், கண்ணொளி தரும்.

***மணத்தக்காளி கீரை*** - அல்சரை ஆற்றுவதில் முதன்மையானது, குடலுக்கு பலமளிப்பது, பெண்மையை வளர்ப்பது, மங்கையருக்கு மார்பை வளரச் செய்வது, கருப்பை குறைப்பாட்டை நீக்குவது, குடற்புழுவை அகற்றுவது.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

07

பெயர் : ..........................................

முகவரி : ..........................................
..........................................
..........................................

தே-அ- அட்டை இல : ..........................................

கையொப்பம் : ..........................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 31.01.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போது மானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி 07**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 05
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம்.எல்.எம். அனீஸ்,**
**378, முனையவளவு வீதி, ஏறாவூர் - 01**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## குக்கரில் சோயா கேக்

***தேவையான பொருட்கள்***

| | |
|---|---|
| சோயா மா | - 2 கப் |
| வெதுவெதுப்பான நீர் | - 1 கப் |
| ஈஸ்ட் பவுடர் | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - 1 தேக்கரண்டி |
| சர்க்கரை | - 1 தேக்கரண்டி |
| நெய் | - 3 தேக்கரண்டி |
| துருவிய சீஸ் | - 100 கிராம் |
| தக்காளி ஜூஸ் | - 2 கப் |
| பூண்டு | - 4 |
| வெங்காயம் | - 1 (நறுக்கியது) |
| குடமிளகாய் | - 1 (சிறு துண்டுகளாக நறுக்கியது) |
| உப்பு | - 1/4 கரண்டி |
| மிளகுப் பொடி | - 2 சிட்டிகை. |

***செய்முறை***

1 கப் வெதுவெதுப்பான நீரில் ஈஸ்ட் பவுடர், சோயா மா, சர்க்கரை, உப்பு போட்டு நன்கு பிசைந்து 10 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.

தக்காளி ஜூஸ், பூண்டு, வெங்காயம், மிளகுப் பொடி போட்டு கொதிக்க விடவும்.

தக்காளி ஜூஸ் கெட்டியாக வந்தவுடன் இறக்கவும்.

குக்கர் பாத்திரத்தில் நெய் தடவி, பிசைந்த சோயா மாவைப் போடவும்.

சோயா மாவின் மேல் தக்காளி கலவையை ஊற்றவும்.

இதன் மேல் நறுக்கிய குடமிளகாயை வைக்கவும்.

துருவிய சீஸை தூவி மூடிவிடவும்.


குக்கரின் உள்ளே மண்ணைப் போட்டு, அதன் மேல் குக்கர் பாத்திரத்தை வைத்து மூடி அடுப்பில் வைக்கவும்.

வெயிட் போடாமல் 30 நிமிடம் வைத்து இறக்கவும்.

# போய்ஃபிரண்டை எப்படித் தேர்ந்தெடுப்பது?

**இன்றைய** டீன் ஏஜ் பெண்களுக்கு போய்ஃபிரண்ட் வைத்துக்கொள்வது ஒரு ஃபேஷன் என்று எண்ணுகிறார்கள். சக மாணவிகளின் வற்புறுத்தல் சில சமயம் உங் களைக் கஷ்டத்துக்கு ஆளாக்கலாம்.

முதலில் போய்ஃபிரண்ட் உங்களுக்கு அவசி யமில்லை என்பதை உணருங்கள். மற்றவர்கள் வைத்திருப்பதைப் பார்த்து



நீங்களும் போய் ஃபிரண்ட் வைத்துக் கொள்வது அவசியம் என்று எண்ண வேண்டாம். உங்களின் நல்ல தோழி கள் உங்களுக்குப் பல போய் ஃபிரண்டுகளை அறிமுகப்படுத்தி வைக்கலாம். ஆனால் உங்களுக்கு பிடிக்காமலிருந்தால் நீங்கள் அவர்களுடன் பழக மறுத்துவிடலாம்.

போய் ஃபிரண்ட் என்பது ஒரு ஆணாக இருக்கும் ஒரு நண்பன் மட்டுமே. ஆகவே முக அழகைப் பார்க்காமல் அவனிடமுள்ள நல்ல குணங்களைப் பாருங்கள். அதன் பிறகு ஒரு முடிவெடுங்கள். ஆனால் அவசரப்பட்டோ அல்லது கண்மூடித்தனமாகவோ எந்த முடிவும் எடுக்காதீர்கள். அவனைச் சந்தியுங்கள், பேசுங்கள். ஆனால் தனியாக அல்ல. சற்று அவகாசம் எடுத்து நீங்கள் அவனை போய் ஃபிரண்டாக ஏற்றுக்கொள்ளலாமா என்று சிந்தித்துப் பாருங்கள்.


உங்களிடம் நண்பனாக இருப்பதை விரும்பாத யாரையும் வலிய சென்று போய் ஃபிரண்டாக்கிக் கொள்ளாதீர்கள். இல்லை யென்றால் உங்களுக்கு அந்த நட்பினால் வீண் பிரச்சினைகள்தான் ஏற்படும். டீன் ஏஜ் என்பது வீண் பிரச்சினைகளில்லாத காலமாகும்.

உங்கள் போய் ஃபிரண்டிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று ஒரு லிஸ்ட் தயாரிக் கவும். உங்கள் லிஸ்ட் மிக நீண்டதாகவோ அல்லது மிகவும் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டதாகவோ இருந்தால் உங்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற போய் ஃபிரண்ட் கிடைப் பான் என்பதை மறந்துவிடுங்கள்.

திருமணம் போன்ற ஆழ்ந்து யோசித்து எடுக்க வேண்டிய முடிவுகளை நின்று நிதானித்து முடிவு செய்யுங்கள். இப்போது, உங்கள் எதிர்காலத்தை நல்லபடியாக உரு வாக்க, நன்கு படிக்க வேண்டிய வயது. நல்ல போய் ஃபிரண்ட் உங்களின் இலட்சியங்களை அடைவதில் உங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்.

அவன் அதற்கு நேர்மாறாக உங்கள் படிப்பிற்கு இடைஞ்சல் விளைவிப்பவனாக இருக்கக் கூடாது. உங்களின் கல்லூரி பரீட்சைக்கு முதல் நாள் உங்களை சினிமா பார்க்க அவன் அழைத்தால், அந்த மாதிரியான நண்பனை மறந்துவிடுங்கள். தனது நேரத்தை உல்லாசமாகக் கழிக்கவே அவன் உங்களுடன் பழகுகிறான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவன் உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் எதிர்காலத்தைப் பற்றியோ கவலைப்படாதவன் என்பதை உணருங்கள்.

நன்கு நேரம் எடுத்துக்கொண்டு சிந்தித்து



எடுத்த முடிவு எப்பொழுதும் நல்லதாக அமை யும். அவசரப்பட்டு எடுத்த முடிவுகள் உங்களை துன்பத்துக்கு ஆளாக்கும். சரியான மற்றும் நல்ல போய் ஃபிரண்டைத் தேர்ந்தெடுப்பது என்பது உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக் கும் மிக முக்கியமான முடிவு ஆகும். ஆகவே உங்களுக்குத் தேவையான நேரத்தை நன்றாக எடுத்துக்கொண்டு நல்ல போய் ஃபிரண்டைத் தேர்ந்தெடுங்கள். கெட்ட பழக்கவழக்கங்களை உடையவனைக் கட்டாயமாக நீங்கள் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அவன் பலவீன மானவனாகவும், நிதானமில்லாதவனாகவும் இருக்கக் கூடும்.

# ஒரு தாயின் மகன் 64

"உளகூம் நீ எங்கேயும் போகக் கூடாது அப்பா""

"நானும் போக வேண்டாமென்றுதான் பார்க்கிறேன் முடியவில்லை."

"ஏன் முடியலே?"

"என்னவோ அப்படியெல்லாம் நேர்ந்து விட்டது"

"சரிபண்ணிப் பாரேன்"

"பண்ணிப் பார்த்தேன் முடியவில்லை" என்றான் பிராட். உண்மையில் சரி பண்ணுவதற்கு எந்த முயற்சியும் தான் எடுத்துக் கொள்ளவில்லை என்று அவனுக்குத் தெரியும். வீட்டை விட்டு வெளியேறுவதுதான் நிம்மதி என்று அவன் முடிவுக்கு வந்து விட்டான். ஸ்டிபானியுடன் வேறு வீடு, வேறு வாழ்க்கை....

"போகாதே அப்பா" என்று மறுபடி கெஞ்சினான் ஆண்டி. "உஷ்! அசடு மாதிரி பேசாதே. நம் எல்லோருக்கும் இதுதான் நல்லது. அதனால்தான் போகிறேன்" என்று பிராட் சொன்னதும் ஆண்டி அழுதுகொண்டே தாயிடம் ஓடி அவளைக் கட்டிக் கொண்டான். அன்று இரவு பிராட் அங்கேதான் தங்கினான். ஆனால் இரவு முழுதும் தன் பொருள்களை எடுத்து வைத்துக் கொள்வதிலேயே நேரம் சென்றது. பொழுது விடிந்தபோது, இழவு விழுந்த வீடு மாதிரி இருந்தது. காரில் தன் சூட்கேஸ்களையும் பைகளையும் பிராட் எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது "உன்னை மறுபடி எப்ப அப்பா பார்ப்பது?" என்றான் ஆண்டி. "அடுத்த சனிக்கிழமை. நிச்சயமாய்ப் பார்க்கலாம். நான் வெளியூர் போயிருக்கிறதாய் நினைத்துக் கொள். தினம் தினம் என் ஆபீசுக்குப் போன் பண்ணிப் பேசலாம்." என்ன சொல்லியும், எத்தனை வாக்குறுதி கொடுத்தும் ஆண்டி மனம் தேறவில்லை. கார் கண்ணுக்கு மறையும் வரையில் அழுது கொண்டேயிருந்தான். அவனை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு தேற்றினாள் பேஜ். ஆனால் அவளுக்கும் கண்ணீர் வழிந்தது.

நாலு வாரங்களுக்கு முன்பு ஆலிஸனுக்கு நேர்ந்த அந்த விபத்துக்குப் பின்னர் இன்று தான் மிக மோசமான நாளாக இருந்தது அவளுக்கு. இத்தனை வருடங்களாகக் கட்டிக் காத்த நம்பிக்கைகள், கண் படுகிற மாதிரி கணவனும் மனைவியும் நடத்திய வாழ்க்கை, உருவாக்கி வளர்த்த குடும்பம் - எல்லாம் போயே போய் விட்டன. ஆண்டி ரொம்ப நேரம் அழுது கொண்டிருந்தான். இருவரும் உள்ளே திரும்பி, அருகருகே உட்கார்ந்தார்கள். வீட்டில் யாரோ இறந்து விட்ட மாதிரி இருந்தது. அவர்கள் மிக நேசிக்கும் இரண்டு ஆன்மாக்களை உயிரோடு பறிகொடுத்து விட்ட மாதிரி... மறு நாள் காலை அவள் கண்விழித்துப் பார்த்தபோது ஆண்டி குப்புறப் படுத்து, தலையணையில் முகம் புதைத்து அழுது கொண்டுதான் இருந்தான்.தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, "அழாதேடா கண்ணா" என்றாள். ஆண்டி புரண்டு படுத்து அவளை நேருக்கு நேராகப் பார்த்தான். "அப்பாவை வீட்டை விட்டுப் போகணும் என்று நீதான் சொன்னியாம்மா?". "இல்லைடா, ராஜா, அவர் போகும்படி ஆகிவிட்டது. நிலைமை ரொம்ப மோசம்" "என்ன மோசம்? எதுக்காக நீயும் அப்பாவும் சண்டை போட்டீங்க?" "எனக்கும் தெரியவில்லை. ஏதோ போட்டோம்" என்றாள் அவள். எப்படி விளக்குவது என்று தெரியவில்லை. அவளுக்கே இன்னும் சரியாய் விளங்காதபோது, ஏழு வயதுக் குழந்தைக்கு எப்படிப் புரிய வைக்க முடியும்?


பிற்பகல் தாரென்ஸன் போன் செய்தான். நடந்ததைச் சொன்னாள் பேஜ். "ஆண்டியுடன் இங்கே சாப்பிட வா. மனசுக்கு மாறுதலாயிருக்கும்" என்று கூப்பிட்டான். அவள் சம்மதித்தாலும் ஆண்டி முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. பிஜானுடன் விளையாடிக் கொண்டிருக்கலாம் என்று அவள் சொன்ன பிறகே ஒப்புக் கொண்டான். அங்கே போனதுமே, சினேகிதனின் முகம் வாடியிருப்பதைப் பிஜான் கண்டுகொண்டான். இருவரும் வெளியே போய்ப் பேசிக் கொண்டிருந்த சமயம், "ஆண்டி எப்படி எடுத்துக் கொண்டான்?" என்று தாரென்ஸன் விசாரித்தான். "நான் நினைத்திருந்ததை விட மோசம். நிஜமாகவே பிரிந்து போவது என்ற கட்டம் வந்ததும் எனக்கும் சகிக்கவில்லை."

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"புரிகிறது" என்றான் தாரென்ஸன். அவனும் அவன் மனைவி டயானாவும் பிரிந்தபோது வீடு எப்படி இருந்தது என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது. "கடவுளே, எவ்வளவு வேதனை உனக்கும் ஆண்டிக்கும்!" என்று பெருமூச்சு விட்டான். "எல்லோருக்கும்தான்" என்ற பேஜ், "க்ளோ எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள். "அநேகமாய் அடுத்த வாரம் வீட்டுக்கு வந்து விடுவாள். நடை பழகுவதற்கு ஊன்றுகட்டை முதலானது வாங்க வேண்டும். அவள் படுக்கையறை மாடியில் இருக்கிறது. ஆனால் கீழேதான் இருக்க வேண்டியிருக்கும். என் மூத்த பையன் நிக்கின் அறையை அவளுக்கு ஒழித்துத் தரப் போகிறேன்.." அவன் சொல்லிக் கொண்டே போனபோது, இவர் புண்ணியம் பண்ணினவர் என்ற நினைப்பு ஏற்பட்டது அவளுக்கு. கால் சரியாக இருக்கிறதோ இல்லையோ, வீட்டுக்கு உயிரோடு வருகிறாள் க்ளோ. ஆனால் ஆலிஸனின் நிலைமையில் எந்த முன்னேற்றத்தையும் காணோம்.. நாலு வாரமாகிறது. தாரென்ஸன் அருமையாகச் சமையல் செய்து வைத்திருந்தான். சாப்பிட்டு விட்டுத் தோட்டத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். அவன் 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதியிருந்த கட்டுரையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். பேஜின் மனம் அதில் செல்லவில்லை.

"பிராட் புறப்பட்டுப் போனபோது எனக்கு ஏற்பட்ட வருத்தம்.. அப்படியொரு வருத்தம் ஏற்படுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை.." என்றாள். "இருக்காதா பின்னே? பதினாறு வருஷம் குடும்பம் நடத்தியிருக்கிறாயே? மரக் கட்டையா நீ!" என்றான் தாரென்ஸன். "பார்த்தாயா, உன்னிடம் ஒன்று சொல்ல நினைத்திருந்தேன். மறந்தே போயிற்று. போன வாரம் ஒரு விஷயம் காதில் விழுந்தது." "என்ன?" "ஒரு பார்ட்டிக்கு லாரா ஹட்சின்ஸ் - அந்த செனெட்டரின் மனைவி வந்திருந்தாளாம். எக்கச்சக்கமாய் குடித்து விட்டுத் தள்ளாடினாளாம். அசிங்கமாகி விடும் என்று அவளை அவசர அவசரமாக அந்தண்டே இழுத்துக்கொண்டு போய் விட்டார்களாம். நீயும் நானும் சாதாரண மனிதர்கள். குடித்து விட்டுக் கீழே விழுந்தால் கிடக்கட்டும் என்று போய் விடுவார்கள். லாரா பெரிய இடமாயிற்றே! அதனால் கமுக்கமாய் அமுக்கி விட்டார்கள். இதற்கு முன் எவ்வளவு இடத்தில் எவ்வளவு தடவை அந்த மாதிரி அசிங்கம் நடந்திருக்கிறதோ?"

(தாய் தொடர்வாள்.....)




சென்ற வாரம்

ஆண்டி ஆலீனைப் பார்க்க ஆசைப்படுவதால் ஆண்டியை ஆலிஸனிடம் அழைத்துச் செல்கிறாள். அங்கு ஆண்டி ஆலிஸனிடம் கதைத்துக் கொண்டிருக்கிறான்.

வீட்டிற்கு திரும்பிய போது அங்கு பிராட் அவசர அவசரமாக தனது துணிமணிகளை மூட்டை கட்டிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்து கவலை அடைந்த ஆண்டி பிராடை பிராடை போகவேண்டாமென்கிறான்.

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

23



அது 1945 ஆகஸ்ட் 6 அதிகாலை மணி 5. சோம்பல் முறிக்கிறார்கள் ஜப்பானியர்கள்; சிறகு விரிக்கின்றன பறவைகள்.

கண்களில் தூக்கத்தையும் கைகளில் பொம்மையையும் கட்டிக்கொண்டு, என் உறக்கத்தை யாரும் கலைத்து விடாதீர்கள் என்று செல்லமாய்ச் சிணுங்குகிறது சிறு குழந்தையொன்று - மூன்றேகால் மணி நேரத்தில் மரணம் வழியில் வந்து கொண்டிருக்கிறது என்பதை அறியாமல். துவைத்துப் போட்டதுபோல் களைத்துக் கிடக்கும் புது மனைவியின் தூக்கம் கலைத்து, அவளை இன்னொன்றுக்கும் ஈடுபடுத்த சிருங்கார உத்தி செய்கிறான் புதுமாப்பிள்ளை - சிறகு முளைத்த மரணம் சிறகடிக்காமல் வழியில் வந்துகொண்டிருப்பதை அறியாமல். அதிகாலை மணி 6. ஹிரோஷிமா பல் துலக்குகிறது; ஹிரோஷிமா குளிக்கிறது. கண்கள் துடைத்துவிட்டுக் கறுப்புத் தேநீர் குடித்து விட்டுத் தன் பள்ளிப்பிள்ளைக்கு மதிய உணவு கட்டி முடித்துக் காலைச் சிற்றுண்டிக்கு ரொட்டியில் வெண்ணையும் பாலாடைக் கட்டியும் தடவிக் கொண்டிருக்கிறாள் தாயொருத்தி. "இன்றாவது சீக்கிரம் வந்து விடுங்களப்பா. இன்று என் பிறந்த நாள்". தந்தைக்குக் கட்டளையிட்டு விட்டுப் பள்ளிக்கு ஏகும் பாசமலர். அதிகாலை மணி 7 சுறுசுறுப்படைந்து சிவ்வென்று சிறகடிக்கிறது ஹிரோஷிமா. நகரும் வாகனங்கள்; தூரத்து ரயிலோசை; உயிர் முளைத்த அவசரங்கள்; ஓட்டமும் நடையுமாய் உருளத் தொடங்கும் வாழ்க்கை. அது ஆகஸ்ட்; ஜப்பானில் அது இளவேனிற் காலம். பளிச்சென்றிருக்கிறது பழுப்பு நிற ஆகாயம். எந்த முகிலோட்டமும் இல்லை; நிர்வாணமாயிருக்கிறது வானம் - இன்னும் ஒன்றேகால்மணி நேரத்தில் அங்கே ஒரு பூதாகாரமான புகைமேகம் உருவாகப் போவதை அறியாமல். சுற்றத் தொடங்கி விட்டது அலுவலகச் சக்கரம். தொடங்கி விட்டது பள்ளிக்குச் செல்லும் பட்டாம் பூச்சிகளின் ஊர்வலம். புல்வெளிகளையும் பூங்காக்களையும் சுற்றிப் பொடிநடை நடந்து, வந்த தூரம் குறைவு; செல்லும் தூரம் அதிகம் என்று மருகி நிற்குதுகள் பெருசுகள் - மரணமொன்றும் தூரமில்லை என்பதை அறியாமல். மணி 8. ஹிரோஷிமா ராணுவத் தலைமையக ராடாரில் விட்டு விட்டு ஏதோ தட்டுப்படுகிறது. என்ன இது... எங்கள் வான் வெளியில் எங்களை அறியாமல் ஆவேசமாய்ச் சில அலுமினியப் பறவைகள்? என்னவோ நடக்கிறது... ஏதோ ஒரு விபரீதம் நிகழப்போகிறது. தயார்ப்படுத்துங்கள் ராணுவத்தை. உஷார்ப் படுத்துங்கள் ஊரை. எல்லாத் திசைகளும் எழுந்து நிற்கட்டும்; அபாய அறிவிப்புகள் பறக்கட்டும். முதலில் வானொலி... வானொலி... ஹிரோஷிமா வானொலிக்குத் தகவல் அனுப்புங்கள். உடனே.. உடனே.. வேகமாய்... இன்னும் வேகமாய்.

அதோ பார் ஒரு விமானம்! எத்தனை பெரிதாய்! எத்தனை அழகாய்! - பிடிவாதப் பேத்தியை விமானம் காட்டிச் சமாதானப் படுத்துகிறாள் பாட்டி ஒருத்தி, அதுதான் அவர்களின் உயிர்கொத்த வந்திருக்கும் ஆகாயக் கழுகு என்பதை அறியாமல். ஆபத்து! ஆபத்து! நம் வான் எல்லைக்குள் அறிவிப்பில்லாமல் அந்நிய விமானங்கள். உடனே... உடனே அறிவியுங்கள். ராணுவத் தலைமையகம் பதறியது. மணி 8.14. அன்று 'அதிகாலைப் பணியிலிருந்த அறிவிப்பாளர் ஃபருட்டா செய்தியை வாங்கிக் கொண்டு உயிர்பதற ஓடி, ஓடிக்கொண்டிருந்த ஒலிபரப்பை நிறுத்திப் பொத்தானை அழுத்தி அலறும் குரலில் அறிவிக்கிறார். 'ராணுவத் தலைமையகத்தின் ஒரு முக்கிய அறிவிப்பு. மூன்று பெரிய பகை விமானங்கள் நமது சைஜோ பகுதியில் ஊடுருவியுள்ளன. நாம் முன்னெச்சரிக்கையாய்...' - அதுவரைக்கும்தான் அறிவிப்பு கேட்டது. ஹிரோஷிமாவின் தலைக்கு மேலே பறந்த எமதர்மப் பறவை பூமியில் இட்டது தன் அக்கினி முட்டையை.

சாவின் வெறி நாய் வானத்திலிருந்து அவிழ்த்து விடப்படுகிறது வாழ்வை நோக்கி. மூன்று மீட்டர் நீளம். முக்கால் மீட்டர் விட்டம், நாலு டன் எடை கொண்ட அணுகுண்டு அறுந்து விழுகிறது அந்தரத்தில். வானத்தைச் செவிடுபடுத்தும் பேரோசையோடு வெடித்துச் சிதறுகிறது விண்ணில். அணுகுண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டு இருந்த யுரேனியம் புளூட்டோனியம் இரண்டும் உரச... நியூக்ளியஸ் இரண்டாக உடைய... உடைந்த இரண்டும் மூன்று நியூட்ரான்களை உற்பத்தி செய்ய... மூன்று ஆறாய்... ஆறு பன்னிரண்டாய்... பன்னிரண்டு இருபத்து நான்காய்.. இரட்டை மடங்கில் படபடவென்று பரவி வெடிக்க.. ஒரு ராட்சச நாய்க் குடை வானத்தை விழுங்க... பூமியைத் தின்னுவேன் என்று திரண்டு வருகிறது தீயுருண்டையொன்று. நூறு மீட்டர் விட்டம் கொண்ட தீயுருண்டையில் முதல் வெப்பம் 10,000 டிகிரி செல்சியஸ்.

*(தொடரும்...)*

*நன்றி :- திருமதி வைரமுத்து*

# ப்சிகட் டால்ஸ் நடனக் குழு



சமீப காலமாக நடனத்தால் உலகை கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் இந்த அமெரிக்க அழகிகள், ப்சிகட் டால்ஸ் என்று அழைக்கப்படும். இவர்களது நடனக் குழுவுக்கு நாளுக்கு நாள் மவுசு அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்தக் குழுவின் தலைவியாக இருப்பவர் நிகோல், இக்குழுவில் உள்ள கார்மிட், கிம்பர்லி போன்றோர் ரப்பராக வளைந்து துள்ளல் ஆட்டம் போடும் போது பார்ப்போரின் மனதில் இனம் புரியாத ஒரு சிலிர்ப்பைக் காண முடிகிறது.

நிகோல் கூறும் போது "ஸ்பைஸ் கேர்ள்ஸ் நடனக் குழுவை எங்களது ப்சிகட் டால்ஸ் குழுவுக்கு உலகம் முழுவதும் நல்ல வரவேற்பு கிடைச்சிருக்கு. வித்தியாசமான நடன அசைவுகளை விரும்பும் ரசிகர்கள் ஏராளம். அவர்களது ஆசைக்கு தீனி போடும் வகையில் நாங்கள் ஆடறோம்.

"சில இடங்களில் நாங்கள் டான்ஸ் ஆடும் போது சில மன்மத ரசிகர்கள் தொப்புளைப் பார்த்து காகித அம்பு விடுவாங்க. அது மேல படும்போது அவர்களுக்கு அதுல சந்தோஷம். இப்படியும் சில சாடிஸ்டுகள் இருக்காங்களே என்று வருத்தமாத்தான் இருக்கம்.

இப்படித்தான் ஒரு தடவை என் மேல ஒருத்தன் அம்பு விட்டான். நடனம் முடிஞ்சதும் மேடையில இருந்து இறங்கிச் சென்று நாலு பளார் விட்டேன்.


அய்யோ அம்மான்னு அலறியடிச்சு ஓடிப் போய்விட்டான்" என்கிறார் கினோல். பொங்கிச் சிரித்தபடியே!



# வீட்டுக்குள் துஷ்பிரயோகம் சீரழியும் சிறுமிகள்

**நாட்டில்** தற்போது தினமும் நிகழும் குண்டுவெடிப்புக்கள், வன்முறைகள், படுகொலைகளுக்கு மேலதிகமாக மற்றுமொரு பயங்கரம் சத்தமில்லாமல் நம்முடைய வீட்டுக்கதவினைத் தட்டிக்கொண்டிருக்கிறது. சிறுமிகள், பெண்பிள்ளைகள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் துஷ்பிரயோகமும், வன்முறைகளும் தற்போது மிக அதிக அளவில் அதிகரித்து வருவதாக தினமும் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது 1989ஆம் ஆண்டில் நிறைவேற்றிய சிறுவர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் 18 வயதிற்குக் குறைந்த அனைவரையும் சிறுவர்கள் என வரையறுத்துள்ளது. இலங்கை உட்பட



அனைத்து நாடுகளும் இச்சாசனத்தில் கையெழுத்திட்டுள்ள போதும் இது தொடர்பான சரியான சட்ட அமுலாக்கங்கள் இலங்கையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே வீட்டு வேலைக்கு சிறுமிகள் அமர்த்தப்படும் போது 14 வயதிற்கு மேற்பட்டோராக இருக்கும்படியாக வேலைக்கு அமர்த்துவோர் பார்த்துக்கொள்கின்றனர். இவ்விடயத்தில் சட்டமும் ஏதும் செய்வதில்லை.


## அட இப்படியும் நடந்தது

மன்னார் முருங்கனில் தேவாலயம் ஒன்றிற்குள் வைத்து 15 வயது சிறுவன் ஒருவன் 7 வயது சிறுமி மீது பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளான். கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிவித்த மன்னார் பொலிஸ் பிரிவைச்சேர்ந்த முருங்கன் பொலிஸ் பொறுப்பதிகாரி உப்புல் செனிவிரட்ண, குறிப்பிட்ட சிறுவன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேவேளை, சிறுமி கடுமையான கீறல் மற்றும் உட் காயங்களுடன் முருங்கன் அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

ஆயினும் வெளியில் தெரியாமல் 14 வயதிற்கு உட்பட்ட ஏராளமான மலையக சிறுமிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வீட்டுப்பணிக்கு என அமர்த்தப்பட்டிருப்பதும் தனது தகுதிக்கு மீறிய வேலைகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப்படும் அதேவேளை, பாலியல் பலாத்காரங்களுக்கும் உட்படுத்தப்படுவது வெகுகாலமாக நிகழ்ந்து வரும் விடயங்களாகும்.

ஆயினும் தற்போது விஸ்வரூபம் எடுத்திருக்கும் சிறுமிகள், பெண்பிள்ளைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் என்பது வீட்டுக்குள்ளேயும் அதுவும் மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அதிர்ச்சித் தகவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணம் உள்ளன.


மகளிர் விவகார, சிறுவர் அபிவிருத்தி அமைச்சானது மேற்கொண்ட கணிப்பீட்டின்படி கடந்த வருடத்தில் (2005) மட்டும் வன்முறைகளால் 28



சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் (யுத்த வன்முறைகள் இதில் உள்ளடக்கப்படவில்லை) 692 சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. மேலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் துன்புறுத்தப்பட்டதன் காரணமாக 621 சிறுமிகள் காயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்டவை மேலெழுந்தவாரியாக எடுக்கப்பட்ட தகவல்கள் அல்ல. மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சினால் நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களின் பதிவுகள், முறைப்பாடுகள் மூலம் பெறப்பட்டு அமைச்சர் சுமேதா.ஜி.ஜெயசேனாவினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட தகவல்கள் ஆகும்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்படாத வன்முறைகளும், வீட்டிற்குள்ளேயான, வெளியே வராத, சிறுமிகள் மீதான வன்முறைகளும் மேற்குறிப்பிடப்பட்ட தரவுகளில் உள்ளடக்கப்படவில்லை என சிறுவர் விவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் முன்னரே தெரிவித்தபடி நெருங்கிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் என்பவற்றிற்கு அப்பால் பெற்ற தகப்பனாலேயே பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை கடந்த வருடம் அதிகரித்துள்ளது என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தியானது, மனித நாகரீகத்தினையே வெட்கித் தலை குனிய வைத்துள்ளது. அதிலும் பொருளாதார நிலைமை கருதி வறுமை காரணமாக தொழில் வாய்ப்புப் பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களின் வீட்டிலேயே சிறுமிகள் மீதான பெற்ற தந்தையர் மேற்கொள்ளும் பாலியல் வன்முறை முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். வாதுவைப் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் பன்னிரெண்டே வயதுடைய சிறுமி தனக்கு அடிவயிற்றில் நோ எனவும் அடிக்கடி சிறுநீர் கழிப்பதுமாக இருந்துள்ளாள். உறவினர்களினால் வைத்தியரிடம் அழைத்துச் செல்லப்பட்ட மேற்படி சிறுமி, வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது பாலியல் பலாத்காரத்திற்கு அச்சிறுமி உட்படுத்தப்பட்ட அதிர்ச்சி தரும் தகவல் உறவினர்களிடம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனை அடுத்து தீவிரமாக அச்சிறுமியுடன் உரையாடியபோது தனது தந்தையே தன்னை தினமும் குடிபோதையில் பாலியல் பலாத்காரப்படுத்திய விடயத்தை தெரிவித்துள்ளாள். இவ்விடயம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்படவே பியசேன எனும் அந்நபரை



கைது செய்த பொலிஸார், நீதிமன்றில் ஆஜர்படுத்தி சிறைத்தண்டனையும் பெற்றுக்கொடுத்தனர். இதில் முக்கியமான விடயம் என்னவெனின் சிறைத்தண்டனை முடியும் போது மீண்டும் ஒரே வீட்டில் அந்தச் சிறுமியுடன் வசிக்க தந்தை வருவார் என்பதாகும்.

புத்தளம் நீதிமன்றத்திலும் இதேபோன்ற குற்றத்திற்காக நபர் ஒருவருக்கு நீதிவான் கடுழியச் சிதைத்தண்டனை விதித்துள்ளார். பாடசாலை மாணவியான 10வயது சிறுமியின் நடத்தையில் பாடசாலை ஆசிரியை திடீர் மாற்றத்தினை அவதானித்துள்ளார். தனிமையில் அழுவதும், வெறித்துப்பார்ப்பதுமாகக் காணப்பட்ட சிறுமியை அணுகிய ஆசிரியை, பக்குவமாக விசாரித்தபோது பெற்ற தகப்பனே அந்த பிஞ்சு மலரை தினமும் கசக்கிப் பிழிந்துள்ள விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் மொனராகலையில் ஓர் அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 16 வயது மற்றும் 14 வயதுடைய இரு மகள்மாரை ,தந்தை மாறி மாறி தினமும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்துள்ளார். இவர்களின் தாயார் கூட பணிப்பெண்ணாக லெபனான் நாட்டிற்குச் சென்ற நிலையிலேயே இந்த அக்கிரமம் அரங்கேறியுள்ளது. இதில் சிறுமிகளில் ஒருவர் கர்ப்பமடைந்ததைத் தொடர்ந்தே விசாரணையின் போது மேற்படி விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மனித நாகரீகத்திற்கு ஒவ்வாத, பெற்ற தந்தையராலேயே சிறுமிகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படும் செயலானது மன்னிக்க முடியாத பாரிய குற்றமாகும். பாதிக்கப்படும் சிறுமிகள், அதனை வெளியிலும் சொல்லமுடியாமல் மனவிரக்தியடைந்து, தினம் தினம் புழுங்கி, பாலியல் வேட்கைக்கு இரையாவதை எப்படி ஏற்றுக்கொள்வது? எவ்வளவு கொடூரமானது? அதுவும் நம்நாட்டிலேயே இவ்வசிங்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருவது தீவிரமாக நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

கடந்த வாரம் ஆங்கில, சிங்கள பத்திரிகைகளில் வெளிவந்த மற்றுமோர் செய்தி ஆச்சரியத்தையும் அதிர்ச்சியினையும் ஏற்படுத்தியுள்ளது. இங்கிரிய எனும் இடத்தில் வீட்டில் இருந்த 12 வயது சிறுமியை, அச்சிறுமியின் 69 வயதான பாட்டனாரே பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தி விட்டு தலைமறைவாகியுள்ளார்.

தாய், தகப்பன் வீடு வந்தபோது அச்சிறுமி அழுது கொண்டே நடந்த சம்பவங்களைக் கூறியுள்ளாள். கொதித்தெழுந்த பெற்றோர் பொலிஸில் முறையிட்டதுடன் ஊரவர்கள் அனைவரும் சேர்ந்து தேடிய போதும் ரணசிங்க முதியான்சலாகே எனும் அந்த 'வயாக்கிரா தாத்தா' இப்பந்தி எழுதப்படும் வரை அகப்படவில்லை.

இவற்றைவிட நெருங்கியவர்களினாலும் பாலியல் பலாத்காரத்திற்கு சிறுமிகள் உட்படுவது தொடரவே செய்கின்றது. அம்பலாங்கொடைப் பகுதியில் தனது கணவனை கைவிட்டு, தனது மகளுடன் இன்னுமொருவரை கரம்பிடித்து வாழ்ந்த ஓர் குடும்பத்தில் அந்த குடும்பஸ்தரே அதாவது வளர்ப்புத் தகப்பனே மகளை வன்புணர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இதனை நேரடியாகக் கண்ட தாயார், பொலிஸில் முறையிடவே தற்போது ஹேமபால எனும் மேற்படி நபர் கம்பி எண்ணி வருகின்றார்.

## சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் எவ்வாறு தடுப்பது?

1. இவ்விடயத்தில் சிறுமியரோடு பழகும், அனைவர் மீதும் சந்தேகப்படுங்கள். அதில் தவறேதும் இல்லை.

2. உங்கள் மகளுடன் நீங்கள் நெருங்கிப் பழகுங்கள். பாலியல் நோக்குடன் அணுகுபவர்கள் எவ்வாறு தொடுகை மற்றும் பேச்சு மூலம் தொடர்பு கொள்ளுவார்கள் என்பதை இலகுவாக புரியும்படி விளங்கப் படுத்துங்கள்.

3. உங்கள் மகளை நம்புங்கள். நன்கு அவதானியுங்கள். ஏதாவது குற்றச்சாட்டுகளைக் கூறும்போது பொறுமையாகக் கேளுங்கள். எக் காரணம் கொண்டும் ஆத்திரப்படவோ, பேசவோ வேண்டாம். இந்த நேரத்தில் தான் ஆதரவும் அரவணைப்பும் முக்கியம்.

4. குற்றம் இழைக்கப்பட்டதாக தெரிந்தால் சிறிதும் தயங்க வேண்டாம். சமூக அந்தஸ்து, கௌரவம் பார்த்தால் குற்றம் தொடரவே செய்யும். உடனடியாக சிறிதும் தாமதிக்காமல் பொலிஸ் நிலையத்தை அணுகுங்கள்.

5. சிறுமியர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் குற்றவாளி தண்டிக்கப்படவேண்டும். தப்பிக்கக்கூடாது. அதில் உறுதியாக இருங்கள்.

நாட்டில் தற்போது 300 இற்கு மேற்பட்ட சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்கள் இயங்குவதாக அண்மையில் பொலிஸ் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இங்கு கருக்கலைப்பு செய்பவர்களில் 15 சத வீதமானோர் சட்டபூர்வமாக திருமணம் முடித்தவர்கள் என்பதுடன்,



ஏனையோரில் 75 சதவீத கருக்கலைப்புக்கு உட்படுவோர் 18 வயதிற்கு உட்பட்டோர் என பெண்கள் சிறுவர் ஆய்வு மையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சட்ட விரோத கருக்கலைப்பு நிலையம் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவருடன் உரையாடிய பொது அவர் வேடிக்கையான அதிர்ச்சித் தகவல் ஒன்றையும் தெரிவித்தார். பெரும்பாலும் கருக்கலைப்புக்கு வரும் பெண்பிள்ளைகளுடன் கூட வருவோர் "இது எனது தங்கச்சி - யாரிடமோ ஏமாந்து விட்டா" என்றே பொதுவாகக் கூறுவதாகவும், ஆயினும் அழைத்து வரும் நபரே அந்த கர்ப்பத்திற்குக் கார்ண கர்த்தாவான காதலனாக அல்லது உறவு கொண்டவராக இருப்பார் என்பது தமக்கு நன்கு தெரியும் எனவும் கூறினார். ஆயினும் சொந்த

**விரிவான பார்வை**

சகோதரனினால் சிறுமிகள் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் சம்பவங்களும் நிகழாமல் இல்லை. இப்பேற்பட்ட விடயங்கள் பல்வேறு காரணங்களுக்காக வெளியே வராவிட்டாலும் சில சம்பவங்கள் அறியப்பட்டே உள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் சொந்த சகோதரனினால், சகோதரியாகிய சிறுமி பாலியல் உறவிற்கு உட்படுத்தப்பட்ட சில சம்பவங்கள் உறுதியாக தமக்கு கிடைக்கப்பெற்ற போதும் குடும்ப கௌரவம், சமூக நிலைமை காரணமாக வீட்டாராலேயே அச்சம்பவங்கள் அமுக்கப்பட்டதாக பெண்கள் சிறுவர் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்களை விட, நண்பர்கள், நெருங்கியவர்கள் தெரிந்தவர்களினால் சிறுமிகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படும் சம்பவங்களே நீண்டகாலமாக நடந்து வருவதும் வெளிச்சத்திற்கு வருவனவாகவும் அமைகின்றன. இதில் உறவினர்களும் உள்ளடக்கப்படுகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் கொலன்னாவைப் பகுதியைச் சேர்ந்த 10வயது சிறுமி ஒருத்தி இரவு நித்திலையின் போது வீரிட்டுக் கத்துவதும், புலம்புவதுமாக இருந்ததுடன் அவளது நடத்தையில் மாற்றத்தினைக்கண்ட பெற்றோர், பக்குவமாக விசாரித்தபோதுதான் அந்தப் பயங்கரம் தெரியவந்தது. தினமும் அச்சிறுமியை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் "ஆட்டோமா மா" பாடசாலை முடிந்து வீட்டில் விடுவதற்கு முன்பாக தினமும் தனது பாலியல் வக்கிரத்தை ஆட்கள் இல்லாத இடத்தில் வைத்து அச்சிறுமி மீது புரிந்துள்ளது மட்டுமல்ல, இவ்விடயத்தை வெளியே சொன்னால் கொலை செய்வேன் என மிரட்டலும் விடுத்துள்ளார்.

**ஜெ.கே.**

பாவம் அந்த பிஞ்சு மனம் என்ன பாடுபட்டிருக்கும். தற்போது ஆட்டோ மாமா வெலிக்கடையில் கம்பி எண்ணுகின்றார்.

எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடும் விடயம் நமக்கு ஞாபகம் இருக்கலாம். வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த 15 வயது சிறுமி மீது 40 தடவைகளுக்குமேல் பாலியல் வல்லுறவு புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி.கணேஷலிங்கம் (வயது 48) யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தற்போது வழக்கு நடைபெற்று வருகின்றது.

தென் பகுதியில் வெள்ளவாய அங்கிலிகமவில் தனது பிரத்தியேக பாடசாலை ஆசிரியரினால் பலாத்காரம் புரியப்பட்டு கர்ப்பமடைந்த 15 வயது சிறுமி தற்கொலை செய்ய விஷம் அருந்தியுள்ளார். இதனை கேள்வியுற்ற தாயாராகிய பொடிநோனா எனும் 46 வயது தாயார், மீதி விஷத்தினை தான் பருகியுள்ளார். தற்போது தாயும் மகளும் வெள்ளவாய வைத்தியசாலையில் இருந்து மொனராகலை வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக தொடரும் சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கடுமையாக அமுல் நடத்தப்படவுள்ளதாக மகளிர் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சுமேதா ஜி.ஜெயசேன அறிவித்துள்ளார். தற்போது நாடு முழுவதும் 36 பொலிஸ் நிலையங்களில் இயங்கும் பெண்கள், சிறுவர்கள் பாதுகாப்பு பிரிவு விரைவில் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் அரசாங்கத்தை மட்டும் நம்பியிராமல் சிறுமியர் மீதான பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுக்க உரிய கவனம் எடுக்க வேண்டியது மனித நாகரிகமுள்ள ஒவ்வொரு பிரஜையுடைய கடமை என்றால் அது மிகையாகது.

# மூட் பாதையில் மரிக்க மிதவாதம்

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## கைதிகள் பரிமாற்றத்தின்போது கருணா அம்மான் விடுவிக்கப்பட்டார்

### 145 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

**டிசம்பர்** 19ஆம் திகதிய ஆவணத்தை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா முயற்சிகளை மேற்கொள்வது குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி அதிருப்தி அடைந்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒரு புறத்தே புலிகள் மீது தாக்குதலொன்றை மேற்கொள்வதற்கான முன்தயாரிப்பைச் செய்த அதே சமயத்தில், மறுபுறத்தில் இந்தியாவின் அனுசரணையை உதறி எறிந்துவிட்டு புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் முன்முயற்சிகளை மேற்கொண்டார். இதுவும் ராஜீவ் காந்திக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்திய அமைச்சர் சிதம்பரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள் வதற்கு சில தினங்கள் முன்னதாக புலிகளுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. புலிகளால்



கைதிகள் பரிமாற்றத்தின்போது கிட்டு நடுவில் கப்டன் கொத்தலாவல

கைது செய்யப்பட்ட இரு இராணுவ சிப்பாய் களை விடுவிப்பதற்கு அரசின் தடுப்புக் காவலிலிருந்த இரு புலி உறுப்பினர்களைப் பரிமாறிக் கொள்வதற்கான முயற்சிகளில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஈடுபட்டார். புலிகளின் யாழ்.தளபதி கிட்டுவோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த கப்டன் கொத்தலாவலை ஊடாக இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புலிகளும் இதற்கு சம்மதம் தெரிவித்ததையடுத்து விடுவிக்கப்படவேண்டிய தமது இரு கைதிகளின் விபரங்களும் அரசுக்கு வழங்கப்பட்டன. யாழ்.மாநகர சபைக்கும் சுப்பிரமணியம் பூங்காவுக்கும் இடைப்பட்ட வீதியில் வைத்தே கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தது. டிசம்பர் 17ஆம் திகதி இது நடைபெற்றது. சிப்பாய்கள் இருவரும் மன்னார் அடம்பனில் புலிகள் நடத்திய தாக்குதல்களின்போது கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைதிகள் பரிமாற்றம் நடைபெறுவதற்கு முன்னதாக யாழ்.கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வான் பரப்புக்கு நெருப்புக் கோளமொன்றை ஏவினர். கல்வீச்சுக்களால் அதிர்ச்சியுற்றிருந்த யாழ்ப்பாண மக்கள், இந்த நெருப்புக் கோளத்தைக் கண்டு பீதியுற்று அல்லோல

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

கல்லோலப்பட்டனர். இதனால் பாதுகாப்புத் தேடி தலை தெறிக்க ஓடினர். சில நிமிடங்களில் நட்சத்திர வடிவிலான வாணங்கள் வான் பரப்புக்கு ஏவப்பட்டன. இதை ஏவியவர்கள் புலிகள். அதாவது படையினரும் புலிகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தமாட்டோம். கைதிகளைப் பரிமாறிக் கொள்ளலாம் என்பதற்கான சமிக்ஞையாகவே இவை வான் பரப்புக்கு ஏவப்பட்டன. படையினர் ஏவியது ஓர் உதைபந்தின் அளவை ஒத்த நெருப்புக் கோளம்.

அதிலிருந்து புகை மண்டலம் கிளம்பியது. புலிகள் ஏவியவை ஓர் கிரிக்கெட் பந்தின் அளவை ஒத்த நட்சத்திர வடிவிலான வெள்ளி நிற வாணங்கள் என்று கூறலாம்.

விடுவிக்கப்பட்ட இரு இராணுவச் சிப்பாய்களையும்

*(அரசியல் தொடர்)*

வரவேற்பதற்காக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி இரத்மலானை விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தார். இந்நிகழ்வு குறித்து செய்தி சேகரிக்கச் சென்றிருந்த பத்திரிகையாளர் ஒருவர், விடுவிக்கப்பட்ட இரு புலி உறுப்பினர்கள் யாரென்று அத்துலத் முதலியிடம் கேள்வி கேட்டார். "அவர்கள் புலி இயக்கத்தைச் சேர்ந்த சாதாரண உறுப்பினர்கள். அந்தப் பயல்களால் எழுந்து நேராக நிற்கக்கூட முடியாது" என்று அத்துலத்முதலி பதிலளித்தார். ஆனால் விமானப் படைவிமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட இரண்டு புலிகளில் ஒருவர் கருணா அம்மான் என்பது பின்னர்தான் தெரிய வந்தது. மற்றவர் காமினி என்ற பெயர் கொண்ட இளைஞர். இவரது தாயார் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர். இதுபற்றி ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

யாழ்ப்பாணத்திற்கு உணவு மற்றும் எரிபொருட்கள் எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை ஆத்திரப்படுத்தியது. இந்தத் தடையைக் கண்டித்து காரசாரமான கடிதமொன்றினை ராஜீவ் காந்தி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பி வைத்தார். யாழ்ப்பாணத்தின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை இலங்கை அரசு வாபஸ் பெறுவதோடு டிசம்பா 19ஆம் திகதிய யோசனைகளை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு வரத்தவறினால் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளிலிருந்து இந்தியா வாபஸ் பெற்று விடுமென்று ராஜீவ் அக் கடிதத்தில் எச்சரித்திருந்தார்.

ராஜீவின் கடிதம் ஜே.ஆரை அடிபணிய வைக்கவில்லை. பொருளாதாரத் தடையை நீக்கப் போவதில்லையென்று ஜெயவர்த்தனா அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார். அத்துடன் பஞ்சாப் வன்செயல்களை அடக்குவதற்கு ராஜீவ் காந்தி படையினரை பயன்படுத்துவதையும் அவருக்குச் சுட்டிக் காட்டினார். தனது கடின நிலைப்பாடு குறித்து பொதுஜன அபிப்பிராயத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளிலும் ஜெயவர்த்தனா ஈடுபட்டார். இதற்காக எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு தனது நிலைப்பாடு குறித்து எடுத்து விளக்கினார். இந்தியா, இலங்கையை அச்சுறுத்துவதாக ஜெயவர்த்தனா, ஸ்ரீமாவிடம் சொன்னார்.

இந்தியாவைக் கண்டிக்குமாறு ஐ.தே.க.வின் பாராளுமன்றக் குழுவையும் அவர் தூண்டி விட்டார். சிங்கள மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு உணர்வை உசுப்பி விடுவதே அவரின் நோக்கமாகும்.

ஜெயவர்த்தனாவின் நடவடிக்கைகளால் அமிர்தலிங்கம் குழம்பிப் போயிருந்தார். அவர் இலங்கைத் தமிழ் மக்களின் அவஸ்தைகள் குறித்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதினார். மனிதாபிமான அடிப்படையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு உதவுமாறு அவர் கோரிக்கை விடுத்தார். இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் வரை வடக்கு, கிழக்கு மக்களுக்கு உணவு மற்றும் எரிபொருட்களை வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்தார். இந்த மனிதாபிமான உதவிகள் மட்டுமே தமிழ் மக்கள் உயிர்பிழைக்க உதவுமென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் குழப்பமான சூழ்நிலையிலேயே பிரபாகரன் இலங்கையின் வட பகுதிக்குத் திரும்பினார். இந்திய மத்திய அரசினதும் தமிழக அரசினதும் அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காகவும் யுத்தத்தை நேரடியாக மேற்பார்வை செய்வதற்குமாகவே அவர் நேரடியாக வன்னிக்குத் திரும்பினார். இந்தியா தனது வெளியுறவுக் கொள்கை நோக்கத்தை அடைவதற்காக இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தை பலியிட முனைகிறதென்று இலங்கை திரும்புவதற்கு முன்னர் 'இந்தியா டுடே' என்ற சஞ்சிகை நிருபருக்கு அளித்த போட்டியில் பிரபாகரன் கூறியிருந்தார்.

சென்னையிலிருந்து பிரபாகரன் இலங்கையின் வடபகுதிக்குத் திரும்பியதும், இலங்கை இராணுவத்தினர் மீதும் சிங்களக் குடிமக்கள் மீதுமான தாக்குதல்களைப் புலிகள் இயக்கம் அதிகரித்தது. இலங்கைப் படையினரும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1987இல் படையினரும் புலிகளும் ஏட்டிக்குப் போட்டியான மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டனர். இந்திய அரசின் சமாதான முயற்சிகளும் தீவிரம் பெற்றன. சுமார் மூன்று ஆண்டுகளாக இந்தியாவின் முன்முயற்சியின் பேரில் மேற்கொள்ளப்பட்டுவந்த சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தாலும் 1987இன் மத்திய பகுதியில் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

(தொடர்ந்து வரும்....)





**மகா** மாந்திரீகரான அவரைப் பொறுத்தவரை அந்தப் பாம்பு பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கவில்லை.

பாம்பைப் பிடித்திருந்த கையை உயர்த்தியவர், ஒரு சுழற்றுச் சுழற்றி விசையுடன் பாம்பை வெளிப்புறம் வீசி எறிந்தார். ஒரு கயிறு போல் நீண்டு சென்ற பாம்பு கருவறைக்கு எதிரிலிருந்த ஆலமரத்தின் கிளையில் செருகிக் கொண்டு நின்றது. ஜயந்தனின் முகத்தில் புன்னகை ஒன்று அரும்பியது. தான் ஓர் எட்டு முன்னேறியதாக அவர் மனம் கணக்கிட்டது. தொடர்ந்து தனக்கு வெற்றிதான் என்றும் நினைத்தார். கருவறைக்குள் எந்தவித எதிர்ப்புமின்றி நுழைந்தவர் தேவியின் சிலைக்குப் பின்னால், தான் சற்று முன்பு பார்த்த மூன்று சிலைகளும் இருப்பதைக் கவனித்தார். அவற்றில் நடுவில் இருப்பதுதான் அவர் தேடி வந்த சிலை. ஒன்று, அந்தச் சிலையை எடுத்து ஏறத்தாழ பாழடைந்து போன கோயில் குளத்துக்குள் எறிந்து விடவேண்டும். அல்லது வேறு முறையில் அதாவது தூள் தூளாக அதை உடைத்து நொறுக்க முடிந்தால் அப்படியே செய்து விடுவது என்பது அவரது திட்டம். ஆக்ரோஷத்துடன் சிலையைப் பிடிக்கக் கை நீட்டினார். தேவியின் இடது புறத்திலிருந்த சூலம் மெதுவாக இருந்த இடத்திலிருந்து அசையத் தொடங்கியது. ஒருபுறமாகச் சரிந்து வந்த சூலம் ஜயந்தனின் வலது கையைத் தொட்டது. கையில் ஏதோ நெருப்புப் பட்டதை உணர்ந்த ஜயந்தன், பார்வையைத் திருப்பிய போதுதான் நெருப்பில் கனிந்தது போலிருந்த சூலத்தைக் கவனித்தார். அதைப் பிடிப்பதற்காக ஜயந்தன் முயன்றார். ஆனால் அவரால் அது முடியவில்லை. சூலத்தை அப்புறப்படுத்தாமல் தான் விரும்பும் சிலையை எடுக்கவும் முடியாது. சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த ஜயந்தன் வேறுவழியின்றிப் பின்வாங்கினார்.

**எழுதுவது**
**சிவன்**

அவர் அடிவாரம் வருவதற்குள் சந்துநாயர் ஆட்களை வரவழைத்து, மாதவன் குட்டியின் உடம்பை வீட்டுக்கு எடுத்துப் போயிருந்தார். மாந்திரீகரான ஜயந்தனைப் பொறுத்தவரை இந்தச் சம்பவம் மகத்தான ஒரு தோல்விதான். இருப்பினும் இதிலிருந்து முற்றிலுமாக ஒதுங்கவோ, பின்வாங்கவோ அவர் தயாராக இருக்கவில்லை. மாதவன் குட்டியின் உடம்புக்கு முறைப்படியான சடங்குகள் செய்யப்பட்டு எரிக்கப்பட்டது. செய்தியை அறிந்த பிரபாகரன் அளவுக்கு அதிகமாகப் பயப்படத் தொடங்கினான். குமாருக்கு உறுதுணையாக நின்று தன்னை எதிர்ப்பது அவன்தான் என்பது சந்து நாயருக்கு நன்றாகவே தெரியும். தனது மகன் இறந்து போனதால் அதற்கான முழுப் பொறுப்பும் அவர்கள் இருவரும்தான் என்று நினைத்த சந்துநாயர், அவர்களைப் பழிவாங்க முன்னிலும் அதிகத் தீவிரம் கொண்டார். ஓர் எச்சரிக்கையாக முதலில் குமாரைத் தொலைத்துக் கட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற முடிவுக்கு வந்தார்.

காலேஜுக்கு வந்து சேர்ந்த குமார், உடனே பிரபாகரனையும் வரவழைத்துத் தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார். இந்தச் சூழ்நிலையில் அவனைக் கிராமத்திலேயே விட்டுவைப்பது நல்லது அல்ல என்பது



அவருக்கே நன்றாகத் தெரிந்தது. சந்துநாயர் நிச்சயமாகப் பழிவாங்க முற்படுவார் என்பது குமாருக்கு தெளிவாகவே தெரிந்தது. இதைக் குறித்து மிகவும் அதிகமாக விவாதித்த சந்துநாயரும், அவரது மூன்று மகன்களும் 'பழிக்குப் பழி' வாங்குவது என்றே சபதம் செய்தனர்.

தங்களது தீர்மானத்தையும் ஜயந்தனிடம் தெரிவித்தனர். தன்னுடைய நோக்கமும் அதுவே என்பதால் தன்னால் முடிந்த மட்டும் அதை நிறைவேற்றியே தீருவதாக அவரும் அதற்கு உறுதியளித்தார். "அந்த காலேஜ் வாத்தியாரை எப்படியாவது தொலைத்துக்கட்டி விட்டால் உங்களுக்கு நிம்மதியாகிவிடும் இல்லையா? அதை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்". ஜயந்தனது வார்த்தைகள் அவர்களுக்கு நம்பிக்கையளித்தன. "இப்போதைய சூழ்நிலையில் அந்த ஆளைக் கொல்வது மட்டுமே பிரயோஜனமான காரியமாகத் தெரியவில்லை. அவருக்குப் பின்னணியில் யாரெல்லாமோ இருக்கிறார்கள். அதனால் அவர்களையெல்லாம் முதலில் செயலிழக்கச் செய்தால்தான் வாத்தியாரைக் கொல்லமுடியும். அதுதான் பாதுகாப்பானதும் கூட". சந்துநாயரின் இரண்டாவது மகன் கிருஷ்ணன்குட்டி கூறினான். "அப்படியே செய்யலாம். நான் அவ்வளவு சுலபத்தில் தோல்வியை ஒப்புக் கொண்டதே இல்லை." ஜயந்தன் உறுமினார்.

பிரபாகரன் வந்து சேர்ந்ததால் குமார் தனது வழக்கமான லாபரெட்டரி இருப்பிடத்தை மாற்றிக் கொண்டு, தனியாகவே வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்திருந்தார். இப்போது கல்லூரி நேரத்தைத் தவிர மற்ற சமயம் முழுவதும் தனது பொழுதை குமார் வாடகை வீட்டில்தான் செலவழித்தார். அன்றும் தனது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்படத் தொடங்கினார். குமார் கேட்டை நெருங்கிய போதுதான் லேபரெட்டரியை பூட்ட மறந்து விட்டோம் என்பது நினைவுக்கு வந்தது. தனது மறதியை நொந்து கொண்டவராக லேபரெட்டரிக்குத் திரும்பினார். வெறுமனே முக்கால்வாசி சாத்தப்பட்டிருந்த கதவுகளை இழுத்து மூட முற்பட்ட சமயத்தில்தான் லேபரெட்டரிக்குள் ஏதோ சத்தம் கேட்பதை குமார் உணர்ந்தார். இந்த நேரத்தில் லேபரெட்டரிக்குள் யாருக்கும் எந்த வேலையும் இல்லை. அப்படியானால் உள்ளே இருப்பது யாராக இருக்கும் என்று ஒரு வினாடி யோசித்தார். மூடப் போன கதவைத் திறந்து கொண்டு லேபின் உள்ளே நுழைந்தார். ஸ்டோர் ரூம் பக்கம் ஏதேதோ அசையும் சத்தம் கேட்டது. தொடர்ந்து ஏதோ ஒன்று தரையில் விழுந்து உடையும் சத்தம்... எலியோ, பூனையோ ஓடினால் தவறி விழுந்து உடைவது மாதிரியான சத்தமல்ல அது.

யாரோ வேண்டுமென்றே வீசி எறிந்து உடைத்தது மாதிரியான சத்தம் - அதுவும் கோபத்தில் விசையுடன் வீசி எறிந்தது போன்ற சத்தம். குமார் ஸ்டோர் ரூமுக்கு வந்தார். சுவிட்சைத் தடவி லைட்டை எரிய வைக்க முயன்றார்.

*(வாசனை வீசும்....)*

# அரச மரத்திலும் அர்த்தம் உண்டு

**ஒரு நாள்** காலையில் ஒரு முதியவர், கடல் ஓரத்தில் வாக்கிங் சென்று கொண்டிருந்தார். வழிநெடுக, ஏராளமான கடல் மீன்கள் கரை ஒதுங்கிக்கிடந்தன. நீரில் உயிர்வாழும் மீன்கள், கரையில் வந்து ஒதுங்கினால் என்ன ஆகும்? அவை உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தன. கடல் நீரில் துள்ளி விளையாட வேண்டிய மீன்கள், இப்படி அநியாயமாகக் கரையில் துடித்துக்கொண்டு இருக்கின்றனவே என்று அந்த முதியவரின் மனம் பதைபதைத்தது. ஒரு மீனைத் தன் கையில் எடுத்து கடல்நீரில் தூக்கி எறிந்தார். அது, புத்துயிர் பெற்று, மகிழ்ச்சியுடன் கடலுக்குள் நீந்திச் சென்றது. உயிர் பெற்ற மகிழ்ச்சியில் துள்ளியது. முதியவர் கண்களில், கரையில் துடித்துக் கொண்டிருக்கும் இன்னொரு மீன் பட்டது. உடனே அவர், குனிந்து அதனை எடுத்துக் கடலில் வீசி எறிந்தார். அதேபோல அடுத்து இன்னொரு மீன் கண்ணில் பட, அதையும் எடுத்துக் கடலுக்குள் எறிந்தார். இப்படியாக, உயிருக்குத் துடிக்கும் மீனை குனிந்து கையில் எடுப்பது, நிமிர்ந்து அந்த மீனைத் தூக்கிக் கடலில் எறிவது என்று இப்படியே, வெகுதூரம் நடந்து போனார், அந்த முதியவர். இதுவரை இச் செயலைக் கவனித்துக் கொண்டு வந்த ஒருவர், "பெரியவரே, என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். உடனே அந்த முதியவர், "நண்பரே! ஏராளமான மீன்கள் கரையோரம் ஒதுங்கிக் கிடக்கின்றன. உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அவைகளை, மறுபடியும் கடலில் தூக்கி எறிந்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

"தினமும் ஆயிரக்கணக்கான மீன்கள் கரை ஒதுங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அவைகள் அனைத்தையும் காப்பாற்றி, மறுபடி கடலுக்குள்ளே போடுவது என்பது சாத்தியமான விஷயமா? நீங்கள் எடுத்துப் போடும் மீன்களின் எண்ணிக்கையை, தினசரி ஒதுங்கும் மீன்களுடன் ஒப்பிட்டால் மிகவும் சொற்பம். இது ஒருவெட்டி வேலை!" என்றார், கிண்டலான தொனியில் அந்த மனிதர். "ஐயா! எத்தனை மீன்களை எடுத்து மறுபடியும் தண்ணீரில் போடுகிறேன் என்பது உங்களுக்கு வேண்டுமானால் ஒரு. பொருட்டில்லாமல் இருக்கலாம். ஆனால், நான் மறுபடி தூக்கிக் கடலுக்குள்ளே போடுகிறேனே, அந்த மீன்களைப் பொறுத்தவரை என் செயல், அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. அவற்றின் சாவு என்பது, என் செய்கையால் அடியோடு மாறி, வாழ்வு கிடைப்பது என்பது சாதாரண விஷயமா?" என்று பதிலடி கொடுத்ததும், அந்த கேள்வி கேட்ட ஆசாமி, அடுத்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அந்த முதியவரின் செயல் ஆழமான அர்த்தம் பொதிந்தது. அவர் மனிதர்களானாலும் சரி, மீன்களானாலும் சரி, உயிர் என்பது ஒன்றுதான் என்பதை உணர்ந்தவர். அந்த உயிரின் வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்தவர். ஆக, வாழ்க்கை என்பது ஒரு உயிரோட்டமுள்ள விஷயம். மதிப்பு வாய்ந்த ஒன்று. அதனை அர்த்தமுள்ளதாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரது கடமையும் ஆகும். வாழ்க்கை என்பது வீண் என்று யாருமே ஒருபோதும் நினைத்துவிடக் கூடாது. இதற்கு என் லைப் புரோக்கிராமின்போது, அரசமர உதாரணத்தை நான் தவறாமல் குறிப்பிடுவேன்.

ஒரு ஒதுக்குப்புறமான பகுதியில், ஒரு அரச மரம் இருந்தது. ஒருமுறை கடும்புயல் வீசியது. புயல் தாக்குதல் காரணமாக, அந்தப் பகுதியில் இருந்த செடி, கொடிகள் எல்லாம் சின்னாபின்னம் ஆகிவிட்டன. மரங்கள் வேருடன் சாய்ந்தன. ஒரே ஒரு அரச மரம் மட்டும் அந்தப் புயலுக்கு ஈடு கொடுத்து நின்றது. புயல் ஓய்ந்தபின் சுற்றிலும் பார்த்த அரசமரத்துக்கு ரொம்பக் கவலை ஏற்பட்டது. 'சே! எல்லாச் செடி கொடி மரங்களும் அழிந்து விட, நான் மட்டும் ஏன் இப்படியே நின்று கொண்டிருக்கிறேன்! நான் மட்டும் இப்படி நிற்பதால் என்ன பலன்? நானும் விழுந்திருக்கலாமே!' என்று மனதில் வருத்தப்பட்டது.



அந்த அரசமரம் மிகவும் சோகமாக இருந்தது. புயலடித்து ஓய்ந்தபின் சிறிதுகாலம் கடந்தது. பின்னர் வசந்த காலம் வந்தது; அரச மரம் பூத்துக் குலுங்கியது. இரண்டு அணில்கள் அந்த மரத்தின் கிளைகள்மீது ஓடிப்பிடித்து மகிழ்ச்சியுடன் விளையாடின. அப்போது ஒரு அணில், "நாம் இந்த மரத்துக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்! இந்த மரம் மட்டும் இல்லாது போயிருந்தால், கடந்த புயலின்போது, நாம் அழிந்திருப்போம். இந்த மரத்தின் வேர்ப் பகுதியில் இருந்த ஒரு பொந்துதான் நம்மைக் காப்பாற்றியது" என்று இன்னொரு அணிலிடம் சொன்னது.

"ஆமாம்! ஆமாம்! இந்த மரம்தான் நமக்குப் புகலிடம் தந்து காப்பாற்றிய தெய்வம்" என்று அதனை ஆமோதித்தது அடுத்த அணில். சிறிது நேரம் கழித்து, ஒரு மரங்கொத்திப்பறவை, "இறைவா! இந்த மரம் மட்டும் இல்லாவிட்டால் என் கதை என்றைக்கோ முடிந்திருக்கும்; எனக்கும், உனக்கும் அபயம் தந்த இந்த மரத்துக்கு என் மனமார்ந்த நன்றி" என்று சொன்னது. அதுபோலவே, அந்த மரத்தின் கீழ்ப் பகுதியில் இருந்த பொந்து ஒன்றில் வசித்த முயல் ஒன்றும் மரத்தைப் பாராட்டியது. அப்போதுதான் அந்த மரத்துக்கு, தான் இத்தனை பறவை, விலங்குகளுக்கும் பயன்பட்டிருக்கிறோம் என்பது புரிந்தது.

சே! தனிமையில் நிற்பதாக மனம் நொந்து கொண்டோமே! அது எத்தனை பெரிய தவறு. இந்தப் பறவை, விலங்கினங்கள் எல்லாம் என் குழந்தைகள் போல. அவைகளுக்கு உதவ வாய்ப்புக் கிடைத்தது எத்தனை பெரிய பாக்கியம்! என்று நினைத்துப் பெருமைப் பட்டது.

நாமும் அந்த அரசமரம் போலத்தான் இருக்க வேண்டும். கிடைத்ததை நினைத்து, அதில் நிறைவடைந்து, சந்தோஷப்பட வேண்டும். அதைப் பயன்படுத்தி அடுத்தவருக்கு உபயோகமாக எப்படி இருக்கலாம் என்று பார்க்க வேண்டும். ரிடையர்ட் ஆகிவிட்டோமே! இனி நமக்கு என்ன இருக்கிறது என்று சோர்ந்துவிடாமல், 'இதுவும் இறைவன் கொடுத்தவரம்' என்று நினைத்து, எஞ்சிய வாழ்க்கையை உபயோகமாய்ச் செலவழிக்க முன்வரவேண்டும்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 152க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

நர்மதா தர்மதாஸ், புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ச. வனிதா, 56/A, ஆரியகம, ஹட்டன்.
2. ஏ. ஏ. அஹ்மத், 60/2, காலிங்க மாவத்தை, கொழும்பு - 05.
3. அபிராமி, B3/3, என்.எச்.எஸ். தொடர்மாடி, தெகிவளை.
4. திருமதி. ரஞ்சினி, 43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
5. திருமதி. ஐ.எல்.யு. றபீனா, 61.'.2, பள்ளிப்போருவை, ஹெம்மாதகம.
6. சி. நவநீதன், 4/5, அம்பக்கோட்டை, கெங்கல்ல, கண்டி.
7. ரி. வேலுப்பிள்ளை, போக பிட்டிய, கெங்கல்ல.
8. எம்.ஐ.எம். அஷ்ரப், 489, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது - 07.
9. வி. சிந்துயன், 31/3, புகையிரத நிலைய வீதி, வவுனியா.
10. ஆர். மதிஅழகன், 190 புவக்கொடமுல்ல. பதுளை.

### குறுக்கெழத்துப் போட்டி 154

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | ■ | 22 | 23 | 24 |
| ■ | 26 | 27 | ■ | 29 | ■ |
| 31 | 32 | ■ | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1. சுப காரியங்களில் ஒன்று.
7. எட்டு என்ற தொகையையும் குறிக்கும் (குழம்பியுள்ளது).
13. காரியம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
22. காசு.
26. விக்ரம் நடித்து வெளியான திரைப்படமொன்று.
31. சேனை என்றும் கூறலாம்.
34. விசும்பு என்பதன் ஒத்த சொல் (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. எந்தவொரு செயலுக்கும் இது அவசியம்.
2. நீரூற்று அல்லது சிற்றாறு எனலாம் (குழம்பியுள்ளது).
3. அழகு என்றும் பொருள்படும்.
4. அடகு அல்லது ஈடாக வைத்திருக்கும் பொருள் (குழம்பியுள்ளது).
12. வீரம், வெற்றி எனப் பொருள்படும்.
23. அம்பு (குழம்பியுள்ளது).
26. நீரணை என்றும் பொருள்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 152 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜ (1) | ணா (2) | தி (3) | ப (4) | தி (5) | ■ |
| ன (7) | மி (8) | ன் (9) | ல் (10) | ■ | ஏ (12) |
| க (13) | சு (14) | வ (15) | ம் (16) | க் (17) | ர் (18) |
| ன் (19) | ■ | க (21) | சோ (22) | ம் (23) | ■ |
| ■ | தி (26) | ர (27) | ■ | ஊ (29) | மை (30) |
| இ (31) | சை (32) | ■ | ம் (34) | க (35) | சு (36) |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 31.01.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-154
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## புதிய நடையில் புதிய தத்துவங்கள்

**- வழங்குவது றாஹில்**

### மலர் இனம்

**எதிர்** பால் உயிர்தான் இந்தப் பூமியின் இதயம். அதனால் பூ இனத்தை நீ வாள் அம்சமாக்காதே!

மெல்லினத்தை முள்முகமாக் காதே நீ.

உன் கனவுப் பாசையை கல் முகவரியாக மாற்றாதே!

புன்னகை தேசத்தில் மலர் களால் நீ வீடு கட்டி வை!

புல்லாங்குழல் மனதுகளை நீ பறையாக்கினால் உன் இதயத்தில் பாறைகள் சரியும்.

ஒரு பெண்ணின் மனதை நீ வணங்கும்போது புனிதமடைகிறாய்.

ஒரு பெண்ணின் பருவ வயது நீ வாங்கும்போது உன் மனம் அழகாகிறது.

ஒரு பெண்ணுக்கு நீ அன்பு செய்யும்போது உனக்குள் காதல் ஒலிக்கிறது. நேசம் ஒளிர்கிறது.

நீ அழகைக் கண்களால் வாழ்த் தும்போது உனக்குள் நிலாக்கள் உதிக்கின்றன.

ஒரு பெண் மீது விழுகின்ற பூக்கூட முளைத்துவிடுகிறது.

ஒரு பெண்ணின் பார்வை பட்ட சிறு கற்கள் கூட முத்துக்களா கின்றன.

உன்னோடு உரையாடுகின்ற கடவுள்தான் தாய்.

உன் தாயின் பாதங்களை நீ தரிசிக்கும்போது ஆயிரம் கோயில் கள் ஆனந்தம் பெறுகின்றன.

தாயினுடைய பாசத்தின் முன்னே இமயம் தோற்றுவிடுகிறது.

ஏழு கடல்களும் பின் வாங்கு கின்றன.

உன் விலாசம் சகோதரிகளோடு சம்பந்தப்பட்டதா?

நீ பாசச் சோலையில் சுவாசிக் கிறாய்.

உன் இதயம் சகோதரிகளால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறதா?

நீ இன்னிசையோடு சேர்ந்த பாடலாகிறாய்.

பெண் விழிகளால் துடிதுடிக்கின்ற போது நீ அந்தத் துடிப்புக்கு முற்றுப் புள்ளி செய்!

பெண்ணின் சோகம் வானத்தைக் கூட அழ வைக்கக்கூடியது.

மனதால் வசிக்கின்ற இந்த மலர் இனத்தை நீ மனதால் வாசித்துப் பார்!

நீ பெண்ணை அசிங்கப்படுத்தும் போது உனது பரம்பரையில் நெருப்பு நிலைக்கிறது.

உன் கண்களுக்கு ஒரு பெண் பார்வை தருகிறாள் என்றால் - உன் இதயத்திற்கு ஒரு பெண் துடிப்பு வழங்கு கின்றாள் என்றால் -

ஒரு தேன் ஆறு உன்னில் பெருக்கெடுக்கிறது.

நீ சமபங்கு உரிமை செய் பெண் ணுக்கு.

நீ உடலால் வாழ்கிறாய்.

பெண் மனதால் வசிக்கிறாள்.

ஒரு துளி உணர்ச்சி உனக்கென் றால் நூறு துளிகள் உணர்ச்சி பெண் ணுக்கு.

நீ உன் மனைவிக்கு வீட்டுச் சிறை செய்யும் போது உன் மனது மரித்து விடுகிறது.

நீ உன் பாதியின் உணர்வுக்கு நெருப்பு வைக்கும்போது நீயும் சேர்ந்து தான் எரிவாய்.

அவள் சுதந்திரத்திற்கு நீ சங்கிலிப் பிடியானால் நீ அன்பு கொன்றவனா கிறாய்.

பெண்ணை உன்னைப் போல் நீ ஆராதிக்கும் போது கடவுள் உன்னை நேசிக்கிறான்.

# நான் - அவன் + அது!

**மாலை** ஆறு மணி ஆனாலே போதும்; அவன் என்னைத் தேடி வந்து விடுவான்! எனது அலுவலக வேலைப்பளுவிலிருந்து நான் மீளும் சமயம் பார்த்து என்னை நெருங்கிவரும் அவனது வசீகர வார்த்தை வலை விரிப்பிலிருந்து விலகி நடக்க நான் பெரும் பிரயத்தனம் எடுக்க வேண்டியிருந்தது. வந்ததும் வராததுமாய் கைகளிரண்டையும் உதறிக்கொண்டு “என்ன பார்ட்னர் போலாமா? டைமாகிடுச்சு; எந்திரு. கையெல்லாம் நடுங்குது பார்!” என்பான். அவனையும் அவனது கோலத்தையும் காண முதலில் எனக்குச் சிரிப்பு வந்தாலும், அவன் என்னைப் படாத பாடு படுத்துவதைக் கண்டு அவன் மேல் எரிச்சலும் ஏற்படுவதுண்டு. ‘சும்மா இருந்த என்னை குடிகாரனாக்கி விட்டானே!’ என்ற ஆதங்கம் எனக்கு! அவனது சகவாசமே வேண்டாமென்று நான் ஒதுங்கிச் சென்றாலும் என்னை அவன் விடுவதாக இல்லை! ‘ஏன்தான் இவனோடு சிநேகம் ஏற்படுத்திக் கொண்டேனோ’ என்று எண்ணி என்னை நானே வருத்திக் கொள்வேன். என்றேனும் ஒரு நாள் அவனுடைய உறவை அடியோடு அறுத்துக்கொள்ள வேண்டுமென்ற நம்பிக்கை மட்டும் அடி மனதில் உறுதியாய் இருந்தது. என்னை அழிவுப் பாதையில் கொண்டு செல்வதில் அப்படி ஓர் ஆனந்தம் அவனுக்கு! ‘குடி குடியைக் கெடுக்கும்!’ என்று சதா அவனுக்கு எடுத்துச் சொல்லியும் கூட அவன் அதை லட்சியம் செய்வதாகவே இல்லை. ‘தேனைத் தொட்டவன் - விரலை நக்காமல் விடுவானோ?’ என்பான் விகடமாக. ‘போடாங்.... இவனே! நீயும் உன் இத்துப்போன தத்துவமும்’ என்று எனக்கு ஏற்படும் ஆத்திரத்துக்கு அவனை இரண்டு சாத்துச் சாத்தினால்தான் என் மனசு ஆறுமாப் போலிருக்கும்.

இப்படித்தான் நேற்று முன்தினமும் அளவுக்கு அதிகமாக என்னைக் குடிக்க வைத்துவிட்டு அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் பாவி! என் மானம், மரியாதையெல்லாம் போகுமளவுக்கு கால்கள் தடுமாற முச்சந்தியில் நான் நின்ற கோலத்தைப் பார்த்துவிட்டு பலர் ஏளனமாய்ச் சிரித்தனர். நான் நிறை வெறியோடு ஆடியசைந்து போனதைக்கண்டு தெரு நாய்கள் கூட குரைக்கத்தான் செய்தன. எப்படியோ தட்டுத்தடுமாறி மெல்ல மெல்ல ஊர்ந்து எனது இருப்பிடத்தைச் சென்ற



டைந்தேன். கட்டிலில் விழுந்து படுத்ததுதான் தெரியும். காலையில் கண் விழித்த போதுதான் என் உடல் நிலை யில் ஏற்பட்ட மாற்றத்தை என்னால் உணர முடிந்தது. உடல் தளர்வுற்று இரத்த சோகை யினால் தலையும் சுற்றவே மருத்துவரைச் சென்று சந்தித்தேன். என்னை நன்கு பரிசோதனை செய்த மருத்துவரோ எனக்கு இரத்தப் புற்று நோய் ஏற்படக்கூடிய வாய்ப்பிருப்பதாகவும் அதனால் குடிப்பழக்கத்தை விட்டு விடும்படியும் அறிவுரை பகர்ந்தார். அவர் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சிக்குள்ளானேன். நான் அவரின் ஆலோசனைப் படி நடக்க முயன்றாலும் அந்தச் சண்டாளன் என்னை வழி கெடுப்பதற்கென்றே கூடவே இருக்கின்றானே! நான் என்ன செய்வேன்? மனதில் பெரும் குழப்பம் உருவாகி, நிம்மதியும் அற்றுப் போனது. அலுவலகம் செல்வதற்கும் நாட்டமில்லை. சில நாட்களுக்காவது அவனது கண்களில் படாமல் இருந்து விட வேண்டும் போலிருந்தது எனக்கு.

சுவர்க் கடிகாரம் எழுப்பிய ஒலி ஓசை கேட்டு என்தூக்கம் கலையவும் கண் விழித்தேன். நேரம் இரவு பத்து மணி பிந்திவிட்டது. தொண்டையெல்லாம் வறண்டு ஒரே தண்ணீர்த் தாகம், படுக்கையை விட்டெழுந்தேன். குளிர்சாதனப் பெட்டியிலிருந்து தண்ணீர் போத்தலை எடுத்து சிறிது பருகினேன். ‘ஜில்’ என்றிருந்தது. மீண்டும் படுக்கையில் விழுந்து புரண்டு புரண்டு பார்த்தேன்; தூக்கம் வரவே இல்லை. ஏதோ இனம் புரியாத பயம் ஒன்று உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. யாரோ என்னை அடித்துப் போட்டது போல் உடல் சோர்ந்து போனேன். ‘டக்....டக்...டக்’ கதவு தட்டப்படும் சத்தம். இந்நேரத்தில் யாராக இருக்கும். யோசித்தேன். ‘டக்...டக்...டக்..’! சத்தம் நின்றபாடில்லை. இதயத்துடிப்பு வேகமானது. மெல்ல சென்று கதவைத் திறந்து பார்த்தால் எதிரில் நின்றது வேறு யாருமே அல்ல. சாட்சாத் அந்தப் பயலேதான்! காவிப் பற்களைக் காட்டியவாறு சிரித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. “அடப் பாவி....நீ இங்கேயும் வந்துட்டியா?” சடாரென கதவை அடித்து மூடிவிட்டு உள்ளே ஓடினேன்.

“ஹலோ பார்ட்னர்! என்ன இது - என்ன கதவை அடைக்கிற?” அவன் குரல் கொடுத்தான். “நீ எதுக்குடா இங்க வந்தே! திரும்பிப் போயிடு!” கடிந்து விழுந்தேன் அவன் மேல். “என்ன கண்ணு...! என்னாச் சும்மா உனக்கு? ஏன் இப்புடி நடந்துக்கிற?” அவன் திருப்பிக் கேட்டான். “உன்னுடைய சகவாசமே இனி வேண்டாம் எனக்கு! யூ கெட் அவுட் ஃபுரம் ஹியர்!” நான் போட்ட சத்தம் கேட்டு அவன் கலகலவென சிரித்தான். அந்தச் சிரிப்பொலி என் இருப்பிடமெங்கும் எதிரொலித்தது. “சிரிக்காதே! அப்படிச் சிரிக்காதே!” ‘டக்....டக்...டக்...!’ இம்முறை சற்று அழுத்தமாகவே கதவு தட்டப்பட்டது. நான் எதுவும் பேசாமல் சோபாவில் போய் அமர்ந்து கொண்டு என் கவனத்தை வேறு பக்கம் திருப்ப முயன்றேன். திடீரென அவனது குரல் தணிந்து விடவும், ‘அப்பாடா!’ நிம்மதிப் பெருமூச்சு விட்டவனாய் சோபாவிலிருந்து தலையை மெல்ல உயர்த்தி எதிரேயிருந்த ஜன்னல் பக்கமாய் எதேச்சையாகப் பார்த்த போது அங்கே அவன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு விட்டேன். அவனது கையில் மதுபானப் போத்தல் ஒன்று! அதை என்னிடம் காட்டி லாவகமாக என்னை அழைத்தான். என்னையும் அறியாமலே எனது பாதங்கள் அவனிடம் செல்ல விழைகின்றன.

“கமான் பார்ட்னர்! கம் அன்ட் ஹேவ் சம்திங்.” அவன் என்னை விடுவதாக இல்லை. நாய்க்கு எலும்புத்துண்டைக் காட்டி அழைப்பது போன்று ‘விஸ்கி’. போத்தலைக் காட்டி என்னை அவன் லாவகமாக அழைக்கிறான். விஸ்கி போத்தலைக் கண்டதுமே என் நாவில் எச்சிலூறியது. கொஞ்சம் கொஞ்சமாக எனது பிடிமானம் தளர்வுற, என்னையும் மீறி அவனை நெருங்கினேன். “கமான்! கமான்!” ஏதோ ஒரு மந்திரவாதியின் தந்திர வார்த்தையில் மதி மயங்கிச் செல்லும் மனிதன் போல் என் நிலையும் ஆகிவிட்டது. நான் அவனருகில் சென்றதும் அவன், தான் வைத்திருந்த மதுப்போத்தலை என்னிடம் தந்து “இந்தா சோமபானம்! இதை அருந்தினால் உன் சோகமெலாம் தீரும்! என் ஜாய்! பீ ஹப்பி!” என்றான். என் கைகள் நடுக்கமுற, அதை வாங்கிக் கொள்ளவும் அவன் என்னைப் பார்த்து கண்சிமிட்டிச் சிரித்தான். எனக்கோ மூச்சு வாங்கியது! வியர்வையினால் உடல் தொப்பலானது.... ‘நான் மதுவுக்கு அடிமையாகி விட்டேனே! போதை என் பாதையை மாற்றிவிட்டதே!’ மனம் வலித்தது. குடிப்பதா - வேண்டாமா? என்ற போராட்டம் எனக்குள் நடக்க மௌனமானேன். என் நிலை கண்டு அவன் எள்ளி நகைத்தான். “என்ன பார்ட்னர் யோசிக்கிற? சாவைக் கண்டு பயப்படுறீயா? நாம எல்லாருமே ஒரு நாளைக்கு கண்ண மூடத்தானே போறம்! லைப் இஸ் சோட்! மேக் இட் சுவீட்!” என் மூலையை மாய வார்த்தைகளால் சலவை செய்தான். மதுவைத் தொட்டான்; மதி கெட்டான் என்றாகி விட்டது என் நிலைமையும்.

அவனது உபதேசத்தைக் கேட்டதும் எனக்குள் ஏதோ ஒரு ரோஷம் பொத்துக் கொண்டு வரவே “டேய்! நீ யாரைப் பார்த்து பயப்படுறன்னு சொல்ற? நான் ஒண்ணும் சாவைப் பார்த்து பயப்படுமளவுக்கு கோழை இல்லை! ஆமா.....இப்போ பாரு...” வீராவேசத்தோடு கையிலிருந்த மதுப் போத்தலின் மூடியைத் திறந்து மளமளவென அதில் கொஞ்சம் உள்ளே விட்டேன். ‘ஹா...’நெஞ்சை எரித்துக் கொண்டு உள்ளிறங்கியது. “பார்த்து...பார்த்து பார்ட்னர்! கொஞ்சம் சோடாவும் சேர்த் துக்கோ. இல்லைன்னா போதை தலைக் கேறிடும் ஜாக்கிரதை!” - கிண்டல் பண்ணினான்.

“போடா குடிகார நாயே! எனக்கே நீ அட்வைஸ் பண்ணுறீயா? மவனே... உதைப்பேன் உன்ன!”

“ஐயே...ஏன் பார்ட்னர் டென்ஷனாவுற? ‘சீக்’ வரப்போவுது உனக்கு!”

“இனி என்னடா இருக்கு வர்றதுக்கு? அதுதான் ஏற்கெனவே வந்துட்டுதே! எல்லாமே உன்னால வந்த வெனைதான்டா பன்னி!”

“அது சரி...! என்னாலவா நீ கெட்டே? உன் புத்தி எங்கே போச்சு? நஞ்சுன்னு தெரிஞ்சுகிட்டுத்தானே நா ருசிக்க ருசிக்க குடிச்சே! கடைசியில என் மேலே பழியைப் போட வற!”

“டேய்...டேய்...டேய்! நீ ரொம்ப பேசுற! வேணாம்...!”

“இல்ல பார்ட்னர்! என் மேலே தப்பேயில்லே; இது நீயாகவே தேடிக்கிட்டதுதான்.

சோ....யூ ஆர் கில்டி!” பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போலிருந்தது அவனது பேச்சும் செயலும். அதனால் ஆத்திரம் மேலோங்க என்னையும் மீறி கையிலிருந்த மதுப் போத்தலை அவனை நோக்கி வீசி எறிந்தேன். “யூ பூள்! ஐ வில் கில் யூ ராஸ்கல்!”

நான் வீசி எறிந்த போத்தல் நிலைக் கண்ணாடியில் தெறி பட்டு கண்ணாடியும் துகள்களானது. ஆவேசமாய் அவன் மீது பாய்ந்து அவன் குரல்வளையை நெரித்துக் கொல்லுமளவிற்கு ஏதோ ஒரு வேகம் என்னில் பரவவும் “அடேய்...சண்டாளா! என் வாழ்வையே சூனியமாக்கிட்டியேடா பாவி! எங்கேடா ஒளிஞ்சிருக்கே! வெளியே வா... ஒன்ன விட மாட்டேன். இன்னைக்கு கம் அவுட்....கம் அவுட்...அவனைத் தேடினேன். ஆனால் அவன் அங்கு இல்லை! எங்கே போனான். கொலை வெறியோடு நான் தேடித்தேடி ஓய்ந்தபோது, எனக்கு மூச்சிறைத்தது. தலை சுற்றிக்கொண்டு வரவே நிலை தடுமாறி நிலத்தில் விழுந் தேன். அங்கு சிதறுண்டு கிடந்த கண்ணா டித் துகள்களில் திடீரென அவனது பிம்பம் தோன்றி என்னைப் பார்த்து ஏளனம் செய்யக் கண்டேன். ‘ஹா...ஹா... ஹா...ஹா...’ என் செவிப்பறை கிழியுமளவுக்கு அவன் ஹாஸ்யமாகச் சிரித்தான். எனக்கு ஒன்றும் புரியவில்லை; கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தேன். என்னை சுதாகரித்துக் கொள்வதற்கு மிகவும் சிரமப்பட்டேன்.

“ஹலோ பார்ட்னர், யாரைத் தேடுற?” இதோ அவனேதான்! கண்டுவிட்டேன். அவன் மீது பாய்ந்து விழவே கண்ணாடித் துகள்கள் என் முகத்தை பதம் பார்த்து விட்டன. சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளில் தோன்றிய அவனது பிம்பம் ஒட்டு மொத்தமாக என்னைப் பார்த்து ஓவெனச் சிரித்துப் பரிகாசம் செய்யவும் கொஞ்சம் கொஞ்சமாக என் நினைவுகள் திரும்பிக் கொண்டிருந்தன. இப்போது அவன் பேசுவதை என்னால் கிரகிக்க முடிகிறது. காது கொடுத்து தெளிவாகக் கேட்கிறேன். “என்னை பார்ட்னர், நீ...படா டென்ஷன் பார்ட்டியா இருக்கியே? இப்போ எதுக்கு இப்படி மூடவுட் ஆவுற? என்னைத் தேடித்தேடி கலைச்சுப் போயிட்ட போலிருக்கே!”

“ஆமான்டா, நீ எங்கடா இருக்கே?” அவன் சிரித்துக் கொண்டு சொன்னான்

“என்ன பார்ட்னர் இப்படிக் கேக்கிற? நீ வேற நான் வேறையா?”

“நீ என்னடா சொல்ற?”

“ஆமான்டா பார்ட்னர்! என்ன உனக்குள் வைத்துக் கொண்டு எதுக்கு நீ வெளியில் தேடுற?.....!”

“என்னது சைலண்டாகிவிட்டே?”

எனக்கு நடப்பது கனவா நினைவா, எதுவும் புரியவில்லை - ஏதோ ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையில் அந்தரத்தில் பறப்பது போலிருந்தது.

-யாழமீர் மர்சூன்

“யாரவன்?” இப்படி ஒருவன் உண்மையிலேயே இருக்கின்றானா - அல்லது இது “வெறும் பிரமையா?” நான் யோசித்துக் கொண்டிருக்க, “இனி நீ பேச மாட்டே பார்ட்னர்! ஏன்னா நான் யாருன்னு உனக்கு உண்மை புரிஞ்சுபோச்சு! இனிமேல் நீ தெளிவடைஞ்சிடுவே! அப்போ நான் வரட்டுமா பார்ட்னர்?” என்று கூறி அவன் மின்னலாய் மறைந்தான். அவன் தான் ‘நான்’ என்ற உண்மை அறியாமலேயே - இதுவரை நாள் எனக்குள்ளே இருந்து கொண்டு என்னை ஆட்டிப் படைத்த ஒரு குடிகார அரக்கனின் பிடியிலிருந்து என் வாழ்க்கையும் மீட்சி பெற்றது போல் உணரலானேன். ‘இன்று முதல் குடிப்பதில்லை!’ என்று என் மனதில் உறுதி எடுத்துக் கொண்டேன்!

# பாசத்தின் ஆழம் இதுதானா!

**நீண்ட** நாட்களுக்குப் பிறகு ஓர் பெரிய பெருமூச்சை விட்டாள் காவியா. ஆம் அவளின் கூடப் பிறந்த அண்ணன் முப்பது வருடங்களுக்குப் பிறகு ஊர் வருகின்றான். தனது சொந்தத்தின் உறவுகள் மீண்டும் விருட்சமாக வளர அவள் ஒரு திட்டத்தோடு...அண்ணனை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள்.

வாசலில் சத்தம் கேட்டு சென்று பார்த்தாள் காவியா, புத்தம் புதிய காரில் தனது அண்ணனும், அண்ணியும், கூட இரண்டு பெண் பிள்ளைகளும் வந்து இறங்கினர். இன்முகத்துடன் வரவேற்று அழைத்துச் சென்றாள்.

அண்ணனும் தங்கையும் நீண்ட இடைவெளியின் பின்னர் அன்பை பகிர்ந்து கொள்கின்றனர்.

“எங்கே காவியா உனது பிள்ளைகளைக் காணோம்” என்று உரிமையோடு கேட்ட அண்ணனுக்கு, “மூத்தவன் கல்யாணம் முடித்துச் சென்று விட்டான். இளையவன் இந்த முறைதான் உயர்தரம் எழுதுகிறான். அவன் டியூசன் சென்றிருக்கிறான்” என்றாள் காவியா.

இவர்களின் உரையாடலுக்கிடையே அவளின் வீட்டில் பழுத்திருந்த பெரிய பலாப்பழம் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிரப்படுகின்றது. சமையலுக்குரிய வேலைகளைச் செய்ய காவியா எழுந்து செல்கின்றாள். தன் எண்ணத்தில் உதித்ததை எப்படி அண்ணனிடம் கேட்பது என்ற சிந்தனை அவள் மனதில் இழையோடுகிறது.

பகல் உணவும் பரிமாறப்படுகின்றது. அழகிய விருந்தோம்பல். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும்போது எழும் சந்தோஷத்தை அங்கு காண முடிந்தது.

காவியா நேரடியாகவே அண்ணனிடம் கேட்கின்றாள். “அண்ணே! முப்பது வருடங்களுக்குப் பிறகு சொந்த ஊருக்கே வந்திருக்கிறாய். நமது கண்ணுக்குப் பிறகும் நமது உறவு நீடிக்க வேண்டும். ஆதலால் உனது இளைய மகளுக்கும் எனது மகனுக்கும் ஒரு உறவை முடிவாக்குவோம்” என்றாள்...

மலையில் வைத்த வெடி வெடிக்கும் போது எப்படிச் சிதறுமோ அது போல, அண்ணன் அருணின் சொற்கள் சிதறின.

“காவியா உனக்கு என்ன பைத்தியமோ! எனது பிள்ளைகள் நகரத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். நாகரீகம் அறிந்தவர்கள். உனது பிள்ளை பட்டிக்காட்டில் வளர்ந்தவன். படித்தவனாக இருந்தாலும் பட்டிக் காட்டுக்கும் நகரத்திற்கும் ஒத்து வருமோ! உன் எண்ணத்தை விடு. இதுதான் நான் இங்கு வர விருப்பம் இல்லை. நமது குழந்தைகள் கல்யாணம் முடித்தாத்தான் உறவு நீடிக்குமோ! இப்படி இருந்தால் நமது உறவு நீடிக்காதோ!” என்றான்.

காவியா மனதிற்குள் அழுதாலும், அண்ணன் அருண் கூறுவதிலும் ஒருவகையில் நியாயம் இருப்பதுபோல தென்பட அத்தோடு விட்டாள். அண்ணன் குடும்பத்தார் இரு நாட்கள் தங்கியிருந்து சென்று விட்டனர்.



தாராபுரம் எஸ்.ஷாஜஹான்

காவியாவின் மகன் சதிஷ் க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதி பெறுபேறும் வந்துவிட்டது. ஆம், அந்த ஊரிலே விஞ்ஞானப் பிரிவில் முதல் தர மாணவனாக அவன் சித்தியடைந்திருந்தான். பல்கலைக்கழகமும் அவனுக்குக் கிடைத்தது. பட்டிக்காடு நகரம் என்று பேசிய தன் மாமாவின் வசிப்பிடமான கொழும்பிற்கே அவன் எடுபட்டிருந்தான். எல்லா பாடங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்ற சதிஷ், ஒரு திறமைமிக்க வைத்தியராகத் தேறி, தான் பிறந்த சொந்த ஊருக்கே சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் சொந்த ஊருக்கே வந்திருந்தான்.

மகனின் திறமையைக் கண்ட காவியா மிகவும் சந்தோஷப்பட்டாள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் கூட அவனை வாயாரப் புகழ்ந்தனர்.

காவியா வீட்டின் முன் வாகனம் வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அங்கே அவள் அண்ணன் அருண் மட்டும் வந்து கொண்டிருந்தான்.

“காவியா எப்படி இருக்கின்றாய். சுகமாக இருக்கின்றாயோ!... என்ன இப்படி இளைச்சுப் போயிருக்கின்றாய்?” என்றவாறு வந்தான்.

“என்ன அண்ணன் மிச்ச நாட்களுக்குப் பிறகு வந்திருக்கின்றாய். வந்து உட்காருங்கோ” என்றவாறு அழைத்துச் செல்கின்றாள்.

இருவரின் உரையாடல், விருந்தோம்பல் முடிவுற்ற பிறகு தான் வந்த விடயத்தைக் கூறுகின்றான் அருண்.

“காவியா சொல்றேன்னு ஒன்னும் நினைக்காதே! உனது மகன் சதிஷிற்கும் எனது மகள் வஸந்தாவிற்கும் கல்யாணம் முடித்து வைப்போம் என்ற நோக்கோடு கேட்கவந்தேன்.”

காவியா, அன்று அண்ணன் கூறிய வார்த்தைகள் நெஞ்சைத் தைத்தாலும், “அண்ணா! நீங்கள் அன்று கூறிய வார்த்தைக்குக் கட்டுப்பட்ட நான் இன்று இவனுக்கு நிச்சயதார்த்தம் முடித்து விட்டேனே! கொழும்பில பெரிய வர்த்தகர் கோவிந்தனின் மகள். அவளும் டாக்டருதான். இரண்டு பேரும் விரும்பிட்டாங்க. ஏன் காதலுக்கு குறுக்கே நிற்பானே என்று அவங்க வழிக்கே விட்டுவிட்டன் அண்ணே!” என்று காவியா கூறியபோது அருணின் இதயம் வெடித்ததைப் போல உணர்ந்தான். “அன்று காவியா கூறியதைக் கேட்டிருந்தால், இன்று எமது உறவும் பூத்திருக்கும். எனது மகளுக்கும் நல்லதோர் வாழ்வும் அமைந்திருக்குமே. எனது அகம்பாவம் எனக்கே வினையாகிவிட்டது” என்று நினைத்த அருண் மெதுவாக காவியாவிடம் கூறிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு நகருகின்றான்.

அண்ணன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த காவியா, “அண்ணா! எனக்கு எவ்வளவு வேதனையான வார்த்தை கூறினாய்! ஒரு நாளாவது உறவென்ற பாசத்தின் ஆழம் புரிய வேண்டும். பயப்படாதே, நாளை நான் உன் வீட்டிற்கு வந்து எனது சதிஷை உனது மகளுக்குத் தருகின்றேன். நான் முதலில் கூறியது பொய்! ஆமாம். முதல் பொய்” என்று கூறி பெருமூச்சு விட்டாள்.

(யாவும் கற்பனை)

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**மனித** இனத்தின் செயற்பாடுகளை நாளாந்தம் கணக்கிடுவோமாயில் அந்தந்த நாட்டில் வாழும் மக்களின் தன்மையை அந்த நாட்டு முன்னேற்றத்திலிருந்து, கண்டுகொள்ளலாம். என்பார்கள். அப்படியாயின் அந்த நாட்டு மக்களின் நேரத்தை பொன்னாக மதிக்கிறார்கள் என்பதுதான் அதன் உட்பொருள் என்று கருதலாம் இதைத்தான் வள்ளுவர்...

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அ∴துதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்கும் கல்* என்றார்

வாழ்நாளை வீண் நாளாகக் கழித்துவிடாதிருத்தலே வாழ்க்கையானது முதுமையடையாது தடுக்கும் வழி என்பதை ஒரு கணமாவது சிந்தித்தாலே போதுமானது.

## இலக்கிய நயம்

# பணிமொழியே கனி மொழி

**பே**ங்கள் இப்படிப் பேசிப் பேசியே என்னை ஏமாற்றி விடுகிறீர்கள்'' என்ற வாறு அருள்வர்மனை தள்ளிவிட்டாள் செண்பகவல்லி. அருள்வர்மன் சிரித்துக் கொண்டே கேட்டான், "அப்படி எதைப் பறித்துக் கொண்டு தராமல் ஏமாற்றி விட்டேன்'' என்றவன் குறும்பாக அவள் முகத்தை நோக்கினான். "கட்டாயம் சொல்லத தான் வேண்டுமோ?'' என்ற வள்



பார்த்தீர்களா? எத்தனை வடுக் கள். இவைகளுக்கெல்லாம் யார் காரணமாம்? என்றவள் கன்னத்தைக் காட்டிவிட்டு, அருள்வர்மனின் செவியைப் பிடித்து செல்லமாகத் திருகினாள். ஐயோ! என் செவிகளும் அந்த நிலையைவிட மோசமான நிலையில்தானே இருக்கின்றன. அவை மட்டும் என்ன நலமாகவா இருக்கின்றன? என்றான் அருள்வர்மன். "பாருங்கள் எப்படியெல்லாம் என்மீது பழிசுமத்துகிறீர்கள் என்று சிணுங்கினாள் செண்பகவல்லி.

அருள்வர்மன் மேலும் அவளைத் தூண்டும் விதத்தில் "நான் அப்படி ஒன்றும் வீணாகப் பழி கூறவில்லையே நீ கொடுத்தவைகளைத்தானே நான் திருப்பிக் கொடுத்தேன். அதற்கு என்னை மட்டும் பழி சொல்வது எந்த விதத்தில் நியாயமாம்?'' என்றவன், அவளின் கண்கள் என்னும் அம்புகளை எதிர் கொள்ள முடியாதவனாய் வான்பரப்பில் தவழ்கின்ற வட்ட நிலவோடு மோதிக்களிக்கின்ற முகிற் கூட்டங்களை பார்ப்பவன் போல் அண்ணாந்து பார்த்த வண்ணம் இலேசாக முறுவலித்தான். அருள்வர்மனின் பேச்சும் அவன் பாவனை செய்கின்ற விதமும் அவளை மென்மேலும் அவன் மேலுள்ள ஆசையைத் தூண்டியதோ என்னவோ "இது தானே என்னை இந்த நிலைக்கு ஆளாக் கியது'' என்றவள், அவன் பின் புறத்தில் அவனை இறுகக் கட்டிக்கொண்டு அவன் முதுகில் தன் பற்களைப் பதித்தவள், அருள்வர்மனை சற்று முன்னால் தள்ளி விட்டாள். "பார்த்தாயா? எத்தனை கோழைத் தனம் முதுகில் தாக்குகிறாயே" "தளபதியாரே தாங்கள் மட்டும் புறமுதுகு காட்டி நிற்பது கோழைத்தனம் இல்லையோ?'' இதனைக் கேட்ட [illegible] என்ன பதில் சொல்வதென்றே தெரிய வில்லை. இருப்பினும் "நானா புறமுதுகு காட்டுகிறேன்?'' நிராயுதபாணியை ஆயுதம் கொண்டு தாக்கினால் என்ன செய்வதாம்? "நான் ஆயுதம் கொண்டு தாக்கினேனா? இது அப்பட்டமான பொய்யாகிற்றே! பொய் சொல்லவும் கற்றுக் கொண்டு விட்டீர்களா?'' என்று பிரமித்தாள் செண்பகவல்லி. இதைக் கேட்டதும் அருள்வர்மன் சிரித்தான். "பொய்வேறு கூறிவிட்டு சிரித்துச் சமாளிக்கப் பார்க்கிறீர்களா?'' "நான் ஒன்றும் பொய் கூறவில்லை. நீதான் உண்மையை மறைக்கப் பார்க்கிறாய்" என்றான் அருள்வர்மன். "எது உண்மை நான் படை கொண்டு தாக்கியதாகச் சொல்வது உண்மை என்றா சொல்கிறீர்கள்? எங்கே காட்டுங்கள் பார்க்கலாம்?''

என்றவள் கைகளிரண்டையும் அவன் முன் நீட்டியபடி நின்றாள். "கைகளில் தான் படை இருக்கும் என்பதில்லையே என்றவனை வியப்போடு பார்த்தாள் செண்பகவல்லி. அவள் புருவங்கள் வினாக் குறியாக வளைந்து நிமிர்கின்றன. "உன் விழிகளோ விடம் தோய்ந்த வேற்படையாக என்னைக் கொல்கின்றனவே: உன்னை அணைக்கும் போதெல்லாம் இரண்டு யானைத் தந்தங்கள் என் மார்பை உருவிச் செல்வது போலிருக்கிறதே இவைகளெல்லாம் படைகள் இல்லையா? உனது விழிகளிரண்டும் வேற்படை வெண் கலசங்களோ வாட்படை. நான் வீழ்வதற்கும் அது தான் அடிப்படை, அதை வைத்தே என்னை வென்றுவிடுவாய் என்பது வெளிப்படை, இத்தனை படைகளையும் வைத்துக் கொண்டு கையை மட்டும் விரித்து விட்டால் இல்லை என்றாகிவிடுமா? "இத்தனை படைகளையும் வைத்துக் கொண்டு நிராயுதபாணியான என்னைத் தாக்குவது கோழைத்தனம் இல்லையா?'' என்றான் அருள்வர்மன். நாணத்தால் அவள் செம்பட்டுக் கன்னங்கள் மேலும் சிவந்தன "போதும் நிறுத்துங்கள். நீங்கள் ஒரு கவிஞராக வந்திருக்க வேண்டியவர். தெரிந்தோ தெரியாமலோ வாளைக் கையில் எடுத்து விட்டீர்கள். அதைவிட பெண்களை மயக்கும் மொழியே உங்களுக்குக் கை வந்த கலையாகி விட்டது'' என்றாள் செண்பகவல்லி. இதைக் கேட்டதும் அருள்வர்மன் சுற்றும் முற்றும் பார்த்தான். "என்ன பார்க்கிறீர்கள்?'' என்று வினவினாள் செண்பகவல்லி ஒன்றுமில்லை பெண்கள் என்றாயே வேறுயாராவது இருக்கிறார்களா என்று பார்த்தேன். "ஓகோ அப்படியும் ஒரு எண்ணம் வைத்திருக்கிறீர்களோ? என்னைப் போல் எத்தனை பேர்?'' செண்பகவல்லி. ஏன் வீணாக மனதைக் குழப்பிக் கொள்கிறாய்? உன்னைத்தவிர வேறு எவரையும் என் மனதால் நினைத்துக்கூடப் பார்த்ததில்லையே நான்! என்று உன்னைக் கண்டேனோ அன்றே உன் அழகுக்கு அடிமையாகி விட்டேன். அதைவிட உன் அன்பிற்கு இந்த உலகத்தையே தந்தாலும் ஈடாகப் போவதில்லை". என்றவன், அவளின் மலர் கரத்தை எடுத்துத் தன் மார்போடிணைத்தான். அவன் வார்த்தைகளில் மதுவுண்டவள் போல் மயங்கிவிட்ட செண்பகவல்லி, கண்களை இறுக மூடிக் கொண்டாள். இதை நினைவு படுத்துகிறது இந்தக் குறள்.

*"பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்*
*பெண்மை யுடைக்கும் படை"*

**தருவது கற்பகன்**

---

# சிந்தியா பதில்கள்

**✍ கா.வே.பாலகுமார் தன் இஷ்டத்துக்கு கன்னாபின்னாவென்று அறிக்கைகளில் போட்டுத் தாக்குகிறாரே...?**

-சிவயோகம், மந்திகை.

இராணுவ விடயங்களில் இவரின் வாலை ஒட்ட வெட்டி விட்டிருப்பதால் அரசியலிலாவது ஒரு இடத்தைப் பிடிக்கின்ற முயற்சிதான் அது.

**✍ ஜோசப் எம்.பி.யின் இடத்துக்கு இன்னும் ஒருவரையும் நியமிக்கவில்லையே, ஏன்?**

-வை.காண்டீபன், கல்லாறு.

தேசியத்துக்கு விசுவாசமான இருவரிடம் கேட்டபோதும் அவர்கள் மறுத்துவிட்டார்களாம். அமரரின் திருமதியாரும் பிடிவாதமாக மறுத்துவிட்டாராம். பதவி வெற்றிடம் இருக்கின்ற போது 'இந்தப் பழம் புளிக்கும்' என்று ஒதுங்குகிறார்களாம்.

**✍ ஒன்றுக்கும் உதவாத த.தே. கூட்டமைப்பு எம்.பி.மார் என்று சொல்வீர்களே, பாராளுமன்றத்தில் எப்படி அமளி துமளி. இது போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா?**

-மோ.அருமைநாயகம், செட்டிகுளம்.

இந்த அமளி துமளி நீடித்தால் ஏதாவது



மாற்றம் வரும். இல்லையென்றால் தமிழ் மக்களுக்காக எதைச் சாதிக்க முடிந்தது? இவர்களால் ஐந்து நிமிட இடைவெளியில் அமுலான அவசரகாலச் சட்டத்தைக்கூட தடுக்க முடியாமல் போனதே என்று ஏன் நீங்கள் யோசிக்கவில்லை.

**✍ நம் நாட்டின் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இன்னும் ஒரு தமிழ் படத்தைக்கூட தயாரிக்கவில்லையே?**

-கா.அரவிந்தன், கொழும்பு -13.

சொற்பொழிவும், கலந்துரையாடலும் நடத்துவதற்கே நேரம் சரியாகி விடுகிறது. திரைப்படம் எப்போது தயாரிப்பது. திரைத்துறையில் ஆர்வமுள்ள பலபேர் இருக்கிறார்கள். வாய்ப்பும், பணமும்தான் தடையாக இருக்கிறது. பழையன கழிதலும், புதியன புகுதலும் நடந்தால், ஒருவேளை ஏதாவது நன்மை நடக்கலாம். அதுவரை தென்னிந்தியாதான் நமக்குத் தஞ்சம்.

**✍ 'பணம்' பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன சிந்தியா?**

-பொ.தெய்வநாயகி, பாலையூற்று.

கண்ணதாசன் "அர்த்தமுள்ள இந்து மதத்தில்'' சொல்கிறார், 'செல்வம்' என்று அதற்கு இன்னொரு பெயர் இருப்பது, நம்மிடமிருந்து சென்று விடுவதால் தான், என்று. இதைவிட வைரமுத்து சொல்லும் போது, 'கையில் கொஞ்சம் இருந்தால் நாம் அதற்கு எஜமான். கழுத்து வரைக்கும் இருந்தால் அது நமக்கு எஜமான்' என்கிறார். இரண்டிலும் எனக்கு உடன்பாடு உண்டு.

**✍ இளைய தளபதி விஜயின் ஆட்டத் தைப் பற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?**

-போ.பிரகாஜினி, தம்பிலுவில் - 01.

நன்றாகத்தான் இருக்கிறது. ஒரே மாதிரியாகவே தொடர்ந்து நடித்து சலிப்புத் தட்டச் செய்கிறார். வித்தியாசமாக எதையாவது செய்தால் தானே நன்றாக இருக்கும். 'ஆதி'யைப் பார்த்திருந்தால் விஜயின் பழைய படங்களினது காட்சிகளின் தொகுப்பு என்று நீங்களே கூறி விடுவீர்கள்.

**✍ சிந்தியா நீங்கள் அரசியலுக்கு வந்தால் தமிழ் மக்களுக்கு நன்மைகள் நடக்குமென்று நான் நினைக்கிறேன். என் நினைப்பு சரியா, தவறா?**

-பெ.வாசுகி, வவுனியா.

மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் காலம் வரும்போது அதைப்பற்றி யோசிக்கலாம். அது சரி, அரசியல் ஒரு சாக்கடை என்று சொல்கிறார்களே. அதற்குள் என்னைத் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்குமளவுக்கு நான் அப்படி என்ன தவறு செய்து விட்டேன்.

**✍ திருட்டு வி.சி.டி.யில் கடைசியாக என்ன படம் பார்த்தீர்கள்?**

-சு.குமரன், அவிஸ்ஸாவெல.

'சரவணா'. அதற்காக ஐம்பது ரூபா வாடகை கொடுத்தேன். பாவம் கடைக்காரர். அவரால் இன்னும் "வெற்றி வேல் வீரவேல்'' சீடியைத்தான் தரமுடியாமல் இருக்கிறது.

**✍ தேவுடா... தேவுடா என்ற பல்லவியை ஈழத்துக் கவிஞர் எழுதியிருந்தால் எப்படி எழுதியிருப்பார். உல்டா பிளீஸ்.**

-சொ.சந்திரமோகன், தாழையடி.

"சாவுடா...சாவுடா...
ஒவ்வொரு நாளும் சாவுடா
சுடுடா....சுடுடா...
அம்புறுவனை சுடுடா...''

என்று எழுதியிருப்பார். அப்பதானே கரன்ட் சிச்சுவேசனுக்குப் பொருத்தமா இருக்கும்.

**✍ சிந்தியா நீங்கள் கடித்து நீண்ட நாளாகிட்டுதே...?**

-எம்.ஐ.பானு, மொரட்டுவை.

அழுகின்ற சிறுவனிடம்....

ஒருவர் :- வீதியில நிண்டு சண்டை பிடிக்கிறார்களே, யார் அவர்கள்?

சிறுவன் :- எங்கப்பாவும் பக்கத்து வீட்டுக்காரரும்.

ஒருவர் :- அந்த ரெண்டு பேரில் யாரு உன்னோட அப்பா?

சிறுவன் :- அதைத் தெரிஞ்சு கொள்ளத்தான் இந்த சண்டையே!

ஒருவர் :- நீண்ட நாள் வாழுறதுக்கு என்ன செய்ய வேணும்?

மற்றவர் :- சாகாமல் இருக்கணும்... ஹீ....ஹீ....

பானு இந்த இரண்டு கடியில் உங் களுக்குப் பிடிச்ச கடி எது?

**✍ புது வீடு கட்டப் போகிறேன். அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?**

-எம்.எம்.சிராக், வந்தாறுமூலை.

கடலிலிருந்து 500 மீற்றர் தூரமாகவும், பாதுகாப்பு வலையமிருந்தால் அதிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரமாகவும் வீடு அமைவதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றதெல்லாம் தானாக நடக்கும்.

**✍ ஜெய சூர்யா?**

-எஸ்.ஸ்ரீரங்கன், நாரஹேன்பிட்டி.

அவரென்ன புவனாவா, கேள்விக் குறியாக இருப்பதற்கு? அவர் விளாசிய செஞ்சுரி பந்துக்கு மட்டுமல்ல, அவரை அணியிலிருந்து ஒதுக்கியவர்களுக்கும்தான்.

**✍ புளூட்டோ கிரகத்திற்கு அனுப்பப்பட்ட விண்கலம்தான் மனிதனால் அனுப்பப்பட்டவற்றில் மிக வேகமானதாமே?**

-எஸ்.அவினாஷ், வவுனியா.

ஆம். அசுர வேகம். மணிக்கு 75 ஆயிரம் கிலோ மீட்டர் எனும் கணக்கில் சென்று கொண்டிருக்கிறது. சந்திர மண்டலத்தை வெறும் 9 மணித்தியாலத்தில் கடந்து விட்டது. ஆனால் புளூட்டோவை அடைய இன்னும் 9 வருடங்கள் எடுக்கும். நீங்களே தூரத்தைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

**✍ கிரிக்கெட் அளவிற்கு ஏன் மற்றைய விளையாட்டுக்கள் புகழ் பெறவில்லை?**

-வி.திவ்யா, மன்னார்.

யார் சொன்னது? நீங்கள் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரேசில் போன்ற நாடுகளில் கிரிக்கெட்டைப் பற்றிப் பேச அல்ல, மூச்சே காட்டமுடியாது. அவர்களைப் பொறுத்தவரை சோம்பேறிகளின் விளையாட்டுத்தான் கிரிக்கெட்.

**✍ அதென்னங்கோ வடுமாங்கா?**

-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.

ஊறுகாய் சாப்பிட்டிறாத உங்களுக்கு சொன்னாலும் புரியாதுங்கோ...வ்...

**✍ அன்ரன் பாலசிங்கமும், சு.ப.தமிழ்ச் செல்வனும் சந்தித்தபோது என்ன பேசியிருப்பார்கள்?**

-பி.முத்து, அட்டாளைச்சேனை.


அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே, நண்பனே.... நண்பனே... நண்பனே...! இந்த நாள் அன்று போல் (பாங்கொக் ஷொப்பிங் போல்) இன்பமாய் இல்லையே, அது ஏன்..... ஏன்..... நண்பனே?

# ஆதி VS பரமசிவன்


**தென்னிந்திய** திரையுலகில் பலர் களமிறங் கினாலும் ஒரு சிலர் மட்டுமே அதிக ரசிகர்களின் கவனத் தையும் எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்துகின்றனர். ஒரு காலத்தில் எம்.ஜி.ஆர், சிவாஜி ஜோடி ரசிகர்களை அதிகம் கவர்ந்திருந்தது மட்டுமல்லாது தயாரிப்பாளர் களையும் தொழில்நுட்பக் கலைஞர்களையும் திருப்திப்படுத்துகின்றவர்களாக திகழ்ந்தார்கள் எம்.ஜி.ஆர். நடிப்பு விடயத்தில் அவ்வளவாகக் பிரகாசிக்க முடியா விட்டாலும் மக்களைக் கவரும் விதமான கருத்துக்



களையும் தனித்துவமான நடிப்பாற்றலையும் வெளிப்படுத்தினார். ஆனால் சிவாஜி நடிப்பின் சிகரமாகத் திகழ்ந்தார். அவரின் நடிப்பை கௌரவித்து பிரான்ஸ் அரசு செவாலியே பட்டத்தை வழங்கி கௌரவித்தது. மக்கள் இவ்விரு வருக்கும் வழங் கிய கௌரவம் வித்தியாசமானது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் என்றும் நடிகர் திலகம் சிவாஜி என்றும் அழைத்தார்கள். இதைவிடவும் பல கௌரவப்பட்டங்கள் இவர்களுக்கு உண்டு.



இவர்களுக்கு அடுத்தபடியாக தென்னிந்திய சினிமாவில் இரண்டாவது அத்தியாயத்தின் கதாநாய கர்களாகத் திகழ்ந்த ஜோடியாக ரஜினி - கமல் இரு வரையும் குறிப்பிடலாம். இவர்களுக்குள்ளும் ரஜினி நடிப் பில் குறிப்பிடத் தக்களவு மக்களைக் கவர்ந்திருந்தாலும் கமல் அளவுக்கு நடிப்பின் பல பரிமாணங்களையும் தாண்டவில்லை. ஆனால் ரஜினிக்கே உரித்தான ஸ்டைல் கூடவே மக்களைக்கவருகின்ற கருத்துக்கள் இவர்கள் வாழ்க்கை யின் தத்துவங்களை எளிமையாக பேசுகின்ற திறமை என்பன இலச்சக்கணக்கான ரசிகர்களையும் சூப்பர் ஸ்டார் என்ற தனித்துவமான கௌரவப் பட்டத்தையும் பெற்றுக் கொடுத்தது. ரஜினியின் திரைப் படங்கள் அடைந்த வெற்றி, தென்னிந்திய சினிமாவை ஜப்பான், அமெரிக்கா அவுஸ்திரேலியா, லண்டன், கனடா, சுவிஸ், தென்னாபிரிக்கா ஆகியநாடுகள் வரை கொண்டு சென்றதோடு மட்டுமல்லாது, அந்நாடுகளிலும் ரசிகர் மன்றங்கள் உருவாகின்ற அளவுக்கு ரஜினி மதிக்கப் படுகிறார். ஆனால் கமல் நடிப்பின் அத்தனை பரிமாணங் களிலும் யதார்த்தமான நடிப்பை வெளிக்காட்டக் கூடிய, சிறந்த கலைஞனாக சமகாலத்தில் தென்னிந்திய சினிமா உலகில் செவாலியே சிவாஜியின் வாரிசாக பேசப்படு கின்ற அளவுக்கு அவரின் நடிப்பு தத்ரூபமானவை. இதற்காகவே இவரது ரசிகர்களால் உலக நாயகன் என்று கௌரவப் பட்டம் சூட்டப்பட்டவர். இந்திய அரசினால் நடிப்புக்காக பத்மஸ்ரீ பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டவர். இதேவேளை ரஜினிக்கு இந்திய அரசு பத்மபூசணம் விருது வழங்கி கௌரவித்துள்ளது. இவ்விருவரும் இன்னும் கூட திரைவானில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.



இவர்களின் திரைப்படங்கள் ஒரே நாளில் வெளியிடப்படுமாக இருந்தால் அது சினிமா உலகைப் பொறுத்த வரை திருவிழாவாகவே களைகட்டி விடும். இவர்களுக்கு அடுத்த வாரிசுகளாக பல இளம் நடிகர்கள் தற்போது களத்தில் குதித்துள்ள போதும் எதிர்பார்ப்புகளை தூண்டுகின்ற ஜோடியாக விஜய் - அஜித் ஆகிய இருவரும் முன்னிலை வகிக்கின்றனர். இவர்கள் இருவரின் களத்தில் விக்ரம் - சூரியா ஆகியோர் தவிர்க்க முடியாதவர்களாக கருதப்பட்டாலும் ரஜினியைப் போல் வேகமும் பரபரப்பையும் தனது நடிப்பின் மூலம் வெளிப்படுத்துபவர் விஜய் தான் என்பதால், விஜய்க்கு நிகர் ஜோடி யாரென்பது கேள்வியாக எழத் தொடங் கியது. இந்தக் கேள்விக்கு முற்றுப் புள்ளி வைத்தார் அஜித். 15 ஆண்டுகளுக்குப் பின்னர் விக்ரம் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி வருகின்ற போதும் அவரை விஜயின் எதிர் ஜோடியாக ரசிகர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது போய்விட்டது. அதே போல் சூர்யாவும் வித்தியாசமான



நடிப்பாற்றலை வெளிப்படுத்தினார். எனினும் ரசிகர்களால் அவரை விஜயின் எதிர் ஜோடியாக ஏற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று. இந்தக் களத்தில் அஜித் மட்டுமே விஜயின் எதிர்ஜோடியாக ரசிகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

இந்த எதிர்பார்ப்பு அதிகரிக்க அதிகரிக்க விஜய் - அஜித் இருவருக்கும் இடையிலும் ரசிகர்கள் மத்தியிலும் சூடான கருத்துக்கள் மட்டுமல்லாது காட்சிகளும் வெளிவரத் தொடங்கின. "தல" என்று அஜித்தையும், "தளபதி" என்று விஜயையும் ரசிகர்கள் அழைத்து வருகிறார்கள். இதற்குத் தீனிபோடும் விதமாக விஜயின் "திருமலை" அஜித்தின் "ஆஞ்சநேயா" ஆகிய இரு படங்களும் ஒரே நாளில் திரையிடப்பட்டது. அன்றிலிருந்து இவர்களின் படங்கள் ஒரே நாளில் வெளியிடப்படுவது பரபரப்புக்குரிய விடயமாக மாறியுள்ளது. இடையில் விஜய் அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்தார். ஆனால் அஜித்தின் படங்கள் அவ்வா றாக பேசப்படவில்லை இந்த இடைவெளியில் விஜய் தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்தார். இப்போது மீண்டும் விஜயின் "ஆதி" அஜித்தின் "பரமசிவன்" ஆகிய இரண்டு திரைப்படங்களும் பொங்கல் தினத்தில் வெளியாகியதில் இருந்து ரசிகர்கள் மத்தியில் பரபரப்புத் தீ பற்றிக் கொண்டுள்ளது. 4 வருடங்களுக்கு முன்பு வெளியான திருமலையும் ஆஞ்சநேயாவும் சாமி பெயர் களை கொண்டவை. அதேபோல் ஆதியும் பரமசிவனும் சாமிப் பெயர்களையே கொண்டவை. இவ்விரண்டு படத்திலும் காணப்படும் ஏனைய ஒற்றுமைகளாக பிரகாஷ்ராஜ் நடித்திருப்பது, வித்தியாசாகர் இசையமைத்திருப்பது சுரேஸ்அர்ஸ் எடிட்டிங் செய்திருப்பது, பீற்றர்ஷெய்ன் சண்டைப் பயிற்சியை வழங்கியிருப்பது இரண்டு படத்திலுமே மோட்டார் சைக்கிளை சண்டைக் காட்சிக்குப் பயன்படுத்தியிருப்பது என்பவற்றைக் குறிப்பிடலாம். இத்தனை ஒற்றுமைகள் இருந்தபோதும் வெற்றி ரசிகர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 3, கூட்டெண் - 6

3, 12, 21, 30 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமே யானால் குரு, சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். தேவ குருவாகிய குருவும், அசுர குருவாகிய சுக்கிரனும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகாததால் குருவாகிய 3, உடல் எண்ணாக வருகின்றவர்களுக்கு சுக்கிரனாகிய 6, உயிர் எண்ணாக வருவது சிறப்பல்ல. இவர்கள் தன் நடவடிக்கையாலும், தன் வாயாலும் தனக்குத் தீங்கைத் தானே தேடிக்கொள்வர். இவர் களுடைய பெயர் தனது பிறந்த திகதிக்கு பொருத்த மானதாக அமைந்தால் மிகவும் மேன்மையான நிலையை அடைவர். பொருத்தமற்ற பெயர் இருக்கு மேயானால் காமவெறியாலும், பெண்களிடம் பழகுவ தாலும் சிக்கல் ஏற்படும். சிலருக்கு உடன்பிறந்த வரிடத்தும், நண்பரிடத்தும் கருத்து வேறுபாடு உண்டாகும். தான் போட்ட திட்டங்கள் தோல்வியடை யும். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் அரசாங்க உத்தியோகத்திலிருந்தும் நிம்மதியின்றி வாழ்கின்றனர். தொழில் செய்வோர் ஏறவும் இறங்கவுமாக இருக் கின்றனர். ஆனால் பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் எல்லா வளமும் பெற்றுச் சிறப்பாக வாழ்வர். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பெண்ணாக இருந்தால் ஆண்களாலும், ஆணாக இருந்தால் பெண்களாலும் கவலைப்படும் சூழ்நிலை உருவாகிறது. இதனால் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளிக்கும் இவர்கள் காமத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இவர்களுக்கு தீர்க்கமான யோசனையும், நல்ல அறிவும் இருக்கும். தீய காரியங்களில் இறங்கிவிடுகின்றனர். சிலர் நல்லவர்களாக வாழ முயற்சி செய்தாலும் கெட்ட பெயரெடுக்கும் சூழ்நிலை அமைந்துவிடுகிறது விதி சதா சதி செய்யும். இதனால் 46 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்கைப் படிப்படியாக உயரும். பெயர் நன்றாக அமையப் பெற்ற வர்களுக்கு மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள், குறைகள், ஆடம்பரமான சாமான்கள் விற்கும் தொழிலாலும், கலைத் தொழிலாலும், கைத்தொழிலாலும் மேன்மை யான நிலையை அடைவர். மலைப் பிரதேசங்களையும் இயற்கைக் காட்சிகளையும் கண்டு ரசிப்பர். ஆடம்பரப் பிரியராகக் காட்சியளிக்கும் இவர்கள் சில நேரங்களில் வாழ்க்கையை வெறுத்தது போன்று இருப்பர். எதைச் செய்தாலும் திருப்தியாகச் செய்யாது குழப்பமாகவே செய்வர். இவர்கள் தன்னுடைய பெயரை நன்றாகக் கீழே குறிப்பிட்டபடி மாற்றியமைத்துக் கொண்டால் வாழ்க்கை சிறப்படையும்.

***தொழில்:***

இவர்களுக்கு, ஆடம்பரப் பொருட்களை வியாபாரம் செய்வதன் மூலம் செல்வம் சேரும். ஜவுளி, தொழிற்சாலை, கமிஷன் போன்ற தொழிலாலும் லாபம் அடையலாம்.

***நோய்:***

இவர்களுக்கு மன வியாதி, இருதய வலி, முட்டு வலி, பல், கண் நோய் போன்றவைகள் வரும். பெயரைச் சிறப்பாக அமைத்துக் கொண்டால் நிவர்த்தியாகும்.

***பெயர் அமைக்கும் முறை:***

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் 19, 37, 46, 64, 27, 36, 45 போன்ற சூரியன், செவ்வாய் ஆதிக்கத்தில் பெயரை மாற்றியமைத்துக் கொண்டு சிறப்பாக வாழலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 1, 9.
யோகமான திகதிகள் - 1, 10, 19, 28; 9, 18, 27.
யோகமான மோதிரக்கல் - தங்க புஷ்பராகம், கனக புஷ்பராகம், வெள்ளை புஷ்பராகம்.

யோகமான நிறம் - வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்.
ஆகாத நிறம் - இல்லை.
ஆகாத திகதிகள் - இல்லை.

*அடுத்த வாரம் பிறப்பெண் 3, கூட்டெண் 7 பற்றிப் பார்ப்போம்*

## இன்சமாம் உல் ஹக் 10ஆவது இடத்தில்

**இந்தியாவுக்கும்** பாகிஸ்தானுக்குமிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பல சாதனைகள் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வகையில் பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல் - ஹக் தனது டெஸ்ட் போட்டிகளுக்கான 25 ஆவது நூறு ஓட்டங்களைப் பூர்த்தி செய்திருக்கிறார். அது மட்டுமல்ல 25ஆவது நூறு ஓட்டங்களை பூர்த்திசெய்தோர் பட்டியலில் 10 ஆவது இடத்திலும் உள்ளார் என்பது பாராட்டக்கூடிய விடயம்தானே...

முதல் 10 இடங்களில் உள்ள வீரர்களும் அவர்களின் டெஸ்ட் போட்டி விபரங்களும் இதோ:

இப்பட்டியலானது அவரின் சாதனைக்குப் பின் சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டதாகும். 100 ஓட்டங்கள் பெற்றவர்களின் வரிசையிலேயே இவ்வட்டவணை ஏறுவரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது:

| பெயர் | அணி | போ. எ. | ஓட். | சராசரி | உ.ஓ. | 100கள் | 50கள் |
|---|---|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் | இந். | 128 | 10337 | 56.48 | 248 | 35 | 41 |
| சுனில் கவாஸ்கர் | இந். | 125 | 10122 | 51.12 | 236 | 34 | 45 |
| ஸ்டீவ் வோ | அவு. | 168 | 10927 | 51.06 | 200 | 32 | 50 |
| பிரைன் லாரா | மே.இ. | 121 | 11205 | 53.87 | 400 | 31 | 46 |
| டொன் பிரட்மேன் | அவு. | 52 | 6996 | 99.94 | 334 | 29 | 13 |
| ரிக்கி பொண்டிங் | அவு. | 100 | 8253 | 57.71 | 257 | 28 | 32 |
| அலன் போர்டர் | அவு. | 156 | 11174 | 50.56 | 205 | 27 | 63 |
| கரி சேபெர்ஸ் | மே.இ. | 93 | 8032 | 57.78 | 365 | 26 | 30 |
| மத்தியூ ஹைடன் | அவு. | 79 | 6988 | 54.17 | 380 | 25 | 24 |
| இன்சமாம் உல் - ஹக் | பாக். | 107 | 8172 | 51.72 | 329 | 25 | 42 |

## ட்ராவிட், ஷேவாக் இரண்டாம் இடத்தில்

**இந்தியா** பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடந்த வரும் இந்திலையில், இப்போட்டிகளில் இந்திய அணி மிகவும் பிரகாசித்துள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதுமட்டுமல்ல நாமும் சளைத்தவர்கள் அல்லர் என்று பாக்ஸ்தான் அணியும் தமது பங்கிற்கு வெளுத்து வாங்கியிருப்பதும் ஒரு முக்கியமான விடயம் தான். இந்திய அணிக்கு, தமது நாட்டு சொந்த நாட்டு மைதானம் என்றால் பாகிஸ்தானுக்கு அது சொந்த நாடுமில்லை பழக்கப்பட்ட மைதானமுமில்லை. ஆயினும் பாகிஸ்தானியர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அந்த வகையில் முதலாவது டெஸ்ட் போட்டியில் ராகுல் ட்ராவிட்டும் வீரேந்திர ஷேவாக்கும் சேர்ந்து இணைப்பாட்டமாக பெற்றுக் கொண்ட 410 ஓட்டங்கள் டெஸ்ட் போட்டிகளில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் இணைப்பாட்ட வரிசையில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இங்கு முதல் 10 இடங்களையும் அதற்குரிய விடயங்களையும் தருகிறோம்.

| வீரர்கள் | அணி | எ.அணி | ஆண்டு | இடம் | வெற்றி பெ. அணி |
|---|---|---|---|---|---|
| வினோத் மங்காட்-பங்காஜ் றோய் | இந். | நியூ | 1956 | சென்னை | இந். (109 ஓட்) |
| ஷேவாக் - ட்ராவிட் | இந். | பாக். | 2006 | லாகூர் | வெ.தோ.இன்றி |
| ட்யூனர் - ஜாவிஸ் | நியூ. | மே.இ. | 1972 | ஜோர்ஜ் டவுண் | வெ.தோ.இன்றி |
| லாவிரி - சிம்சன் | நியூ. | மே.இ. | 1965 | பிரிஜ் டவுண் | வெ.தோ.இன்றி |
| கிராம் ஸ்மித் - கிப்ஸ் | தெ.ஆ. | பாக். | 2003 | கேப் டவுண் | தெ.ஆ. (142 ஓட்) |
| ஹோட்டன் - வோஸ்புரூக் | இங். | தெ.ஆ. | 1948 | ஜோர்[illegible] | வெ.தோ.இன்றி. |
| கிராம் ஸ்மித் - கிப்ஸ் | தெ.ஆ. | இங். | 2003 | பேர்மிங்டன் | வெ.தோ.இன்றி |
| அத்தபத்து - ஜெயசூரிய | இல. | பாக். | 2000 | கண்டி | வெ.தோ.இன்றி |
| மார்ஷ் டெய்லர் | அவு. | இங். | 1989 | நெட்டிகெம் | அவு. (180 ஓட்) |
| ஹேப்ஸ் - ரோட்ஸ் | இங். | அவு. | 1912 | மெல்போர்ன் | இங் (225 ஓட்) |

# நிக்கோலஸ் கோப்பர்னிக்கஸ் (1473 - 1543 நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**போலந்து** நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த வானியலறிஞர் நிக்கோலஸ் கோப்பர்னிக்கஸ். போலிஷ் மொழியில் இவர் பெயர் மிக்கோலய் கோப்பர்னிக் (Mikolai Kopernik) என்பதாகும். இவர் போலந்தில் விஸ்டுலா ஆற்றின் கரையிலிருந்த டோருன் என்ற நகரில் 1473ஆம் ஆண்டில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தார்.கோப்பர்னிக்கஸ் இளமையில் கிராக்கோ பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். அப்போது அவருக்கு வானியலில் ஆர்வம் தோன்றியது. இவர் தமது 25ஆம் வயது வாக்கில் இத்தாலி சென்று, போலோக்னா, பதுவா பல்கலைக் கழகங்களில் சட்டமும், மருத்துவமும் பயின்றார். பின்னர், ஃபெரரா பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவச் சமயச் சட்டவியலில் 'டாக்டர்' பட்டம் பெற்றார். பின்னர் இவர் ஃபிரான்பர்கு தேவாலயத்தில் ஒரு சமய குருவாகப் பணியில் சேர்ந்தார். அங்கு இவர் தமது வயதுப் பருவத்தின் பெரும்பகுதியைக் கழித்தார். கோப்பர்னிக்கஸ் ஒருபோதும் தொழில்முறை வானியலறிஞராக இருக்கவில்லை. தமது ஓய்வு நேரங்களில் மட்டுமே இவர் வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்த வானியல் பற்றிய தலைசிறந்த நூலையும் இவர் தமது ஓய்வு நேரத்திலேயே எழுதினார்.

இவர் இத்தாலியில் இருந்தபோது, கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாமோஸ் அரிஸ்டார்க்கஸ் என்ற கிரேக்கத் தத்துவஞானி வலியுறுத்திய, "பூமியும் மற்ற கோளங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன" என்ற கொள்கை இவருடைய கவனத்தைக் கவர்ந்தது. சூரிய மையக் கருதுகோள் முற்றிலும் சரியானது எனக் கோப்பர்னிக்கஸ் உறுதியாக நம்பினார். இவர் தமது 40ஆம் வயதில் இது தொடர்பாக தமது கொள்கைகளை விளக்கிக் கையால் எழுதிய துண்டறிக்கைகளைத் தம் நண்பர்களிடம் சுற்றுக்கு அனுப்பினார். பல்லாண்டுக் காலம் தீவிர ஆராய்ச்சிகளும், பரிசோதனைகளும், கணிப்புகளும் செய்து இவர் தமது புகழ் பெற்ற நூலாகிய "விண் மண்டலச் சுழற்சி" (On The Revolution of the Celestial Spheres) என்ற நூலை எழுதினார். இந்நூலில், தமது கோட்பாட்டினை விவரமாக விளக்கி, அதற்கான சான்றுகளையும் விவரித்துள்ளார். கோப்பர்னிக்கஸ் 1533ஆம் ஆண்டில் தமது 60ஆம் வயதில், ரோம் நகரில் ஒரு தொடர் சொற்பொழிவாற்றினார். அந்தச் சொற்பொழிவில், இவர் போப்பாண்டவரின் கண்டனத்திற்கு ஆளாகாத வகையில் தமது கோட்பாட்டின் முதன்மையான அம்சங்களை விளக்கினார்.

எனினும், கோப்பர்னிக்கஸ் தமது நூலை எழுதிவிட்ட பின்னரும்கூட, திருச்சபையின் ஆத்திரத்துக்கு ஆளாகக் கூடும் என்ற அச்சத்தில் அதை வெளியிடுவதற்குத் தயங்கினார். எழுபது வயதை நெருங்கும் வரையில் இவர் அந்நூலை வெளியிடத் துணியவில்லை. இறுதியாகத் துணிவு கொண்டு இவர், தமது நூலை வெளியிட முடிவு செய்தார். ஆனால், 1543ஆம் ஆண்டு மே 24ஆம் திகதி இவர் காலமான அன்றுதான் இந்த நூலின் முதல்படி அச்சகத்திலிருந்து கிடைத்தது.

கோப்பர்னிக்கஸ் தமது நூலில், பூமி தனது அச்சில் சுழல்கிறது என்பதையும், சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது



என்றும் துல்லியமாகக் குறிப்பிட்டிருந்தார். பூமியும், மற்ற கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்பதையும் சரியாகக் கூறியிருந்தார். எனினும், தமக்கு, முற்போந்தவர்களைப் போலவே, இவரும் சூரிய மண்டலத்தின் வடிவளவை மிகவும் குறைவாக மதிப்பிட்டிருந்தார். சுற்றுப் பாதைகள் வட்டக் கோலின் வட்டங்களாக இருப்பதாக இவர் தவறாக நம்பினார். இதனால், இவருடைய கோட்பாடு கணித முறைப்படி சிக்கலாக இருந்ததுடன், துல்லியமாக இல்லாமலும் இருந்தது.

ஆயினும், எதிர்பார்த்தது போலவே இவருடைய நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கோளங்களின் இயக்கம் குறித்து, இன்னும் துல்லியமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வற்கு டைக்கோ பிராஹி (Tycho Brahe) போன்ற வேறுபல தலைசிறந்த வானியலறிஞர்களை இந்நூல் தூண்டியது. டென்மார்க்கைச் சேர்ந்த டைக்கோ பிராஹி தம் ஆராய்ச்சிகளில் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில், ஜோகன்னஸ் கெப்ளர், இறுதியாகக் கோளங்களின் இயக்கம் குறித்துத் துல்லியமான விதிகளை வகுத்தமைக்க முடிந்தது.

கோப்பர்னிக்கஸுக்கு 17ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னதாக சாமோஸ் அரிஸ்டார்க்கஸ் சூரிய மையக் கருதுகோளை வலியுறுத்தியிருந்த போதிலும், அந்தக் கொள்கைகளின் பெரும்பகுதிப் பெருமையைக் கோப்பர்னிக்கஸ் பெற்றார். அரிஸ்டார்க்ஸ் தமது கருதுகோளை, அறிவியல் முறைப்படிப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் போதிய விவரங்களுடன் விளக்கவில்லை. கோப்பர்னிக்கஸ் இந்தக் கருதுகோளுக்கான கணிதமுறைக் கணிப்புகளை விவரமாக வகுத்தமைத்து, அதனை ஒரு பயனுள்ள அறிவியல் கோட்பாடாக உருமாற்றினார். இந்தக் கோட்பாட்டை, ஊகக் கணிப்புகளுக்குப் பயன்படுத்த முடிந்தது. வானியல் உண்மைகளை இதைக் கொண்டு சரி பார்க்க முடிந்தது. பூமிதான் இந்த அகிலத்தின் மையம் என்ற பழைய கோட்பாடு சரியானதுதானா என்று ஒப்புநோக்கிப் பார்க்கவும் முடிந்தது. இந்த அண்டம் பற்றிய தமது கோட்பாட்டில் புரட்சிகரமான மாறுதலை கோப்பர்னிக்கஸ் ஏற்படுத்தினார். அத்துடன் தத்துவக் கண்ணோட்டம் முழுவதையும் அது மாற்றியமைத்தது.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி



### நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

**நாட்டு நடப்பு** ரொம்பவும் மோசமாகிக் கொண்டு வருகுது. தினசரிப் பேப்பர்களைப் பாத்தீங்கள் எண்டால், அங்க கிளைமோர் தாக்குதல் எண்டும், இங்க கைக் குண்டுத் தாக்குதல் எண்டும், இடைக்கிடை ஒண்டு ரெண்டுபேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின மெண்டும் தான் செய்தியாக் கிடக்கு. எனக்கென்னவோ நிலைமைகள் கட்டு மீறிப் போயிட்டதாத்தான் தெரியுது. ஏன் தெரியுமோ, எரிக் சொல்ஹெய்ம் வரப் போறார்; அவர் வந்தவுடன ஒரு திருப்பம் நடக்குமெண்டு சொல்லிக் கொண்டிருந்தவைக்கு எரிக்கரின்ர செய்தி பெருத்த ஏமாற்றமாப் போட்டுதுங்கோ. எரிக் என்ன சொன்னவர் தெரியுமோ? தான் வாறதாலை பெரிசா ஒண்டும் நடக்கப் போறதில்லை எண்டும், தான் நிலைமைகளில் முன்னேற்றங்களைக் கொண்டு வருவதற்காக முயற்சி பண்ணுவன் எண்டும் தான் சொல்லியிருக்கார். உதைத் தானுங்கோ நான் ஆரம்பத்தில இருந்து சொல்லிக் கொண்டு வாறன். அதாகப்பட்டது, குதிரையை குளம் வரைக்கும் கூட்டிக் கொண்டு வரத்தான் முடியும்; குனிஞ்சு குடிக்கிறது குதிரையின்ர வேலை. அதை நாம செய்ய ஏலாதெண்டு. உதைத்தான் இப்ப எரிக்கார் மறுவலமாச் சொல்லுறார். என்ன செய்யிறது, மணி கட்டினவை சொன்னாத்தான் சில பேருக்குக் கேக்குது.

இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கேக்க, எங்கட கூட்டமைப்புக்காரர் பார்ளிமெண்டுக்குள்ள காட்டின கூத்து பெருங் கூத்து. நாட்டில நடக்கிற குழப்பத்தில சனம் பாதிக்கப்படுகுதெண்டது உண்மை தான். அதையில்லையெண்டு ஒருவரும் சொல்ல முடியாது. ஆனால் அதுமட்டுந்தான் நடக்குதெண்டும் சொல்ல ஏலாது. இவை அதுக்காகக் குரல் கொடுக்கினமெண்டால், மறுபக்கத்தாலை படைத்தரப்பு சாகுதே, அதுக்காக சிங்கள எம்.பி.மார் வரிஞ்சு கட்டிக்கொண்டு குதிச்சிச்சின்மெண்டால் பார்ளிமெண்டில என்ன நடக்கும்? கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. இவை பேசினா தமிழ் உணர்வு! அவை பேசினாப் பேரினவாதமா? உப்பிடியே உருப்படியில்லாம பேசிப் பேசித்தானே எங்கட சனத்தின்ர வாழ்க்கையை இருளுக்குள்ள தள்ளி விட்டிருக்கினம். இதுக்குப் பிறகும் திருந்தாமல் இவை இருக்கினமே.

இதுவரைக்கும் எத்தனை கிளைமோர் வெடிச்சிருக்குது. எத்தனை கைக்குண்டு வெடிச்சிருக்குது. அதுகளாலை எத்தனை பேர் படைத்தரப்பிலை இறந்திருக்கினம். எத்தனை பேர் காயப்பட்டிருக்கினம் எண்டதையும் கொஞ்சம் யோசிச்சுப் பார்க்கவெல்லோ வேணும். உந்த பொங்கியெழும் மக்கள் எண்ட பெயராலை புலிகள், படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தவேணுமெண்டால் சனங்களின்ர நடமாட்டம் இல்லாத இடத்தில காட்டில நிண்டு தாக்க வேண்டியதுதானே. உதைப்பத்தி யாராச்சும் புலிகளிட்டை வாய் திறந்திருக்கினமோ? இல்லையே. ஏன் அவையிற்ற கேள்வி கேட்டால், கேட்டவரின்ர கதை, 'கதம் கதம்' தான் எண்டது தெரியும். எங்க திருப்பி அடிக்கமாட்டினமோ, அங்க நிண்டு கொடுக்குக் கட்டிக் கொண்டு கூச்சல் போடுகினம். இவை எம்.பி. எண்டதாலை. தங்களை தாக்கமாட்டினம் எண்ட துணிச்சல். இல்ல, நான் தெரியாமத்தான் கேட்கிறன், எம்.பி.எண்டதாலை இவ்வளவுக்கு குதிச்சு நியாயம் கேக்க முடியுமெண்டால் உந்தச் சொரணையில்லாத சோனகிரியள் இவ்வளவு நாளும் சனத்தின்ர ஒரு நன்மை தீமைக்கு ஏன் ஒண்டும் பேசாம இருந்திச்சினம். இப்ப மட்டும் எங்கை இருந்து வந்தது உந்த வீராப்பு? சனத்துக்காக ஒரு நாளாவது உப்பிடி சபைக்கு நடுவில வந்து சத்தம் போட்டுப் பேசி இருப்பாங்களா? இல்லையே! இப்பக்கூட உண்மையில தமிழ் மக்களின்ர நலனில நிண்டு ஒரு மண்ணும் இவை செய்யயில்லையே. ஒழிஞ்சு நிக்கிற புலிகளைப் படைத்தரப்பு பாதுகாப்புக் காரணங்கள் சொல்லி பிடிக்கிறதையும், தாக்குறதையும் நேரடியா புலிகள் உரிமை கோர முடியாததாலை, இவை பொதுமக்களெண்டு பூசிமெழுகினம்.

சனம் சாகக்கூடாதெண்டால், தாக்குதல் நடத்திறவையை தனியாப் போய் சண்டை புடிங்கோ எண்டு ஒரு ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டியதுதானே. தாங்கள் தான் நடத்தினம் எண்டு என்ன ஒரு ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டியதுதானே. தாங்கள் தான் நடத்தினம் எண்டு என்ன பெயரிலையோ புலிகள் உரிமை கோரினம் தானே? உதாரணத்துக்கு, குதிரைக் கஜேந்திரன் யாழ்ப் பாணத்தில எடுத்ததுக்கெல்லாம் என்ன சொல்லுறார், பொங்கி எழும் மக்கள் படை பதிலடி கொடுக்குமாம். அப்புடியெண்டால் அதில அவரும் ஒரு ஆளா இருக்கணும். இல்லாட்டில் ஒரு பேச்சுக்கு - புலிக்குத் தெரியாத உந்தப் படையைப் பத்தி - உவருக்கு எப்புடித் தெரியும்? இதிலிருந்து என்ன தெரியுது, எல்லாம் ஒரு பம்மாத்துக் கூத்துத் தான். என்ன செய்யிறது, போதாத காலம். அவனவன் ஆடுற கூத்தில சாதாரண சனங்கள் தீக்குளிச்சுக் கொண்டு நிக்குதுகள். இதுக்கு எப்பதான் ஒரு விடிவு வரப் போகுதோ.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(26.01.2006 தொடங்கி 01.02.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மகரம் - சூரியன், புதன். மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். தனு - புதன்.
சந்திரன் விருச்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.)
தொழில் சிறப்பு, பணவரவு, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, அந்நியர் பகை, மனக்கலக்கம், குடும்ப நன்மை, பிள்ளைகளால் கவலை, உத்தியோக சிறப்பு, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி, கௌரவம், குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் நிலை சிறப்பு, உயர்ந்த நிலை, கடன்தொல்லை, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் பயம், பணியாளர் தொல்லை, தூர இடயப் பணம், அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் அலைச்சல், மனக் கஷ்டம், வெளியிடப் பயணம், உயர்ந்த எண்ணம், உறவினர் உபத்திரம், குடும்பப் பாரம், உத்தியோக நன்மை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் பயம், வெளியார் தொல்லை, மனக்குழப்பம், பணக் கஷ்டம், உறவினர் உபத்திரம், குடும்பப் பகை, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கஷ்டம், மனக்கலக்கம், பெரியோர் சகாயம், பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், குடும்பக் கவலை, உறவினர் உபத்திரம், உத்தியோகச் சிரமம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, கடன்சுமை, தேகசுகக் கஷ்டம், குடும்பக் கவலை, உறவினர் உபத்திரம், உத்தியோக பயம், மாணவர் கல்வி, சோம்பல், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் கஷ்டம், செலவு மிகுதி, மனச் சஞ்சலம், உறவினர் உதவி, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் மாற்றம், செலவதிகம், கடின உழைப்பு, வெளியிட வாசம், அந்நியர் சகாயம், குடும்ப சுகம், பிள்ளைகளால் கவலை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் உயர்ச்சி, பெரியோர் சகாயம், தூர இடப்பயணம், குடும்ப மேன்மை, பிள்ளைகளால் சுகம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மந்தம், காரியத் தடை, பணவிரயம், தூர இடப்பயணம், அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி, குடும்பக் கவலை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்....
செய்திகளாய்...
நமது காதுகளில்


கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 106.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

Satellite : HotBird - 6
Location : 13° East
Frequency : 10971MHz
Polarity : Horizontal
Symbol rate : 27.500 Msb
FEC : 3/4
Transponder : 133


## குளிருது குளிருது

**தற்போது** உலக நாடுகளில் காலநிலை மாற்றங்கள் அதிகளவில் நிகழ்ந்து கொண்டு இருப்பதைக் கண்கூடாக பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அந்தவகையில் இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் முன்னெப் போதும் இல்லாத அளவிற்கு தற்போது பனிப்பொழிவு இடம்பெற்று வருவதால், பாதைகள் அனைத்தும் பனியினால் மூடிக் காணப்படுகின்றது. இதனால் வாகனப் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்ட இவ்விடத்தில் நடந்து செல்ல இவர் படும் பாட்டைப் பார்த்தீர்களா? இது இந்திய சினிமா டைரக்டர்களுக்கு நல்ல சந்தர்ப்பம். உடனே சென்று இக்காட்சிகளைப் படமாக்கினால் பனிக் காட்சிகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் செலவு மீதமாகும்.....




## தக தக தங்கம்

**தங்கத்தின்** விலை நாளுக்கு நாள் கிடுகிடுவென்று ஏறிக் கொண்டே போகிறது. போகிற போக்கைப் பார்த்தால் தங்கத்தை கைவிடும் அளவுக்கு கொண்டு போய்விடும்போலிருக்கிறது. இங்குள்ளதும் தங்கக் கட்டிகளே (கண்களை மிகவும் அகல விரிக்காதீர்கள்) உண்மைதான். அமெரிக்காவில் உள்ள நியுமான்ட் தங்கச் சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட தங்கக் கட்டிகளே இவை. முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது ஒரு கட்டி தங்கத்தின் விலை 40 ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளதாம். தங்க விற்பனையாளர்களுக்கு சந்தோஷம், வாங்குபவர்களுக்கு திண்டாட்டம்.



## விருது


**ஆபிரிக்காவில்** மனிதக் குரங்குகளைப் பாதுகாப்பதில் தமது வாழ்நாளை செலவழித்த இங்கிலாந்தைச் சேர்ந்த ஜானே குடால் என்ற பெண்மணிக்கு, உலகில் மிகப் பெரிய விருதான யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதை பெற்றுக் கொள்ள பாரீஸ் வந்த இவர், ஒரு மனிதக் குரங்கு பொம்மையை காட்டி மகிழ்கிறார். தான் கஷ்டப்பட்டது தன் கண்முன்னே இருப்பதை பார்த்தால் எல்லோருக்கும் சந்தோஷம்தானே....




## ஒத்திகை

**ஜப்பான்** பல இயற்கை அனர்த்தங்களைச் சந்தித்த ஒரு நாடாகும். அந்த வகையில் 11 ஆண்டுகளுக்கு முன் கோபெ எனும் இடத்தில் நிகழ்ந்த பாரிய நில நடுக்கத்தை யாரும் மறந்துவிடமுயாது. இவ்வனர்த்தத்தின் போது மீட்பு பணிகள் சரிவர இயங்காததால் அனேமானவர்கள் இறந்ததாகக் கூறப்படுவதால், கடந்த வாரம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் 54 தட்டு மாடிக் கட்டடம் ஒன்றில் நிலநடுக்கம் மற்றும் தீ விபத்து ஏற்பட்டால் எப்படி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று பாரிய ஒத்திகை ஒன்று நடைபெற்றது. முன்னறிவிப்பு இன்றி நடைபெற்ற இவ் ஒத்திகையினால் மக்கள் அல்லோல கல்லோலப் பட்டுப் போனது என்னவோ உண்மைதான்... அங்கு நில நடுக்கத்திற்கு ஒத்திகை இங்கு........?

## பார்க்க மட்டும்










தாயக உறவுகளுடன் மூன்றாவது பிறந்ததினத்தை கொழும்பில் கெண்டாடும் எம் அன்புச் செல்வன் றியான் குட்டிக்கு இனிய வாழ்த்துக்கள்

உச்சி முகர்ந்து முத்தமிட்டு உன் பிஞ்சு முகம் கொஞ்சி அணைத்து அன்பாய் தலைகோதி அள்ளி அணைக்கையிலே! உன்னை விட உயர்ந்தது ஒன்றுமில்லை இவ்வுலகில்.
ஆறாத ஆசையுடன் தீராத பாசமுடன் நான் உனை உணர்வது போல் நீ உனை உணர்ந்திட. அன்பு முத்தங்களுடன் ஆயிரம் ஆயிரம் வாழ்த்துக்கள்.

பாசமுடன் உறவுகள்